# கோகுலம்

GOKULAM


செப்டெம்பர் '97 ரூ. 5/-





# கோகுலம்

செப்டெம்பர் '97
மலர்: 15 இதழ்: 8



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.

## அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

காலாண்டுத் தேர்வு முடிந்திருக்க வேண்டுமே? இந்த ஆண்டுக்கு என்னென்ன பாடங்கள் என்பதை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால், இப்பொழுதே திட்டம் போட்டுப் படிக்கத் தொடங்கி விடலாமே? திட்டம் போடும்போது விளை யாடவும், பத்திரிகை படிக்கவும்கூட நேரம் ஒதுக்க மறந்து விடாதீர்கள்.

போன இதழில் முடிந்த தொடர்கதையின் நாயகன் உதயனைப் பாராட்டி நிறையக் கடிதங்கள் வந்துள்ளன. வசதி இல்லாத மீனவர் குடும்பத்தைச் சேர்ந்த உதயன், படிக்கத் துடித்து அடைக்கலம் கிடைத்த இடத்தில், பாதை தடுமாறி, சிதைந்து போகுமுன் விழித்தெழுந்து, அடைக்கலம் கிடைத்த பழைய இடத்துக்கு தனக்கு தவறான வழி காட்டிய நண்பனுடன் வந்து சேர்ந்து நம்மை அமைதிப் பெருமூச்சு விட வைத்துள்ளான். நம்மால் மறக்க முடியாத பாத்திரம் உதயன்.


புதிய தொடர்கதை இந்த இதழில் தொடங்குகிறது. கதையை எழுதும் வெ. நல்லதம்பி வானொலி அண்ணாவாக இருந்து அனுபவம் பெற்றவர். சிறுவர்க் காகச் சிறுகதைகளும், பாடல்களும் எழுதிப் புகழ்பெற்ற அனுபவமுடைய படைப் பாளர். தொலைக்காட்சி பார்க்கும் நேயர்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவரா இத்தனை அழகாகச் சிறுவர்க்கும் எழுதுகிறார் என்று நம்மை அதிசயிக்க வைக்கப் போகிறார். ஒன்பதாம் வீட்டின் கதாநாயகி சித்ரா உங்கள் உள்ளத்தைத் தொடப் போகிறாள் என்று இப்போதே சொல்லி வைக்கிறேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)




# கோகுலம்

செப்டெம்பர் 1997

## இந்த இதழில்...





## புத்திசாலித் திருடன்!

ஒரு பண்ணையாருக்குச் சொந்தமான தென்னந் தோப்பில் தேங்காய் பறிப்பதற்காகத் திருடன் ஒருவன் வந்தான். மரத்தில் ஏறினான்.

ஆள் அரவம் கேட்டு பண்ணையார் வெளியே வந்தார். திருடனை கண்டு கொண்டார். திருடன் மரத்திலிருந்து மெல்ல இறங்கினான்! "யாரடா நீ? மரத்தில் ஏறி என்ன செய்கிறாய்?" என்று கேட்டார்.

"என் கன்னுக்குட்டிக்கு பசிக்குதுங்க! புல் பறிக்கத்தானுங்க மரத்தில் ஏறினேன்" என்றான் திருடன்.

"யாரை ஏமாற்றுகிறாய்! எங்கேயாவது தென்னை மரத்தில் புல் இருக்குமா?" என்று பண்ணையார் மடக்கினார்.

"அதனாலதானுங்க இறங்கிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறி வேகமாகச் சென்று மறைந்தான். பண்ணையார் திகைப்படைந்து நின்றார்.

கருத்து : நாடோடிக்கதை

ச. செல்வராஜ்,
பதினொன்றாம் வகுப்பு,
செங்குந்தர் மகாஜன மேல் நிலைப்பள்ளி, குருசாமிபாளையம்.




# பிருந்தாவனக் கதையரங்கம்



## வடகத்தின் கதை!

ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அவள் பெயர் மரகதம். அவளுக்கு உறவினர்கள் யாரும் இல்லை. வயலில் வேலை செய்து தன் காலத்தை ஓட்டினாள். அவள் எப்பொழுதும் தான் சாப்பிடும் முன் கொஞ்சம் சாதத்தை எடுத்துக் காகத்திற்கு வைத்து விட்டுப் பிறகுதான் சாப்பிடுவாள். அன்று அவள் வீட்டில் அரிசி இல்லை. அதனால் ஜவ்வரிசி கஞ்சி போட்டுக் குடிக்க நினைத்தாள். அவளுக்கு இனிப்பு என்றாலே பிடிக்காது. அதனால் எலுமிச்சை சாறும் உப்பும் போட்டுக் கலக்கினாள். ஒரு ப்ளாஸ்டிக் காகிதத் தில் ஒரு கரண்டி கஞ்சியை ஊற்றி காகத்திற்காக சுவரின் மேல் வைத்தாள். ஒரு வாரம் ஓடியது. ஆனால் எந்தக் காகமும் அந்த ஜவ்வரிசிக் கஞ்சியைக் குடிக்க வரவில்லை. கிழவி எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் தவறாமல் எண்ணெயை காய்ச்சித் தேய்த்துக் குளிப்பாள். அன்று வெள்ளிக்கிழமை. குளிப்பதற்காக கொல்லையில் உள்ள விறகடுப்பைப் பற்ற வைத்து எண்ணெய்யைக் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அப்பொழுது காற்று பலமாக அடித்தது. காகத்திற்கு என்று எடுத்து வைத்துக் காய்ந்து போன ஜவ்வரிசி பறந்து வந்து எண்ணெயில் விழுந்து, நன்கு பரந்து விசிப் பொரிந்தது. ஒன்றும் புரியாத கிழவி அதை எடுத்துச் சாப்பிட்டாள். மிகவும் ருசியாக இருந்தது. இது தான் ஜவ்வரிசி வடகம் உருவான கதை!



பா. கவிதா, எட்டாம் வகுப்பு, ஷ்ரைன் வேளாங்கன்னி பள்ளி, சென்னை.




அது உயர்நிலைப் பள்ளியின் பத்தாம் வகுப்பு. மாணவர்கள் உற்சாகமாக பேசிக் கொண்டும், சிலர் வருத்தத்துடனும் இருந்தனர். காரணம் அன்று தான் அரையாண்டுத் தேர்விற்கான மதிப்பெண்கள் வந்திருந்தன. ஆனால் பூமா குழப்பத்தில் இருந்தாள். போன தடவை வரை குறைந்த மதிப்பெண்கள் வாங்கிய நம்பி இந்த முறை அதிக மதிப்பெண் பெற்று மூன்றாவது இடத்திற்கு வந்திருந்தான். எப்படி அவனால் முடிந்தது? எங்கு சென்று படிக்கிறான்? கொஞ்ச நாட்களாகவே இந்தச் சந்தேகம் பூமாவுக்கு. இதை இன்றே அவனிடம் கேட்டு விட வேண்டும் எனத் தீர்மானித்தாள்.

பூமா, நம்பி இருவரும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மூன்று கி.மீ. தொலைவிலிருந்து இங்கு வந்து படிப்பவர்கள். ஒரே சமயத்தில் பள்ளி வந்து, சேர்ந்தே திரும்புவார்கள். ஆனால் சில நாட்களாக நம்பி பள்ளிவிட்டவுடன் சீக்கிரமே வீடு சென்று விடுகிறான். வீட்டிலும் மாலை வேளைகளில் இருப்பதில்லை. எங்கு செல்கிறான் என்பதே புதிராக இருந்தது பூமாவுக்கு. எங்காவது சென்று தனிப் பயிற்சி எடுக்கிறானா போன்ற சந்தேகங்கள் அவள் மனத்தில் எழுந்தன.

எனவே அன்று பள்ளி விட்டதும் நம்பிக்காகக் காத்திருந்தாள் பூமா. நண்பர்களுடன் பேசிக் கொண்டே வந்த நம்பி பூமாவைக் கண்டதும் அவள் அருகில் வந்தான்.

பூமா அவனைப் பார்த்து 'என்ன நம்பி'! "மூன்றாவது இடத்தைப் பிடித்து விட்டாயே! எப்படி? எதாவது மாயம் செய்தாயா?" என்று கேட்டாள்.

அதற்கு நம்பி, "நீ ஏன் இப்படிக் கேட்கிறாய் என்று எனக்குத் தெரியும். நான் மாலை வேளைகளில் வீட்டில் இல்லாததால் இந்தச் சந்தேகம் உனக்கு எழுந்திருக்கிறது. உனக்கே தெரியும் இந்த பொதுத் தேர்வில் வாங்கும் மதிப்பெண்தான் நம் எதிர்காலத்தை நிர்ணயிப்பவை என்று. நம் கிராமத்தில் ஒருவர் வீட்டிலும் மின் விளக்கு இல்லை. தெரு விளக்கோ மங்கலாக எப்போதாவது எரியும். கிராமத்திற்கு வர வழியில் ஒரு பங்களா இருக்கில்லே? அங்கு எப்பவும் அதிக வெளிச்சம் இருக்கும். எனவே நான் சீக்கிரம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு புத்தகங்களை எடுத்துக் கொண்டு அங்கு சென்றுவிடுவேன். அங்கு வெளிச்சம் உள்ள இடத்தில் அமர்ந்து 9 மணி வரை படித்து விட்டு வருகிறேன். அந்த பங்களா முதலாளியும் இதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார். இதை மற்றவரிடம் சொன்னால் சிரிப்பார்கள் என்றுதான் ஒருவரிடமும் சொல்லவில்லை. இந்த தடவை அதிக மதிப்பெண் வாங்கியதற்கு அதுதான் காரணம்" என்றான் நம்பி.

கே.எஸ். ஸ்ரீராம் கோபால்,
சென்னை - 33.



# புதையல்

முட்டாள் முத்து வீட்டில் ஒரே எலித் தொல்லை! முத்துவின் அப்பா எலிப் பொறியை வைத்து நான்கு எலிகளைப் பிடித்து, மண்ணுக்குள் புதைக்குமாறு முத்துவிடம் கூறினார்.

எலிகளைப் புதைத்தால் பேயாக மாறி நம்மை துரத்துமோவென்று அஞ்சினான் முட்டாள் முத்து. ஒரு இரும்புப் பெட்டியில் எலிகளைப் போட்டுப் பூட்டி, புதைத்தால் எலிப் பேய்கள் வெளியே வர வாய்ப்பிருக்காது என்று எண்ணினான்.

இரவு பத்து மணி. யாரும் இல்லாத இடத்தில் இரும்புப் பெட்டியைப் புதைத்தான் முட்டாள் முத்து.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த ரவியும் நண்பர்களும் முத்து போனவுடன் அது ஏதோ புதையல் என்று நினைத்து மண்ணைத் தோண்டினர்.

இரும்புப் பெட்டியின் எடை அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. அந்த இடத்தை விட்டு கிளம்பும் போது எங்கிருந்தோ வந்த பேட்டை ரவுடியின் ஆட்கள் பெட்டியையும் சிறுவர்களையும் காரில் ஏற்றிக் கடத்திச் சென்றனர். கார் நள்ளிரவில் காட்டில் ரௌடியின் வீட்டு முன் நின்றது. பெட்டியைப் பார்த்த ரௌடி மகிழ்ச்சியடைந்தான். தலைவன் தனக்கு பாதிப் புதையல் வேண்டுமென்றான். மற்றவர்கள் ஒப்புக் கொள்ள பூட்டு உடைக்கப்பட்டது.

சிறுவர்கள் தங்களுக்கு புதையல் கிடைக்கப் போவதில்லை என்பதை அறிந்து வருத்தத்துடன் நின்றார்கள். பெட்டியை ஒருவன் வேகமாகத் திறக்க நாற்றம் குடலை உருவியது. ரௌடி கூட்டம் ஆத்திர மடைந்து சிறுவர்களை விரட்டியது.

ரவியும் நண்பர்களும் தங்கள் ஆசையின் விளைவால் நடந்த ஏமாற்றத்தை எண்ணி வீடு வந்து சேர்ந்தனர்.

**ப. ராஜேஸ்கண்ணா,**
**வி. மன்னார்பாளையம், சேலம்.**




விக்கிரசிம்மன் தனது நாட்டை சிறப்பாக ஆண்டு வந்தார். எனினும் அந்த நாட்டு மக்கள் ஒற்றுமையின்றி வாழ்ந்து வந்தனர்.

மன்னர் பலமுறை ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்திய போதும் மக்கள் கேட்பதாக இல்லை. நாட்டில் திருடர் பயம் அதிகமாகியது. ஒரு வீட்டில் திருடும் போது பக்கத்து வீட்டார் அறிந்தும் அறியாதது போல் நடந்து கொண்டனர். இதனால் தினமும் ஒரு வீட்டில் திருடு போனது

வழக்கம் போல் அன்றும் திருட வந்தனர். ஆனால் பொருள் எதுவும் எடுக்காமல் ஒரு பெரிய கடிதத்தை சுவரில் ஒட்டிச் சென்றுவிட்டனர்.

மக்கள் அனைவரும் கடிதத்தைப் படித்தார்கள். அதில் நீங்கள் ஒற்றுமையாக இல்லாததால் எங்களால் நிறையத் திருட முடிந்தது. உங்களின் ஒத்துழைப்புக்கு நன்றி என் றிருந்தது.

மக்கள் மன்னரைச் சந்தித்து "அரசே! தாங்கள் ஒற்றுமையாக இருக்குமாறு கூறினீர்கள். நாங்கள் செவி சாய்க்கவில்லை. இப்போது திருடர்களின் செயலால் ஒன்றுபட்டுள்ளோம். இனி எங்களைப் பிரிக்க முடியாது" என்றனர்.

மன்னர் மகிழ்ந்தார். அன்றிரவு திருடுப் போன பொருட்கள் அனைத்தும் அவரவர் வீடு திரும்பியது.

மக்கள் குழப்பமடைந்தனர். மறுநாள் மன்னரைச் சந்தித்து திருடு போன பொருட்கள் திரும்பக் கிடைத்த தகவலைத் தெரிவித்தனர். "திருடனாக வந்தது நானே! எனக்கு உங்களை ஒற்றுமைபடுத்த இதைத் தவிர வேறு வழி தெரியவில்லை" என்றார் மன்னர்.

**எஸ். கணேஷ், சென்னை.**

## கேட்கட்டுமா டாக்டர்?

● என். ராஜி, மேலப்பாதி.

? டாக்டர், தெர்மாமீட்டரை எவ்வளவு நேரம் நாக்கின் அடியில் வைத்து காய்ச்சலைக் கணிக்க வேண்டும்?

! 60 விநாடிகள். அதாவது ஒரு நிமிடம்!

● வே. ராஜாசங்கர், பாளையங்கோட்டை.


? காதில் அழுக்கு சேர என்ன காரணம், டாக்டர்?

! காதின் வெளிச்செவிக் குழலில் - அதுதான்... நீங்கள் காதைக் குடைகிறீர்கள் அல்லவா, அந்தப் பகுதியில்தான் - எண்ணற்ற எண்ணெய்ச் சுரப்பிகள், கொழுப்பு நீர்ச் சுரப்பிகள், மிக நுண்ணிய மயிர்க் கால்கள் உள்ளன. இவை காதை சுத்தப்படுத்துவதற்காக இயற்கை அமைத்துள்ள துப்புரவுப் பணியாளர்கள். எண்ணெய்ச் சுரப்பிகளும் கொழுப்பு நீர்ச் சுரப்பிகளும் மெழுகு போன்ற பிசு, பிசுப்பான திரவமொன்றைச் சுரக்கின்றன. மயிர்க்கால்கள் காற்றில் கலந்து வரும் தூசு மற்றும் அழுக்குகளை வடிகட்டி இந்த திரவத்தில் ஒட்டிக் கொள்ள உதவுகின்றன. இந்த அழுக்கும் திரவமும் சிறிது சிறிதாக உறைந்து கட்டியாகி விடுகின்றன. இதை 'செவி மெழுகு' (EARWAX) என்கிறார்கள் மருத்துவர்கள்; காது அழுக்கு என்கிறார்கள் மற்றவர்கள்.

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்-1.

? டெங்கு ஜுரம் என்பது என்ன டாக்டர்? இது எதனால் பரவுகிறது? என்ன அறிகுறிகள்? சிகிச்சை உண்டா?

! 'டெங்கு வைரஸ்' எனப்படும் வைரஸ் கிருமிகளால் மனிதனுக்கு ஏற்படுகின்ற காய்ச்சலுக்கு 'டெங்குக் காய்ச்சல்' என்று பெயர். இது ஓர் அதிதீவிரத் தொற்றுநோய். 'எய்டஸ் எஜிப்தி' (AEDES AEGYPTI) என்ற கொசுக்கள் ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்கு இந்தக் காய்ச்சலைப் பரப்பி விடும். மிகக் கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, உடம்பை வெட்டிப் போட்ட மாதிரி உடல்வலி, நடக்க முடியாத அளவுக்குக் கால்வலி போன்ற அறிகுறிகளுடன் இது துவங்கும். சில தினங்களில் உடல் முழுவதும் சிவந்த தடிப்புகளும் ரத்தப் புள்ளிகளும் தெரியத் தொடங்கும். இவற்றைத் தொடர்ந்து மூக்கிலிருந்து பல் ஈறுகளிலிருந்து ரத்தம் கசியும். வாந்தி, மலம், சிறுநீர் போன்றவற்றிலும் ரத்தம் வரும். சிலருக்கு மயக்கம் ஏற்பட்டு மரணம் தலை காட்டும். இந்த நோய்க்குக்



# கத்தரிக்காயால் சொறி சிரங்கு வருமா?

## டாக்டர் கு. கணேசன்

குறிப்பிட்ட சிகிச்சை என்று எதுவுமில்லை என்றாலும், காலத்தோடு மருத்துவ ஆலோசனை பெற்றால் காலனின் பிடியிலிருந்து தப்பிக்கலாம்!

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

***? ஆணிக்கால் எவ்வாறு உண்டாகிறது? ஆண், பெண் இருபாலருக்கும் இவை வருமா?***

! ஆணிக்கால் என்பது தோல் வளர்ச்சி நோயாகும். அதிக உராய்வு அல்லது மிதமிஞ்சிய அழுத்தம் காரண மாகப் பாதத் தோல் தடித்து விடும். இதனால் அப் பகுதி யில் உள்ள தோல் மட்டும் பாதத்தின் உட்பக்கமாக வளரும். இப்போது உடல் பளு இதில் அழுத்துவதால் தடித்த தோல் கடினமாகி, கட்டி போல திரண்டு விடும். இது தான் ஆணிக்கால். இது ஆண், பெண் இரு பாலருக்கும் வரலாம். முக்கியமாக சரியான செருப்பு மற்றும் ஷூக்களைப் பயன்படுத்தாமல் கண்டபடி கால்களை அழுத்தி ஊன்றி நடப் பவர்களுக்கு 'கால் ஆணி' ஏற்பட அதிக வாய்ப்புண்டு.



● கே.ஆர். உதயகுமார், சென்னை-1.

***? கத்திரிக்காய் சாப்பிட்டால் சொறி சிரங்கு வருமா?***

! வராது, உதயகுமார்! கத்தரிக்காய்க்கும் சொறி சிரங்குக்கும் தொடர்பில்லை. சொறி சிரங்கு 'சார்க்கோப்டிஸ் ஸ்கேபியை' (SARCOPTES SCABIEI) என்ற ஒட்டுண்ணிக் கிருமிகளால் ஏற்படுகிறது. சிரங்கு உள்ளவர் களோடு நெருங்கிப் பழகுவதாலும், அவர்கள் உபயோகித்த உடை களையும், படுக்கைகளையும் மற்றவர்கள் அப்படியே பயன் படுத்துவதாலும்தான் இந் நோய் பரவுகிறது. உடல் அழுத்தம், சுற்றுப்புற சுகாதாரம் இவற் றைக் கடைப்பிடித்தால் சிரங்குக்கு இடமில்லை!




● என். ராஜா, சென்னை-5.

***? என் நண்பனுக்கு அடிக்கடி காய்ச்சல் வருகிறது. அவ னுக்கு ரத்தப் பரி சோதனை செய்த போது A.S.O.TITRE 'பாசிட்டிவ்' என்று வந்துள்ளது. இது என்ன வியாதி?***

! பரிசோதனையின் முடிவை மட்டும் வைத்துப் பார்க்கும்போது உன் நண் பனுக்கு 'மூட்டழற்சிக் காய்ச்சல்' (RHEUMATIC FEVER) வந்திருக்கலாம் போலத் தெரிகிறது. என் றாலும் ஒரு மருத்துவரின் நேரடிப் பரிசோதனையால் தான் இதை உறுதி செய்ய இயலும். இந்த மூட் டழற்சிக் காய்ச்சலைப் பற்றி வேண்டுமானால் சில செய்திகளைக் கூறி விடு கிறேன். இது முதலில் தொண்டையில் புண் ணாகத் தோன்றி பிறகு கால்மூட்டுகளில் சிதைவை ஏற்படுத்தி காய்ச்சலை விளைவிக்கும். இதை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால், இத யத்தை நிரந்தரமாக பாதித்து விடும். இந்த நோய்க்கு பெனிசிலின் ஊசி மருந்து - குறிப்பாக பெனிடியூர் (PENIDURE) நல்ல குணமளிக்கும். 3 வாரங்களுக்கு ஒருமுறை சுமார் 5 வருடங்களுக்கு இதைப் போட்டுக் கொள்ள வேண்டும். மருத் துவரின் நேரடி மேற் பார்வையில் மட்டுமே இதை உபயோகிக்க வேண் டும். ஆஸ்பரின் மற்றும் பிரிட்னசலோன் மாத்திரை களையும் தகுந்த அளவில் சாப்பிட வேண்டியது முக்கியம்.

# நெகிழ வைத்த நல்லவர்!

சென்னை வானொலி தொலைக்காட்சி சிறுவர் சங்கப் பேரவையின் சிறுவர் நாடக விழா. நடந்த இடம் அடையாறு ஔவை இல்லத்தின் பள்ளி. அதே விழாவில் சிறுவர்க்காக நீண்ட காலமாக எழுதி வரும் அந்த எழுத்தாளரைப் பாராட்டி கேடயம் வழங்கக் கூத்தபிரான் ஏற்பாடு செய்திருந்தார். அந்த எழுத்தாளர் எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால், அவரை அறிமுகப்படுத்தி, கேடயம் வழங்கும் பொறுப்பை என்னை செய்யச் சொன்னார்கள். அந்த எழுத்தாளரும் நானும் ஏறக்குறைய ஒரே ஆண்டில் (1950) எழுத ஆரம்பித்தவர்கள்; நெருங்கிய நல்ல நண்பர்கள். அதனால் விழாவில், அவரது படைப்பாற்றலை விளக்கி, ஆசிரியர்களுக்கும் சிறுவர்களுக்கும் அவரை அறிமுகப்படுத்தி கேடயத்தையும் வழங்கினேன். (20.1.96)



சாதாரணமாக எல்லோருடனும் கலகலப்பாகப் பேசி, இனிமையாகப் பழகும் அந்த எழுத்தாளர் அன்று தன் வழக்கப்படி இல்லை. உடல் நலம் சரியில்லை போல் இருக்கிறது, விழா முடிந்ததும் கேட்டுக் கொள்ளலாம் என்று இருந்தேன். விழா இனிது முடிந்தது. நண்பரை விசாரித்தேன். "தாயார் மறைந்து ஒரு வாரம்தான் ஆகிறது" என்று கண் கலங்கினார். நான் உட்பட, விழாவை ஏற்பாடு செய்தவர்கள் அனைவருக்கும் அதிர்ச்சி. விழாவை ஏற்பாடு செய்த நண்பர்களை ஏமாற்றமடையச் செய்யக் கூடாது என்பதற்காக, சிதம்பரத்திற்கு அருகில் உள்ள கீரப்பாளையத்திலிருந்து, தனது துயரையும் பொருட்படுத்தாது வந்திருக்கிறார்! எல்லோரும் நெகிழ்ந்து போனோம். அந்தப் பெருமைக்கு உரிய இனிய நண்பர், "புவனை" என்று செல்லமாக நண்பர்களால் அழைக்கப்பட்ட புவனை கலைச்செழியன் என்ற கி. கிருஷ்ணமூர்த்தி.

ஆயிரக்கணக்கான மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பைப் பெற்ற புவனை, குழந்தைக் கவிஞரின் "பூஞ்சோலை" காலத்தில் இருந்தே (1950) சிறுவர்க்காக எழுதி வருபவர். படிப்பவர் மனதைப் பண்படுத்த வைக்கும் புதிய புதிய கதைக் களங்களால் சிறுகதைகளும், நாவல்களும், பாடல்களும் ஏராளமாகப் படைத்தவர். தலைமை ஆசிரியராக உயர்ந்து ஓய்வு பெற்ற பிறகும்கூட, தொடர்ந்து எழுதி வந்தார். அவரது மிகச் சிறந்த சிறுகதைகள் பாடல்கள் பலவற்றை வெளியிட்ட பெருமை கோகுலத்திற்கு உண்டு. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பரிசுகளும், தமிழக அரசின் பரிசும் அவருக்குக் கிடைத்தன.

புவனையின் படைப்புகளில் தென்னாற்காடு மாவட்டத்தின் சிறப்பான வளப்பதை உயிர்த்துடிப்புடன் காணலாம். நிகழ்ச்சிக் களங்களை சொற்களால் அப்படியே படம் பிடித்துக் காட்டும் எழுத்தாற்றல் அவருக்கு இருந்தது. "கதையைச் சுருக்கிக் கொள்ளுங்கள். ஆனால் வர்ணனைகளை வெட்டாதீர்கள்" என்று அடிக்கடி எழுதுவார். பிறந்த மண்ணை அந்த அளவுக்கு அவர் நேசித்தார். அதன் பெருமைகளைத் தம் படைப்பில் எழுதினார்.

நாற்பத்தியேழு ஆண்டுகளாகப் பொறுப்புணர்ச்சியுடன் சிறுவர் இலக்கியத்தை, செழுமைப் படுத்திய புவனையின் மறைவு, அவர் குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் மட்டுமல்ல, சிறுவர் இலக்கிய உலகுக்கே பெரும் இழப்பு. சிறுவர் இலக்கிய வரலாற்றில் புவனையின் படைப்புகள் சிறப்பான இடத்தைப் பெற்று நிலைத்திருக்கும் என்பது உறுதி.

— ரே

# கங்காரு சைவமா, அசைவமா?

**எஸ். சுஜாதா**

கோடை விடுமுறையில் சென்னையில் உள்ள மாமா வீட்டிற்கு பிரியாவும் பாலுவும் சென்றிருந்தார்கள். மாமா அலுவலக வேலையாக ஆஸ்திரேலியா சென்றிருந்தார். இன்னும் இரண்டு நாட்களில் திரும்பி விடுவார் என அத்தை சொன்னார்.

மாமாவின் பிள்ளைகளுடன் விளையாடியதில் இருவருக்கும் பொழுது போவதே தெரியவில்லை. இரண்டு நாட்களும் கழிந்தன.

"ஹை! அப்பா வந்தாச்சு" என்று கத்திக் கொண்டே ஓடினாள் மாமாவின் பெண் கீதா. பின்னாடியே அவள் தம்பி பிரசாத்தும் ஓடினான். பிரியாவும் பாலுவும் பின்தொடர்ந்தனர். பிரியாவையும் பாலுவையும் கண்ட மாமா மகிழ்ச்சியில் சேர்த்து அணைத்துக் கொண்டார்.

மாமா எல்லோருக்கும் நிறையப் பரிசுப் பொருட்கள் வாங்கி வந்திருந்தார்.

அழகான வண்ணப் படங்களுடன் கூடிய புத்தகங்கள், பேனா, துணிகள், இனிப்புகள் போன்ற பல பொருட்களை நால்வருக்கும் பகிர்ந்து கொடுத்தார் மாமா.

நால்வரும் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார்கள்.

சிறிது நேரம் கழித்து மாமா பெரிய ஆல்பத்தைக் காட்டினார். அதில் ஆஸ்திரேலியாவில் மாமா சென்ற இடங்கள், அழகு மிகுந்த பனி ஏரிகள், சுற்றுலாத் தலங்கள், கோலா கரடி என்று பார்த்துக் கொண்டு வரும்போது ஒரு போட்டோவைக் கண்டதும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தாள் பிரியா.

"மாமா, இந்த கங்காரு போட்டோ எவ்வளவு அழகு? நாலு கங்காருகள் ஒரே நேரத்துல துள்ளி வருவதைப் பார்க்கும் போது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கு" என்றாள் பிரியா.

"உனக்கு கங்காருன்னா ரொம்பப் பிடிக்குமா?"

"ஆமாம் மாமா! ரொம்பப் பிடிக்கும். நான் இதுவரைக்கும் நேரில் கங்காருவைப் பார்த்தது இல்லை. புத்தகங்களிலேயும், இப்ப வந்த ஒரு சினிமாவிலும்தான் பார்த்திருக்கேன். ஆஸ்திரேலியா போனால்தான் கங்காருவை நேரில் பார்க்க முடியுமாமே?" என ஆதங்கத்துடன் கேட்டாள் பிரியா.

"இல்ல பிரியா! இப்ப வண்டலூர் உயிரியல் பூங்காவிலேயே கங்காரு இருக்கு. ஞாயிற்றுக்கிழமை அங்கே போகலாம், சரியா?"

ஞாயிற்றுக்கிழமை காலை வண்டலூர் உயிரியல் பூங்காவில் எல்லோரும் ஆஜர்!

ஒவ்வொரு இடமாகச் சென்று கங்காருவைத் தேடினாள் பிரியா.

"என்ன பிரியா! சோர்வா வர்றியே!" என்றார் மாமா.

"மாமா நான் பார்க்க வந்த கங்காருவைத் தவிர மற்ற



விலங்குகளை எல்லாம் பார்த்தாச்சு. கங்காருவை இன்னும் காணாமே?'' என்று களைப்புடன் கூறினாள்.

"ஆஸ்திரேலியாவில் மட்டுமே வாழ்கின்ற கங்காருவை உனக்காக வண்டலூர்ல வச்சிருக்காங்க. இவ்வளவு கூடக் கஷ்டப்படாமல் உன் கங்காருவைப் பார்க்க முடியுமா?" என்றார் அத்தை.

"மாமா கங்காருவை நேரில் பார்க்கிற வரைக்கும், ஆஸ்திரேலியாவில் நீங்க பார்த்த கங்காரு பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?'' என்றாள் ஆர்வத்துடன்.

"ஆண் கங்காருகள் சிவப்பு கலந்த வெண்மையான ரோமங்களுடன் இருக்கும். நீலம் கலந்த சாம்பல் நிறத்தில் பெண் கங்காருகள்'' – விளக்கத் தொடங்கினார் மாமா.

'உம்' போட்டுக் கொண்டே வந்த பிரியா, திடீரென்று, "ஆமாம், மாமா கங்காரு சைவமா, அசைவமா?" என்று கேட்டாள்.

"உன்னை மாதிரியே இதுவும் சைவம் தான். இலை, புல், குச்சித் தாவரங்களை மட்டுமே உண்டு உயிர் வாழும்."

"அப்பா, நம்ம ஊர் மான் கூட்டம் மாதிரியே இதுவும் கூட்டமாகவே இருக்கிறாற்போல படங்களில் பார்த்திருக்கேனே?" என்றாள் கீதா.

"ஆமாம். கங்காருகள் சின்னச் சின்ன



குழுக்களாகவே வாழ்கின்றன. குழுவில் ஒரு ஆண் கங்காரு ஆறு அல்லது ஏழு பெண் கங்காருகள் சில குட்டிகள் இருக்கும்'' - மாமா முடித்தார்.

''ஏம்ப்பா! கங்காருக்கு வயிற்றுல பையிருக்குமாமே? நீங்க பார்த்திங்களா?'' என்றான் பிரசாத்.

''வயிற்றுப் பையில் குட்டியுடன் பார்த்தேன்'' - மாமா.

"அந்தப் பை, குட்டியைத் தாங்குகிற அளவுக்கு வலிமையா இருக்குமா?" என்றாள் பிரியா.

''கங்காரு குட்டி பிறக்கும்போது மிக மிகச் சிறியதாகத்தான் இருக்கும். அதனால்தான் பிறந்தவுடன் தாயின் வயிற்றுப் பையில் ஒரு வருடம் வரை வளர்கிறது.''



''என்ன சொல் நீங்க மாமா ஒரு வருடமா!'' என்று வியந்தபடியே கேட்டாள் பிரியா.

"ஆமாம். பிறந்த மூன்று மாதம் வரை கண் திறக்காமல், முடி முளைக்காமல், தடவித் தடவி தாயின் மடியைத் தேடி பாலை மட்டும் குடித்துக் கொண்டிருக்கும்."

"அப்ப எப்போதான் கண் திறக்கும்?" என்று கேட்டான் பாலு.

"என்ன பாலு உனக்கும் ஆர்வம் வந்துடுச்சா? பிறந்த ஆறு மாதம் கழித்துத்தான் முதல் முறையாக கண்ணைத் திறந்து, தலையை மட்டும் வெளியே நீட்டி புல்லை சாப்பிடத் துவங்குகிறது."

''அம்மாவோட பையை விட்டு இறங்கவே இறங்காதா?'' என்றான் பிரசாத்.

"இருங்க, பேசிக்கிட்டே இவ்வளவு தூரம் நடந்து வந்ததில் களைப்பாயிருக்குது. கொஞ்ச நேரம் மரத்தடியில் உட்கார்ந்து தண்ணீர் குடிச்சிட்டுப் போகலாம்'' என்றார் அத்தை. அனைவரும் அமர்ந்து வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கும்போது, "நான் கேட்ட கேள்விக்கு பதிலே சொல்லலையே?" என்றான் பிரசாத்.

"பையில் இருந்து எப்ப வெளியே வரும்னுதானே கேட்டே? எட்டாவது மாதத்தில் வெளிவர ஆரம்பிச்சாலும் சிறிது நேரத்திலேயே மறுபடியும் பையில் போய் உட்கார்ந்து கொண்டு விடும். பதினோராவது மாதத்திலேதான் நிரந்தரமாக நிலத்துல வாழ ஆரம்பிக்கும்."

"அம்மா கங்காரு ரொம்பப் பொறுமைசாலிதான்" என்றாள் பிரியா.

"பார்த்தா பெரிதாக இருந்தாலும், கங்காருகள் மிகவும் அமைதியான விலங்குகள் தெரியுமா?" என்றார் மாமா.

"ஆமாம்... குட்டியைப் பையில் வச்சுக்கிட்டு இதனால் எப்படி வேகமா ஓட முடியுது?" - கேட்டது கீதா.

"இதன் உடல் அமைப்பே தாவித் தாவி ஓட ஏற்றவாறு அமைந்திருக்கு. உறுதியான நீளமான பின்னங்கால்கள் முன்னோக்கித் தாவிச் செல்ல உதவுது" என்றார்.

"அப்பாடா! கங்காரு இருக்கிற இடம் வந்தாச்சு! இதைக் கடைசியில் வச்சிருக்காங்க" என்றார் அத்தை.

கங்காருவைப் பார்க்க ஓடிப் போய்க் கூண்டின் அருகில் நின்றாள் பிரியா.

"மாமா நீங்க சொன்னது சரிதான்! இதுக்கு மேல்தாடையில் மட்டும் கூர்மையான பற்கள் இருக்கு!"

"அப்படிக் கூர்மையா இருக்குறதுனால தான் இதனால் உணவை அரைத்து விழுங்க முடியது" - மாமா.

"பிரியா நாம்ப இங்கே விரும்புகிற அளவுக்கு, ஆஸ்திரேலியாவில் கங்காருவை பெரிதும் விரும்புவதில்லை மக்கள்!"

"பையில குட்டியோட எத்தனை அழகா இருக்கு! இதையா விரும்ப மாட்டாங்க!"

"அழகாக இருந்தாலும் கங்காருகள் விவசாயிகளுக்கு மிகுந்த துன்பம் விளைவிக்கின்றன. ரொம்ப உயரத்திற்கு நிலத்தைச் சுற்றிக் கம்பி வலை போட்டாலும் கூட, அதையும் தாண்டிக் குதித்து பயிர்களை நாசம் செய்கின்றன," என்றார் மாமா.

"அப்படின்னா கங்காரு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தறாங்களா அப்பா?" என்றாள் கீதா.

"நீ சொல்றது ரொம்ப சரி. கங்காரு பெருக்கத்தைக் கட்டுப்படுத்திட்டாங்க. இப்ப இவைகளின் எண்ணிக்கையை அரசாங்கம் ஒரு கட்டுப்பாட்டிலேயே வைச்சிருக்கு," என்றார் மாமா.

அங்க பாருங்க மாமா, கங்காருகள் சண்டை போடுவதை!"

"ஆமாம். பெண் கங்காருக்காக இந்த மாதிரிச் சண்டையை அடிக்கடி ஆண் கங்காருகள் போடும்."

"நேரம் ஆகிவிட்டதுன்னு காவலாளி நம்மோடு சண்டை போடறதுக்கு முன்னால் நாம் வெளியே போயிடலாம்" என்று அத்தை சொன்னதும் சிரித்தபடியே எல்லோரும் கிளம்பினர்.

## அறிவியல் உண்மைகள்

* கங்காரு MARSUPIAL இனத்தைச் சார்ந்தது.

* ஆண் கங்காரு RED FLIER என்றும் பெண் கங்காரு BLUE FLIER என்றும் அழைக்கப்படுகிறது.

* ஆஸ்திரேலியாவில் மட்டுமே இவை காணப்படுகின்றன.

* இவை தாவர உண்ணிகள்.

* பிறந்ததும் 3 செ.மீ., அளவே இருக்கும். இவை இரண்டு மீட்டர் உயரம் வரை வளரக் கூடியவை!

* பகல் பொழுதில் ஓய்வெடுத்து விட்டு, இரவு நேரங்களில் உணவு தேடி அலையும்.

* கங்காருக் குட்டிகள் தாயின் வயிற்றுப் பையில்தான் முழு வளர்ச்சியடைகின்றன.

* பையில் உள்ள வெதுவெதுப்பான சூழ்நிலையையே குட்டிகள் பெரிதும் விரும்புகின்றன.

* பிறந்த ஆறு மாதம் வரை தாய்ப் பாலே உணவு.

* பிறந்த பதினோராவது மாதத்தில்தான் தாயின் வயிற்றுப் பையிலிருந்து வெளிவந்து நிலத்தில் வாழ ஆரம்பிக்கின்றன.

* முன்னங்கால்கள் இரண்டும் குட்டையானவை.

* ஆபத்து ஏற்பட்டால் அமைதியாகவும், வேகமாகவும் தாவிக் குதித்துத் தப்பி விடுகின்றன.

* இவை மணிக்கு 56 கிலோ மீட்டர் தொலைவு தாவித் தாவியே கடக்கக் கூடியவை.

* கங்காருவின் வால் ஐந்தாவது காலாகச் செயல்படுகிறது. தாவித் தாவி ஓடும்போது கங்காருவின் வால்தான் உடலைச் சமநிலையில் வைத்து, விழுந்து விடாமல் காக்கின்றது.

* பின்னங்கால்களையும், வாலையும் மடித்து அதன் மேல் அமர்ந்து கொள்ளும்.

* காங்காருகளில் நூற்றி இருபது வகைகள்.

* கங்காரு ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்கு. வீட்டிலும் வளர்க்கக்கூடிய சாதுப் பிராணி.

* பகை விலங்குகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள கடுமையாகப் போரிடும்.

* ஆயுட்காலம் காடுகளில் 12 முதல் 18 ஆண்டுகள்.



# நண்பரையா ஏமாற்றுவேன்?

ஆர். பொன்னம்மாள்

முத்தப்பர் பெரிய வணிகர். கடல் வியாபாரத்தில் மிகவும் கெட்டிக்காரர். ஒருமுறை அபூர்வமான நூறு முத்துக்கள் அவருக்குக் கிடைத்தன. அதில் ஐம்பது முத்துக்களை எடுத்துத் தன் அருமை மகளுக்கு மாலை கட்டச் சொல்லிப் பொற்கொல்லரிடம் கொடுத்தார். அந்தப் பொற்கொல்லரும் கூட முத்தப்பரின் அருமை நண்பர்தான். பெயர் ஆடலழகர்.

மறுநாளே வியாபாரத்திற்காக வெளிநாடு சென்று விட்டார் முத்தப்பர்.

ஒன்று போல் உருண்டையாயிருந்த அந்த ஒளி வீசிய அழகு முத்துக்கள் பொற்கொல்லரின் மனத்தில் பேராசையைத் தோற்றுவித்தது.

முத்தப்பர் 'முத்துக்களைக் கொடுத்தது வீட்டில் எவருக்கும் தெரியாது; திடீரென்று மகளிடம் சொல்லி எடுத்துக் காட்டித் திகைக்க வைக்க வேண்டும்' என்று இருந்தார். மறுநாளே அவர் கப்பலேறி விட்டதால் அம்முத்துக்களைத் தாமே அபகரிக்க எண்ணினார் ஆடலழகர்.

ஓர் ஆண்டு கழிந்து, முத்தப்பர் திரும்பி வந்தார். ஆடலழகரின் வீடு சென்று முத்து மாலை தயாரா என்று கேட்டார்.

"முத்துமாலையா? கட்டக் கொடுத்தாயா? யாரிடம்? எப்போது?" என்று துணிந்து பொய் கூறிக் கையை விரித்து விட்டார் ஆடலழகர்.

முத்தப்பர் திடுக்கிட்டார். நண்பர் வேடிக்கை செய்கிறார் என்று முதலில் நினைத்தார். ஆடலழகர் திரும்பத் திரும்பச் சொன்னதையே சொல்லவும் மனம் கலங்கிப் போனார். மன்னரிடம்

சென்று நடந்ததை உள்ளபடி முறையிட்டார்.

மன்னர் ஆடலழகரை அழைத்து விசாரித்தார்.

''அரசே, முத்தப்பர் மிக நல்லவர் தான். ஆனால் பெருத்த ஞாபகமறதி உள்ளவர். எவரிடமோ முத்துக்களைக் கொடுத்து விட்டு என்னிடம் கொடுத்ததாகச் சாதிக்கிறார். என் அருமை நண்பருக்கா நான் துரோகம் செய்வேன்?'' என்று கண்ணீர் வடித்தார் ஆடலழகர்.

ஆடலழகரை மன்னர் அனுப்பி விட்டார். ஆடலழகர் சென்றதும் முத்தப்பரை அருகே அழைத்த மன்னர், ''வெகு சுலமபமாய் வழக்கை முடித்து விட்டேனே என்றெண்ணாதீர்கள். உம்முடைய முத்துக்களை பொற்கொல்லர் களவாடியிருப்பின் நிச்சயம் அவை உங்களுக்கே திரும்பக் கிடைக்கும். ஆனால் கொஞ்சம் கால தாமதமாகும். பொற்கொல்லருக்குக் கொடுத்தது போக பாக்கி முத்து இருக்கிறதல்லவா? அதில் இருபத்தேழையும், அதே போல் கற்பூரத்தால் செய்த முத்துக்கள் மூன்றையும் கொண்டு வாருங்கள். இதை எவரிடமும் சொல்லக் கூடாது'' என இரகசியமாகச் சொன்னார்.

முத்தப்பர் மகிழ்ச்சியோடு சம்மதித்தார். இரண்டு நாளில் மன்னர் சொன்னபடி முத்துக்களையும், கற்பூரக் கட்டி முத்துக்களையும் கொண்டு வந்து மன்னரிடம் சேர்ப்பித்தார்.

ஆடலழகரை அழைத்து வரச் செய்தார் மன்னர். வந்ததும் அவரிடம் ''உங்களது வேலைப்பாட்டுத் திறன் ரொம்ப நுட்பமாயிருக்குமாமே....!'' என்று சிலாகித்தார்.

''எல்லாம் உங்கள் தயவு'' என்று பொற்கொல்லர் பணிவுடன் சொல்ல ''ராணிக்கு ஒரு நவரத்தின ஹாரம் செய்ய வேண்டும். ரொம்ப அழகாயிருக்க வேண்டும்'' என்று மன்னர் நவரத்தினங்களைக் கொடுத்தார். எண்ணி வாங்கிக் கொண்டு சென்ற ஆடலழகர் ஒரு மாதத்தில் ஹாரத்தை முடித்துக் கொணர்ந்தார். ஹாரத்தின் நேர்த்தி அனைவரையும் வசிகரித்தது. அரசர் தாராளமாகவே வெகுமதியளித்தார்.

தொடர்ந்து அரசர் வேலை கொடுத்துக் கொண்டே இருந்தார். ஆடலழகர் பழைய நினைவுகளை மறந்தே போன நிலையில் கற்பூர முத்தோடு சேர்த்து முத்தப்பர் நந்த



இருபத்தேழு முத்துக்களையும், முப்பது நற்பவழங்களையும் ஒரு பேழையில் வைத்து ஆடலழகரிடம் கொடுத்தார் அரசர். முத்தும், பவழமும் இணைந்த மாலை ஒன்றைக் கட்டித் தரும்படி கூறினார். நற்பவழத்தோடு வைக்கப்படும் கற்பூரம் பத்து நாட்களில் ஆவியாய்க் கரைந்து விடும்.

அதோடு வைரங்களையும் கொடுத்து வளையல் செய்து கொண்டு வரும்படி சொன்னார்.

‘‘ஆடலழகரே முத்தையும் பவழத்தையும் நன்றாக எண்ணிக் கொள்ளுங்கள்'' என்றார் அரசர் மறக்காமல்.



வைரத்தையும், நவரத்தினங்களையும் தன்னை நம்பிக் கொடுக்கும் அரசர் முன்னால் முத்தைக் கொட்டி எண்ணுவது தரக்குறைவான செயல் என்பதால் பேழையைத் திறந்து கண்ணாலேயே மின்னல் வேகத்தில் எண்ணி விட்டார் பொற்கொல்லர். அரசரும் இதைக் கவனித்தார்.

“முதலில் வைர வளையல் செய்து விட்டு மாலை வேலையை ஆரம்பியுங்கள்'' என்றாள் அரசி. அரசரும் அதை உறுதிப்படுத்தினார்.

வைர வளையல் செய்து முடிக்க இருபது நாட்களாயின. ஆடலழகர் அதை அரசியிடம் கொடுத்துப் பாராட்டும், வெகுமதியும் பெற்றுக் கொண்டு வந்தார். வீட்டுக்கு வந்ததும் முத்துப் பேழையைத் திறந்தார். முத்துக்களை எண்ணியவர் திடுக்கிட்டார். முப்பது பவழங்களுடன் இருபத்தேழு முத்துக்கள் மட்டுமே இருந்தன!

வீட்டினரை விசாரித்தார். அரசரிடம் போய்க் காணவில்லை என்று சொன்னால் தண்டனை கிடைக்கும். அதோடு தொடர்ந்து கிடைத்து வரும் வேலைகளும் நின்று போய் விடுமே என்று யோசித்தார்.

முத்தப்பர் தந்து, தான் அபகரித்துக் கொண்ட முத்துக்களை எடுத்துப் பார்த்தார். என்ன ஆச்சர்யம்! நூறு சதவிகிதம் ஒன்று போல் இருந்தன! அதிலிருந்து மூன்று முத்துக்களை மட்டும் எடுத்து அழகுற மாலையை கட்டி விட்டார். சிவப்பும், வெண்மையுமாய் மாலை கண்ணைப் பறித்தது.

கொற்றவனிடம் மாலையைக் கொடுத்தார். மறுநாள் சபையில் பொற்கொல்லரைச் சிறப்பாகக் கௌரவிப்பதாகச் சொல்லி அனுப்பி விட்




"ஒரு ரூபாய் கொடுத்தால் நம்ம தாத்தாவை பாக்கலாம்..."

"அப்படியா...! எந்தத் தாத்தாவை...?"

"ஆமாம். நம்ம காந்தித் தாத்தாவைத்தான் ஒரு ரூபாய் தபால் தலை வாங்கினால் அதுல அவரைப் பார்க்கலாம்."


- கி. மனோகரன்



''சே! பரீட்சை முடியற வரைக்கும் ராத்திரி 8 மணிக்கெல்லாம் தூக்கம் கண்ணை சுழட்டிச்சுடா... இப்ப பாரு, தூக்கமே வர மாட்டேங்குது.''

''ரிசல்ட் என்ன ஆகுமோங்கிற கவலை இருக்கே!''

– சீர்காழி வி. ரேவதி



"ஞாயிற்றுக்கிழமை கிடைக்காத பால் எது?"

"புரியலியே?"

"த'பால்'தான்!

- ஆர். பிரகாசம்.

டார் அரசர்.

மறுநாள், அரசவை. மந்திரிகள், சேனைத் தலைவர்கள், புலவர்கள் என சபை நிறைந்திருந்தது.

ஆடலழகர் வந்தார்.

அரசன், ''வாருங்கள் பொற்கொல்லரே! உங்களுக்கு நான் கொடுத்தது இருபத்தேழு முத்துக்களும், முப்பது பவழங்களும், மூன்று கற்பூரக் கட்டிகளுமே! பவழத்துடன் வைக்கப்பட்ட கற்பூரக் கட்டிகள் கரைந்து போயிருக்கும். 'இதே போல் மூன்று முத்துக்கள் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன' என்பதை சபையறியச் சொன்னால் வெகுமதி பெற்றுச் செல்லலாம். மௌனமாயிருக்கலாம் என திட்டம் போட்டால், கக்க தண்டனை பெறுவீர்கள்! நீங்கள் இங்கிருக்கும் போது உங்களது வீடு சோதனை போடப்பட்டிருக்கும். சபையின் நேரம் வீணானால் தண்டனை அதிகரிக்கப்படும்'' எனக் கடுமையாகக் கூறினார் மன்னர்.

ஆடலழகருக்கு ஒரு நொடியில் உண்மை விளங்கிவிட்டது. நீதியை நிலை நாட்ட அரசர் விரித்த வலையில் நன்றாகச் சிக்கிக் கொண்டோம் என்பதைப் புரிந்து கொண்டார். நடந்ததையெல்லாம் மறைக்காது கூறினார். மறைவிடத்திலிருந்து வெளிவந்த முத்தப்பர் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினார். மன்னரிடமும், சபையறிய மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

வேந்தன் எல்லா முத்துக்களையும் முத்தப்பரிடம் கொடுத்து விட உத்தரவிட்டார். அதோடு முத்தப்பருக்குப் பவழமும், முத்தும் வைத்துக் கட்டிய மாலையைப் பரிசாக அளித்தார். பொற்கொல்லருக்கு ஆயிரம் வெள்ளி அபராதமும், ஒரு வருஷ சிறை தண்டனையும் அளித்தார்.

மன்னரின் கூரிய மதியூகத்தையும், பொறுமையான நடவடிக்கைகளையும் சபையினரும், முத்தப்பரும் பாராட்டினர்.

# ஆயிரம் ரூபாய்க்கு!

**காட்சி 1**

ஷர்மி வீடு

**திலகா :** ஷர்மி! ஷர்மி!

**ஷர்மி :** யாரு? ... வா திலகா! வா ரவி! உட்காருங்க!

**திலகா:** ஷர்மி! ஓவியப் போட்டியிலே முதல் பரிசு வாங்கின உனக்கு வாழ்த்துகள்!

**ரவி :** வாழ்த்துகள் அக்கா!


**ஷர்மி:** நன்றி! இதோ இதுதான் எனக்குக் கிடைச்ச பரிசு!

**திலகா:** ஹா... ரொம்ப ரொம்ப அழகாயிருக்கு ஷர்மி! யானைத் தந்தத்தாலேயே தான் செய்திருக்காங்க! குட்டி தாஜ்மகாலாயிருந்தாலும் எவ்வளவு அழகா இருக்கு! இந்தா ரவி, நீயும் கையில வாங்கிப் பார்!

**ஷர்மி:** ரவி! நீ கூட உங்க பள்ளிக்கூடத்துலே நடத்தின ஓவியப் போட்டியிலே முதல் பரிசு வாங்கினேயாமே!

**ரவி:** ஆமாம் பெரிய பரிசு?

**ஷர்மி:** என்ன ரவி அலுத்துக்கறே?



**ரவி:** பின்னே என்ன? உங்க 'ஸ்கூல்'லே விலையுயர்ந்த இந்தத் தாஜ் மஹாலை முதல் பரிசா கொடுத்திருக்காங்க!... ஆனா எங்க 'ஸ்கூல்'லே போயும் போயும் இந்த மூணு புத்தகங்களை முதல் பரிசா கொடுத்திருக்காங்க! இன்னிக்குத்தான் எங்களுக்கும் பரிசளிப்பு விழா நடந்தது.

**ஷர்மி:** அடேடே! புத்தகங்களா கொடுத்தாங்க...! என்னென்ன புத்தகம்? காட்டு பார்க்கலாம்! "இளமைப் பருவம் இனிய செல்வம்!" "நமது தாய்நாடு!" "ஓவியக் கலையின் ஒப்பற்ற சிறப்பு!" சபாஷ்! எல்லாமே அருமையான புத்தகங்கள்! பின்னே ஏன் அலுத்துக்கறே?

**ரவி:** இந்தப் புத்தகங்களை நான் எங்கே படிக்கப் போறேன்...? இதுக்குப் பதிலா பணமா கொடுத்திருந்தாகூட சந்தோஷப்பட்டிருப்பேன்!

**ஷர்மி:** ரவி! நீ நினைக்கிறது தப்பு! புத்தகங்களோட பெருமையே தனி! இந்தப் புத்தகங்கள்தான் நம்மோட எதிர்காலத்தை சிறப்பா உருவாக்கும்! நமக்குப் பரிசா கிடைக்கிற எந்தப் பொருளுக்கும் தனிப் பெருமை உண்டுன்னு எங்கப்பா அடிக்கடி சொல்வார். கடையிலே இருபத்தைஞ்சு ரூபா கொடுத்து வாங்கற பேனாவைவிட, நாலு பேருக்கு முன்னால நாம பரிசா வாங்கற ஒரு ரூபாய் பொருளுக்குத்தான் பல மடங்கு மதிப்பு! ரவி! இந்தப் புத்தகங்களை நீ படிச்சப்புறம் எனக்கும் படிக்கக் கொடுக்கறியா?

**ரவி:** முதல்லே நான் படிக்க முயற்சிக்கிறேன்...

**ஷர்மி:** திலகா, உன் தம்பி ரவி என்ன இப்படி பேசறான்?... புத்தகங்களைப் படிச்சுப் பாக்கச் சொல்லு?

**திலகா:** சரி, ஷர்மி! வரேன்!

**காட்சி 2**

ஷர்மி வீடு

**ரவி:** ஷர்மி! ஷர்மி!

**ஷர்மி:** வா ரவி! என்ன பரிசுப் புத்தகங்களையெல்லாம் தூக்கிக்கிட்டு வந்திருக்கே? ரெண்டு நாளிலே எல்லாத்தையும் படிச்சு முடிச்சுட்டியா?

**ரவி:** இல்லை...

**ஷர்மி:** பின்னே எதுக்கு வந்திருக்கே?

**எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்**

**ரவி:** இந்தப் புத்தகங்களை நீ படிக்கணும்னு ஆசைப்பட்டே இல்லே?

**ஷர்மி:** ஆமாம்!

**ரவி:** அப்போ இதை நீயே விலைக்கு வாங்கிக்கறியா? பாதி விலைக்குத் தரேன்!

**ஷர்மி:** என்ன சொல்றே ரவி!... இந்த பரிசுப் புத்தகங்களை விலைக்கு விற்கப் போறியா?

**ரவி:** ஆமாம் ஷர்மி! இந்தப் புத்தகங்கள் எனக்கு வேண்டாம்! இதை வித்தா குறைஞ்சது நாற்பது ரூபாய் கிடைக்கும். அதுலே ஜாலியா ஒரு வாரத்துக்குப் பீச்சுக்குப் போய் மசாலா சுண்டல், மிளகாய் பஜ்ஜி, மிளகு வடை, ஐஸ்க்ரீம் - இப்படி நாளுக்கொன்னா வாங்கிச் சாப்பிடலாம்!

**ஷர்மி:** நிறுத்து! ரவி! இப்படியெல்லாம் பேசாதே! பரிசுங்கறது நமது திறமைக்குக் கிடைக்கிற அடையாளப் பொருள். அதைப் பார்த்து பாராட்டறபோது நமக்கு எவ்வளவு பெருமையாயிருக்கும் தெரியுமா? நம்ம திறமையை வளர்த்துக்க அந்தப் பாராட்டு உதவியாயிருக்கும்! அதுவும் 'ஓவியக் கலையின் ஒப்பற்ற சிறப்பு"ங்கற இந்த புத்தகத்தை, ஆறாவது பதிப்பா வெளியிட்டிருக்காங்க பாத்தியா?

**ரவி:** சரி, நீ நிச்சயமா வாங்கிக்கப் போறதில்லை. நான் இப்பவே மணியோட 'பிளாட்பார' புத்தகக் கடைக்குப் போறேன்!...

**ஷர்மி:** ஏய் ரவி! ரவி! நில்லு! ... சொன்னதைக் கேக்காம ஓடிட்டானே! என்ன செய்யலாம்? - (யோசித்து)ம்... அதுதான் சரி!

**காட்சி 3**

ரவி வீடு

**ஷர்மி:** ரவி! ரவி!

**ரவி:** வா ஷர்மி!... இதோ பார், இப்போ நான் ஜாலியா ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக்கிட்டிருக்கேன். நீகூட உன் பரிசை வித்து பணமாக்கினா என்னைப் போல ஜாலியா...

**ஷர்மி:** ரவி! மொதல்லே நீ இந்த செய்தித்தாள்ளே, இந்த இடத்தைப் படிச்சுப் பாரு!

**ரவி:** என்ன இருக்கு இதுலே? அடேடே! புதுசா சினிமா வந்திருக்கு... என்னது "டமால்-டுமீல் டக்கர் ராஜா" - அடேடே நல்லாயிருக்கும் போல இருக்கே!

**ஷர்மி:** ஐய்யய்யோ நான் அதைச் சொல்லலே! இதோ இதைப்படி!

**ரவி:** இதுவா (படிக்கிறான்) "பரிசு ஆயிரம்" நேதாஜி பதிப்பகம் வெளியிட்டுள்ள "ஓவியக் கலையின் ஒப்பற்ற சிறப்பு" என்ற புத்தகப் பிரதி உங்களிடம் இருந்தால், உடனே கீழ்க்கண்ட முகவரியில் மேற்கண்ட புத்தகத்துடன் வந்து எங்களைச் சந்தியுங்கள். சமீபத்தில் நடந்த தீ விபத்தில் மேற்படி புத்தகம், ஒரு பிரதிகூட மீதமின்றி அழிந்து விட்டது. உடனடியாக முதல் பிரதியை கொண்டு வந்து கொடுப்பவருக்கு ரூ. 1000/- அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். புத்தகம் மறுபடி அச்சானதும் பத்து பிரதிகள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். விலாசம் "நேதாஜி பதிப்பகம், நேதாஜி தெரு, சென்னை - 108" இப்படிக்கு நிர்வாகி. - ஷர்மி! இந்தப் புத்தகம்தானே எனக்கு பரிசா கிடைச்சது?

**ஷர்மி :** அதிலென்ன சந்தேகம்? ஆனா இப்போ அந்தப் புத்தகம் உங்கிட்டே இல்லையே? ம்! ஆயிரம் ரூபாயைக் கோட்டை விட்டுட்டியே!



**ரவி:** ம்! விட மாட்டேனே! இப்பவே மணி கடைக்குப் போய் எப்படியாவது அந்தப் புத்தகத்தைத் தேடிக் கண்டு பிடிச்சுக் கொண்டு வந்துடறேன்.

## காட்சி 4

இடம்: நடைபாதைப் புத்தகக் கடை

**ரவி:** மணி உங்கிட்டே நாலு நாள் முன்னால வித்த புத்தகங்களை வாங்கிக்கிட்டுப் போகத்தான் வந்திருக்கேன். அஞ்சு ரூபா அதிகமா போட்டு பணத்தை திருப்பிக் கொடுத்துடறேன் மணி!

**மணி:** என்ன ரவி, இவ்வளவு லேட்டா வந்து கேட்கறே?.. லட்டு மாதிரி அந்த மூணு புத்தகங்களையும் ஒரு பொண்ணு வந்து அன்னிக்கே வாங்கிக்கிட்டுப் போயிடுத்து.. பேர் சாருமதி! ' சிங்கார முதலி தெருவிலே மூணாம் நெம்பர் வீடு..! போய்க் கேட்டுப் பாரு!..

**ரவி:** நன்றி வறேன் மணி!

## காட்சி 5


இடம்: சாருமதி வீடு

**சாருமதி:** ரவி! நீ கேக்கற அந்த மூணு புத்தகங்களும் ரொம்பப் பிரமாதம்! ஒரே மூச்சலே படிச்சு முடிச்சு குறிப்புகளும் எடுத்து வச்சிருக்கேன்... ஆனா நேத்து ராத்திரியே என் சிநேகிதி ஷர்மி வந்து, அந்தப் புத்தகங்களை எங்கிட்டேயிருந்து பிடுங்காத குறையா வாங்கிக்கிட்டுப் போயிட்டா!... அதுக்குண்டான விலையையும் கொடுத்துட்டா!

**ரவி:** ஷர்மியா?... எந்த ஷர்மியைச் சொல்றே?

**சாருமதி:** உன் வீட்டுக்கு நாலாவது வீட்லே இருக்காளே, அதே ஷர்மியைத்தான் சொல்றேன்.

**ரவி:** அப்படியா? அப்போ இதுல ஏதோ



சூழ்ச்சி இருக்கு! ... ஓஹோ, எனக்கு முந்தி நேதாஜி பதிப்பகத்துலே புத்தகத்தைக் கொடுத்துட்டு ஆயிரம் ரூபாய் வாங்கிக்கப் போயிருப்பாளோ? அப்படியிருந்தா எங்கிட்டேயே ஏன் இந்த விளம்பரத்தைக் காண்பிச்சு, புத்தகங்களைப் பத்திக் கேக்கணும்?... ஐயோ மூளை குழம்பறதே! எதுக்கும் நேதாஜி பதிப்பகத்துக்கே போய் எல்லாத்தையும் சொல்லி, அன்பளிப்பைக் கேக்கறேன்!

**காட்சி 6**

ஷர்மி வீடு

**ரவி:** ஷர்மி!

**ஷர்மி:** என்ன கோபத்தோடு வந்திருக்கே...?

**ரவி:** என்னை ஏமாத்த நினைக்காதே ஷர்மி! ஆயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு, எனக்கு முன்னாடியே ஓடிப்போய் அந்தப் புத்தகங்களைத் தேடிக் கொண்டு வந்திருக்கே இல்லே!

**ஷர்மி:** பரவாயில்லையே, கண்டுபிடிச்கட்டியே! ஆமாம், நீ நேதாஜி பதிப்பகத்துக்குப் போய், நடந்ததைச் சொல்லி, அன்பளிப்பு ஆயிரம் ரூபாயைக் கேட்டேயாமே!

**ரவி:**ம்! ஆமாம் கேட்டேன்! இப்போ அங்கேயிருந்துதான் வரேன்!

**ஷர்மி:** பரிசா கிடைச்ச புத்தகத்தை தூசா மதிச்சு வித்தப்புறம், நீ அந்தப் புத்தகத்துக்கு சொந்தக்காரனா இருக்க முடியாதுன்னு. பதிப்பகத்தாருங்க சொல்லிட்டாங்களாமே!

**ரவி:** ம்... வந்து வந்து... ஆமாம்!

**ஷர்மி:** புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்த ஷர்மிக்கு - அதாவது எனக்கு -ஆயிரம் ரூபாய் கொடுத்தாச்சுன்னுகூட சொன்னாங்களாமே?

**ரவி:** ஹாங்... ஆமாம் இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

**ஷர்மி:** நேதாஜி பதிப்பகத்து சொந்தக்காரர் பெண் என் தோழிதான். அவதான் கொஞ்ச நேரம் முன்னால தொலைபேசியிலே எல்லாத்தையும் சொன்னாள்!

**ரவி:** அப்போ அந்த ஆயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்டுத்தானே, எனக்கு முந்தி நீயே புத்தகங்களை விலை கொடுத்து வாங்கியிருக்கே?

**ஷர்மி:** இல்லே ரவி! நீ பரிசுப் புத்தகங்களை மணி கடையிலே விற்கப் போனது எனக்குப் பிடிக்கலே. கொஞ்ச நேரம் கழிச்சு, நானும் மணி கடைக்குப் போய் அந்தப் புத்தகங்களைக் கேட்டுப் பார்த்தேன். அதுக்குள்ளே சாருமதி வாங்கிட்டுப் போனதா மணி சொன்னான். அவ வீட்டுக்கு மூணு நாளா தினமும் போய் அந்தப் புத்தகங்களை நேத்து ராத்திரிதான் விலை கொடுத்து வாங்கிட்டு வந்தேன். இன்னிக்கே உங்கிட்டே இந்தப் புத்தகங்களை திருப்பித் தந்து, புத்திமதி சொல்லணும்னுதான் நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனா காலையிலே இந்த விளம்பரத்தை பேப்பர்லே பார்த்தேன்!

**ரவி:** பார்த்தா என்ன, புத்தகங்களை எங்கிட்டே கொண்டு தர வேண்டியது தானே?.. விளம்பரத்தை மட்டும் காமிச்சு ஏன் என்னை அலைய வச்சே?

**ஷர்மி:** ம்! பசிச்சு சாப்பிட்டாதான் சாப்பாடு ருசியாயிருக்கும்!... அதுக்காகத்தான் நானும் உன்னை இந்தப் புத்தகத்துக்காகக் கொஞ்சம் அலைய விட்டேன்... தப்புன்னா மன்னிச்சுடு! இந்த ஆயிரம் ரூபாய் உன்னோடதுதான், இந்தா! எடுத்துக்க!

**ரவி:** ஷர்மி அக்கா! பல பேர் படிக்க போட்டி போடற ஒரு புத்தகம் என் ஓவியத் திறமைக்கு பரிசா கிடைச்சிருக்கு. அதை அலட்சியமா நினைச்சு விற்றதற்காக வருந்தறேன்.


**ஷர்மி:** ம்! இந்தப் பணத்தை வாங்கிக்க ரவி!

**ரவி:** ஷர்மி! புத்தகங்களோட உண்மையான பெருமை இப்போதான் எனக்குப் புரியறது. இந்த ஆயிரம் ரூபாய்க்கும்...

**ஷர்மி:** பீச்சுக்குப் போய் மசாலா சுண்டல், முறுக்கு, ஐஸ்க்ரீமா?... ஐய்யய்யோ!

**ரவி:** இல்லை ஷர்மி! இந்த ஆயிரம் ரூபாய்க்கும் சிறுவர்களுக்கான சிறந்த புத்தகங்களை வாங்கி, நாம ஒரு சின்ன நூல் நிலையம் நடத்தலாமா?

**ஷர்மி:** ம்! உன் அக்கா இலகாவையும் கூப்பிட்டுக்கிட்டு உடனே ஓடி வா!... இப்பவே புத்தகங்கள் வாங்கக் கிளம்பலாம்!



''என்னை எல்லாரும் கிண்டல் பண்றாங்கம்மா''

''எதுக்கு?''

''வால்தனம் பண்றேனாம்!''

- சீர்காழி வி. ரேவதி

# இப்படியும் நடந்தது!

## டிபன் பண்ணி...

எங்கள் வீட்டிற்கு விருந்தினர் வந்திருந்தனர். அம்மா அவர்களைச் சாப்பிட எழுந்து வரச் சொன்னாங்க. "என்ன சாப்பாடு?" என்று அவர்களில் ஒருவர்



கேட்டார். அதற்கு அம்மா, "டிபனை பண்ணி வைத்திருக்கிறேன்" என்றாள். "டிபனை வேணுமானா சாப்பிடலாம்' பன்னியை எப்படிச் சாப்பிடுவது?" என்று அவர்கள் திருப்பிக் கேட்டதும் எல்லோரும் சிரித்தோம் அம்மாவைத் தவிர.

வெள்ளையாம்பட்டு, ம. மகேஸ்வரி.

## கண் தெரியுது

அப்பாவுக்கு உதவியாக தச்சு வேலை செய்வோம். ஒருநாள் ஜன்னல் செய்வதற்கு மரத்தை எடுத்து இழைக்கச் சொன்னார் அப்பா. நானும் தம்பியும் இழைத்தோம். ஒரு மரத்தை மூன்று பக்கமும் இழைக்க வேண்டும். இரண்டு பக்கங்களை முடித்து விட்டோம். "மூன்றாவது பக்கம் இழைச்சோமான்னு பாரு" என்றேன் தம்பியிடம். அவன் இழைத்து விட்டதாகக் கூறினான். ஆனால், மூன்றாவது பக்கம் மரம் இழைக்காததைக் கண்ட நான் "உனக்குக் கண் தெரியலையா?" என்றேன். அதற்கு அவன் "கண் தெரியுது. இழைத்தோமா இல்லையான்னு தான் தெரியலே"





என்றான். நானும் அப்பாவும் கோபம் மறந்து சிரித்தோம்!

தி.ச.மாவட்டம், ந. சரவணன்.

## கோல்டு ஹேர்!


**வ**குப்பிற்குப் புதிதாக ஆங்கில ஆசிரியர் வந்திருந்தார். "எல்லோரும் அவரவர் பெயரை ஆங்கிலத்தில் கூறுங்கள் என்றார். "என் பெயர் பொன்முடி" என்றான் ஒருவன் தமிழில். "ஆங்கிலத்தில்தானே கேட்டேன்" என்றார் ஆசிரியர். உடனே அவன் "மை நேம் இஸ் கோல்டு ஹேர்!" என்றானே பார்க்கலாம்!



அனந்தபுரம், கே. ராஜேஷ்குமார்.

## அதெல்லாம் மறந்துடுங்க!

**நா**ன் மளிகைக் கடைக்குப் போயிருந்தேன். எனக்கு முன் இருந்த சிறுவன்




ஒருவன் மெடிமிக்ஸ் சோப்புக் கேட்டான். சோப்பை எடுத்துக் கொடுத்துட்டு, காசு கேட்டார் கடைக்காரர். "அதெல்லாம் மறந்துடுங்க" என்று அந்த சோப் விளம்பரத்தில் கூறுவதுபோல் சிறுவன் கூறினானே பார்க்கலாம்!

சாலாமேடு, பி.நெல்சன்.

## ரொம்ப சூடு

**வி**டுமுறையில் நானும் எனது தம்பியும் சென்னையில் இருக்கும் மாமா வீட்



டிற்குச் சென்றிருந்தோம். ஒருநாள் கடைக்குக் கிளம்பிய மாமா, எங்கள் இருவரையும் பார்த்து, "யாருக்கு மீன் ரொம்பப் பிடிக்கும்? வாங்கிட்டு வறேன்?" என்றார். "எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்றான் தம்பி. "எனக்கு வேண்டாம். மீன் ரொம்ப சூடு" என்றேன் நான். "மீன் சூடா! அதனால்தான் தண்ணீலேயே வாழுதா?" என்றான் தம்பி. எல்லோரும் சிரித்தோம்.

திருப்பத்தூர், தே. இளங்குமரன்.

## ஃபேனை போட்டால்...

**வீ**ட்டில் ஒருநாள் கரண்ட் கட்டாகி விட்டது. தீப்பெட்டியைத் தேடி விளக்கைப் பற்ற வைத்தேன். பக்கத்து வீட்டிற்கு சென்றிருந்த அம்மா உள்ளே வந்தார்கள்.




ஞாபக மறதியாக, "இப்படி வியர்க்குதே! அந்த ஃபேனை போடலாமில்லே?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "ஃபேன் போட்டால் விளக்கு அணைந்து விடும்மா." என்றேன். அம்மா உட்பட அனைவரும் சிரித்துவிட்டனர்.

**வேலநத்தம், பி. விஜயகுமார்.**

## டைம்தான் பாஸாகும்

**வ**குப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். சக மாணவன் ஒருவன் பாடத்தைக் கவனிக்காமல் சுவரில் உள்ள கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆசிரியர் "நீ இப்படி மணியையே பார்த்துக் கொண்




டிருந்தால், டைம்தான் பாஸ் ஆகும். நீ பாஸாக மாட்டே!" என்றார். அவன் கடிகாரத்தைப் பார்ப்பதையே அன்றிலிருந்து நிறுத்தி விட்டான்.

**கைலாசபுரம், இரா. திலீப்.**

## பாம்புக்குக் கால் உண்டா?

**எ**ன் தம்பி குறும்புக்காரன். ஆசிரியர் ஒருநாள் அவனை எழுப்பி "பாம்புக்குக் கால் உண்டா?" என்றார். "கால் உண்டு" என்று அவன் பதில் சொன்னான். "எப்படிடா?" என்று கேட்டார் ஆசிரியர். "சார், பாம்புக்குக் கால் இல்லையென்றால் அது பம்பாகி விடுமே?" என்றான் அவன்!



வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது.

**வெள்ளையாம்பட்டு, இரா. லெட்சுமணன்.**

## வைட்டமின் 'சி'

**வீ**ட்டில் அனைவரும் சாப்பிட்டுக்



கொண்டிருந்தோம். ரசத்தில் உள்ள தக்

காளியை எடுத்து என் தம்பியின் தட்டில் போட்ட அம்மா, "வைட்டமின் 'சி' சத்து தக்காளியில் நிறைய இருக்கு, உடம்புக்கு நல்லது'' என்றார். அதற்கு அவன், "அதையே நீங்க சாப்பிட்டாலும் நல்லது தானே?'' என்றான் தம்பி. அம்மா சித்தா சிகிச்சை மேற்கொள்வதால் தக்காளி சாப்பிட முடியாது என்பதை குட்டித் தம்பிக்கு விளக்குவதற்குள் மிகவும் சிரமமாகி விட்டது.

**மன்னார்குடி, த. வரதன்.**

## பேத்தி லௌலி

**வீ**ட்டில் அன்னைவரும் வெளியில்




கிளம்பிக் கொண்டிருந்தோம். முகத்துக்கு பேரன் லௌலி கிரீம் போட்டுக் கொண்டிருந்தேன். பாட்டி என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். "பாட்டி, உங்களுக்கும் பேரன் லௌலி வேணுமா?'' என்று கிண்டலாகக் கேட்டேன். அதற்கு, "பேத்தி லௌலி இருந்தாக் கொடு'' என்றார் பாட்டி!

**துத்திப்பட்டு, ஈ. மாலா.**

## படி! படி!

**எ**ங்க வீடு உயரமானது. வாசலில் நிறையப்படிகள் இருக்கிறது. இரண்டு




வயதான தங்கை வாசலுக்கு ஓடும்போது, எங்கள் பாட்டி "படி! படி'' என்று பதறுவார். ஒருநாள் என் இன்னொரு தங்கை "பாட்டி, எங்களைத்தான் எப்பப் பார்த்தாலும் படிபடின்னு சொல்லுவீங்க, பவித்ராவுக்கு ரெண்டு வயசுதான் ஆகுது, அவளையும் ஏன் இப்பவே படிக்கச் சொல்றீங்க?'' என்று கேட்டாள்!

**இரணியல், சிவபெருமாள்.**

## நீல நிறமாயிருக்கு...


**வி**டுமுறையில் பூம்புகார் கடற்கரைக்குச் சென்றிருந்தோம். "மாமா கடல் ஏன் நீல நிறமாயிருக்குது?'' என்று கேட்டான் பாலகுமார். ரொம்பச் சின்னவனாக இருக்கிறானே! எப்படிப் புரியவைப்பது என்று "வானம் நீல நிறமாக இருக்குறதால கடல் நீர் நீலமாகத் தெரியுது'' என்றேன். அத்துடன் விட்டு விடுவான் என்று நினைத்திருந்த என்னிடம் மீண்டும் "அப்போ நம் வீட்டுக் கிணற்றுத் தண்ணீர் மட்டும் நீல நிறமா இல்லையே! வானம் அங்கேயும் நீல



நிறமாகத்தானே இருக்கு?'' என்றவுடன் வாயடைத்து நின்றோம்.

**மேலப்பாதி, எஸ். நாகராஜன்.**



அமைப்பு : சுஜாதா
படம் : சசி
தாமரை கேட்ட
திருமணப் பரிசு!
சத்யசீலர் நீதி தவறாதவர். அவருக்குக் குழந்தைகள் இல்லை.
ஒருநாள்
நில்லுங்க மன்னா!
ஏதோ துயரக்குரல் கேட்கிறதே!
யார் அழைத்தது?
நான்தான் வற்றிக் கொண்டிருக்கும் குளத்திலிருந்து...
தாமரையா!
ஆம்! மனிதர்க்குத்தான் நீங்கள் அரசரா? நாங்கள் கூட இந்நாட்டில்தானே வாழ்கிறோம்?



என்ன வேண்டும்?
எங்கள் குறை தீர வேண்டும்.
உங்களுக்கும் கூடக் குறையா?
இருக்கக் கூடாதா? உன் முன்னோர் அணை கட்டி, கோடையிலும் குளம் வற்றாது செய்திருந்தார்கள்.
இப்போ அணை உடைந்து நீர் நிற்பதில்லை. கோடையில் வறண்டு சிரமப்படுகிறோம்.
உடனே கவனிக்கிறேன்.
மறுநாள் –
அமைச்சரே, அணையை உடனே கவனியுங்கள்.
அணைகட்டி முடிக்கப்பட்டது.
விரைவாக முடித்துள்ளீர்கள். பாராட்டுகள்!


அரசே! தாமரைக் குளத்திற்குச் செல்லலாமா?
வா! போகலாம்.
மன்னரைக் கண்ட தாமரைகள் தலைவணங்கின
மகிழ்ச்சியில் குளம் நிறையப் பூத்துள்ளோம்!
இப்போ மகிழ்ச்சிதானே?
உங்கள் நல்ல உள்ளத்திற்குத் தலை வணங்குகிறோம். என்ன வேண்டுமோ கேளுங்கள்!
உங்கள் குறைதீர்ந்ததே பெருமகிழ்ச்சி!
உங்கள் தேவை எனக் குத் தெரியும். இந்த மலரோடு அரசியுடன் மலைக் கோயி லில் பூஜை செய்யுங்கள். விரைவில் இள வரசி பிறப் பாள்!
எப்படி நன்றி கூறுவோம்?


ஓராண்டிற்குப் பின் —
தலைமை மருத்துவர் வந்துள்ளார்.
மருத்துவர் வணங்கி —
மன்னா இளவரசியை மட்டுமே காப்பாற்ற முடிந்தது!
மன்னர் துயரத்தில் ஆழ்ந்தார்
இளவரசி பற்றிய கவலையைவிடுங்கள்!
சில நாட்களுக்குப் பின்...
இளவரசி சிரித்தால் எத்தனை அழகு!
...தாமரையின் வரம். அதான் தாமரை போலவே சிரிப்பு!
இளவரசிக்குப் பெயர் வைக்கணுமே?
தாமரைன்னு வைக்கலாம்.



பொருத்தமான பெயர்தான்!
அரசர் தானே இளவரசியை வளர்த்தார்.
ஆட்சிப் பணிகள் பாதிக்கப்பட்டன.
அரசே, ஒரு வேண்டுகோள்...
சொல்லுங்கள் அமைச்சரே?
தாங்கள் வளர்ப்பதால் ஆட்சிப் பணிகள் தாமதப்படுகின்றன.
மேலே கூறுங்கள் அமைச்சரே!
மறுமணம் வேண்டாம்னு சொல்லிட்டீங்க!
இன்னமும் அதில் மாற்றமில்லை.
செவிலித் தாய் பொறுப்பில் விடலாமே?



குழந்தையை வளர்க்க நல்ல உள்ளம் தேவை அமைச்சரே! அப்படிப்பட்ட செவிலித் தாய் கிடைப்பாளா?
தாமரை பிறந்த அதே நாளில் யாருக்காவது குழந்தை பிறந்திருந்தால் அந்தக் குழந்தையுடன் தாமரை வளரட்டும்.
மறுநாள் –
இளவரசி பிறந்த அன்று நம் நாட்டில் எந்தக் குழந்தையும் பிறக்கவே இல்லை!
அப்படியா!
இன்னொரு பணியாள் வந்து –
குறுக்கிட மன்னிக்கவும். நாட்டின் எல்லையில் சோளக் காட்டில் ஒரு குடியானவனுக்கு அதே நாளில் பெண் குழந்தை பிறந்துள்ளது.
மகிழ்ச்சி! அவர்கள் பெயர்?
கணவன் சுப்பன், மனைவி கோமளா.
அவர்களை அழைத்து வாருங்கள்
சுப்பனும், கோமளாவும் வந்தனர்.
தங்கள் மகளுடன் இளவரசியையும் வளர்க்க முடியுமா?



அரசே! அது எங்கள் பாக்கியம்!
நீங்கள் கூட இங்கேயே தங்கலாம்!
மன்னியுங்கள்! என் உழைப்பில் என் இடத்திலிருந்தே வளர்க்க விரும்புகிறேன்!
இனி இளவரசியும் எங்கள் அல்லி போல் எங்கள் மகளே. தாங்கள் விரும்பும் போது அழைத்து வருகிறோம்.
மன்னர் தாமரையை அனுப்பி வைத்தார்.
வருடங்கள் ஓடின.
தாமரையும் அல்லியும் கல்வி பயின்றனர்.



தாமரைக்கு நல்ல குரல்வளம். இனிமையாகப் பாடுவாள்.
அல்லி நன்கு நடனமாடுவாள். ஆனால் பாட வராது.
நாளை இளவரசியுடன் அரண்மனைக்குச் செல்ல வேண்டும்.
ஆமாம். அரசர் பார்த்து ஒரு வருடமா யிடுத்தே! அவர் வேலை அப்படி!
மன்னர் தாமரையையும் அல்லியையும் பார்த்து –
என்னது! இருவரும் ஒரே மாதிரி இருக்கிறார்களே!
வாக்களித்தபடி தாமரை யைக் கண்கலங்காமல் வளர்க்கறீங்க!
அவளும் எங்கள் மகள் போல்தான்.


உன் நல்ல உள்ளம் எனக்குத் தெரியும். அதனால்தான் நான் அடிக்கடி பார்க்கக் கூட நினைப்பதில்லை.
அரசே! தாமரை நன்றாகப் பாடுவாள்...
...அல்லி ஆடுவாள்.
மன்னர் பாடலையும், நடனத்தையும் கண்டு ரசித்தார்.
மறுபடி விடை பெற்றனர்.
வருகிறோம் அரசே!
போய் வாருங்கள்!
ஆண்டுகள் ஓடின.
சுப்பனின் 'அத்தை வந்தாள்.
வாங்க அத்தை, சுகமா? இதோ என் மகள் தாமரை, அல்லி


உங்களுக்கு ஒரு பெண்தானே!
தாமரை, அல்லி இருவரும் பூஜைக்கு மலர் கொண்டு வாங்க.
அத்தையிடம் உண்மையைக் கூறினார் சுப்பன்.
நல்லாயிருக்கு. கண்ணுக்கு கண்ணா திருமண வயது வரை வளர்த்து விட்டீங்க!
அதனால் என்ன?
நாளைக்கே அரசனை மணந்து திரும்பிப் பார்க்காம போகப் போறா!
அவள் இளவரசிதானே? அதிலென்ன தவறு?
இவ்வளவு நாள் வளர்த்தீங்களே? உங்களுக்கு என்ன கிடைக்கப் போகுது?
சரியாக் கேட்டீங்க. வளர்த்த ரெண்டு பெண்களில் ஒருத்திக்கு ராஜா, ஒருத்திக்கு குடியானவனையா திருமணம் செய்வது?




சுப்பனின் மனம் கலைந்தது
சரி. இப்ப எதுவும் பேசாதீங்க. நேரம் வரும் போது பார்த்துக் கலாம்!
பிழைக்கத் தெரிந்தால் சரி!
அம்மா, நாங்க ரெண்டு பேரும் தோப்புக்குப் போய் பழம் பறித்து வருகிறோம்.
பத்திரமா போயிட்டு வாங்க!
தோப்பில் –
தூரத்தில் தாழம்பூ தெரிகிறது! வா, அல்லி பறிக்கலாம்.
சோர்வா இருக்கு. நீ மட்டும் போயிட்டு வா. நான் இங்கே இருக்கேன்.
தாமரை சென்றாள்.
வேட்டைக்கு வந்த இளவரசன் விஜயன் தாமரையைப் பார்த்து –
யார் இவன்?
முள் குத்தி விட அழுதாள்.
கண்ணீர் முத்தாக மாறியது.
தாமரை யார் என்பதை அறிந்து விஜயன் நாடு திரும்பினான்.


மன்னர் சத்யசீலரின் மகளை மணக்க விரும்புகிறேன்.
எங்களுக்கும் சம்மதம்தான்!
சத்யசீலரின் அரண்மனையில் —
விஜயனுக்கு தாமரையைப் பெண் கேட்டு ஓலை...
இதைவிட மகிழ்ச்சி உண்டோ? இளவரசியை உடனே அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன்.
சுப்பன் வீட்டில் —
இப்ப என்ன செய்யப் போறே? தாமரைக்கு பல்லக்கு வந்துட்டது!
திடீர்னு இப்படிக் கூப்பிடுவாங்கன்னு நினைக்கலையே!
உடனே ஏதாவது யோசனை பண்ணுங்க!
தாமரைக்குப் பதில் அல்லியை அலங்காரம் செய்து நாமே அழைத்துப் போவோம்!
நல்ல யோசனை அப்ப தாமரை?
தாமரையை நெற்குதிர்ல போட்டு அடைச்சு வச்சிடறேன்.
தாமரையைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம்.
அதுவரை நெற்குதிர்லயே சிறை இருக்கட்டும்.



தாமரையை நெற்குதிரில் அடைத்தார்கள்
பல்லக்கு அரண்மனையை நோக்கி விரைந்தது.
அரண்மனையில் —
அல்லிக்கு உடல்நிலை சரியில்லை.
வா சுப்பா! என் மகனை வளர்த்து ஆளாக்கி விட்டாய்! எப்படி நன்றி கூறுவேன்! அல்லி எங்கே?
இருவருக்கும் ஒன்றாகத் திருமணம் செய்ய நினைத்தேன். அல்லிக்கும் நல்ல மாப்பிள்ளை தேடி முடித்து விடலாம்.
ஆள் மாறாட்டத்தை அறியாத அரசர் அல்லியை மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.
உங்கள் இளவரசி தாமரை. நாளை மறு நாள் திருமணம்!


அரசே! இளவரசர் விஜயன், அரண்மனைக்கு வந்து விட்டார்.
அரசர் மணமகன் வீட்டாரை உபசரித்தார்.
திருமணத்திற்கு முன் விஜயனும், தாமரையும் வீரகாளி கோயிலுக்குச் சென்று வழிபட்டு வர வேண்டும்.
தாராளமாக செல்லட்டும்.
விஜயன் தன் தோழர்களுடனும் அல்லி தன் தோழிகளுடனும் இரதத்தில் சென்றனர்.
விஜயனுக்கு சந்தேகமே ஏற்படவில்லை. ஆனால்...
இரதத்திலிருந்து இறங்கும்போது அல்லி தலையில் இடித்துக் கொள்ள... கண்ணீர் விட....
...அன்று முத்தாக மாறியதே! இவள் யார்? தோற்றம் அப்படியே இருக்கே!


யார் நீ? உண்மையைச் சொல்.
நான் தாமரை. இந்நாட்டு இளவரசி.
தாமரையை நான் பார்த்திருக்கிறேன். மறைக்காதே!
நான் அல்லி. மன்னியுங்கள்.
சுப்பன், கோமளா, அல்லி, அத்தை சிறைப்பட்டனர்.
பெற்ற மகளை எனக்கே அடையாளம் தெரியவில்லை! நீ எப்படி அறிந்தாய்?
தாமரையின் கண்ணீர் முத்தாக மாறிவிடும். அதனால்தான் கண்டுபிடிக்க முடிந்தது.
தாமரை! திருமணப் பரிசாக என்ன வேண்டும்?
எது கேட்டாலும் தருவீங்களா?



என்னை வளர்த்தவர்களை மன்னித்து விடுதலை செய்யுங்கள்!
நிச்சயமாகத் தருவேன்.
அனைவரும் விடுதலை செய்யப்பட்டு மன்னிப்புக் கேட்டனர்.
தாமரை விஜயனின் திருமணம் இனிதே நடைபெற்றது.
கருத்து : ஆண்டர்சன்

"என் பையனுக்கு டு இன் ஒன் தான் ரொம்ப பிடிக்கும்!"

"இதுக்கு ஏன் வருத்தமா இருக்கீங்க?"


"நீங்க வேற... அவனோட பாணியில டு இன் ஒன்னா விளையாட்டு மைதானத்துலயே படிக்கிறது!"

– காழி ஆர். சீதாராமன்



"அம்மா! 'புத்தகப் புழு'-ன்னு சொல்றாங்களே.... எப்படிம்மா இருக்கும்?"

– கே. சோமசேகர்



சிரிப்...




"ஞாயிற்றுக் கிழமை வந்தாலே கவலையா இருக்கு."

"ஏன்?"

"திங்கட் கிழமை ஸ்கூலுக்குப் போகணுமே!"


– கே. விஜயலட்சுமி



"டாக்டர் ஊசி போட்டபோது நீ அழலையாமே?"

"ஆமாம். அவர் ஊசிய கீழே போட்டதுக்காக நான் ஏன் அழணும்."

– பொன். குமார்






✱ சுதந்தர தின பொன் விழாச் சிறப்பிதழ் வெகு அருமை. சுதந்தரப் போராட்ட தியாகிகளின் கஷ்டத்தை உணர முடிந்தது. - தோப்புத்துரை ந. ஆனந்த ராஜ், விருத்தாசலம் வி. பிரபாகர், மேட்டுப்பாளையம் மே.தே. பார்த்தீபன், சிங்கம் புனேரி வித்யா, பட்டுக்கோட்டை ஜி. புனிதா, தேனி முருகேசன்.

✱ ஈற்று வாக்கியக் கதைகள் ஒவ்வொன்றும் சிரிக்கவும், படிக்கவும் நன்றாக இருந்தன. - பேர்ணாம்பட்டு என். சலீம் பாஷா, திண்டுக்கல் கே. சித்ரா, பொன்னேரி ப. கார்த்திகா, பெரியபாளையம் எஸ். ஜீவா.

✱ 'தும்மினால் தண்டனை' - பரிசுக்கதை படத்துடன் பளிச் சென்றிருந்தது. - சேரன்மாதேவி பி. சாந்தி, திருவள்ளூர் ஆர். கந்தன், விழுதரெட்டி ம. சரஸ்வதி, துறையூர் வி. சங்கரன், பாண்டிச்சேரி பூங்கோதை.

✱ 'ஆழியின் ஆமைகள்' கட்டுரை வியப்பில் ஆழ்த்தியது. ஆமையின் வகை, உடலமைப்பு, வாழ்க்கை முறை ஆகியவற்றை அருமையாக எடுத்துக் காட்டியது. - விண்ணமங்கலம் கே. சுமதி, மன்னார்குடி வி. நித்ய தாரா, பாண்டிச்சேரி என். கணேஷ், மேட்டுப்பாளையம் மே.தே. பார்த்தீபன்.

✱ 'பரிசுக்காக...' படக்கதை பணம் முக்கியமல்ல, அன்பும், அரவணைப்பும்தான் முக்கியம் என்பதை சங்கருக்கு மட்டுமல்ல எங்களுக்கும் எடுத்துக் காட்டியது. படம் வரைந்த ஓவியருக்கு பாராட்டுகள். - விருத்தாசலம் வி. பிரபாகர், கல்லுப்பட்டி எல். ஹசீனா பேகம், அரியலூர் எஸ்தர், மானா மதுரை மோ. ஜொவித்தா, சிவகங்கை பி. பார்த்தசாரதி, சின்ன சேலம் சி. கோவிந்தன்.

✱ கோடை விடுமுறைப் போட்டி 1 ன் முடிவை வெளியிடும் போது விடையில் பூனை என்று குறிப்பிட்டு வட்டமிடப்பட்டுள்ளது. பூன் என்பதுதானே சரி? - நீர்விளங்குளம், ப. காளிதாசன்.

(பூன் என்பதுதான் சரி. கவனக் குறைவுக்கு வருந்துகிறோம்! - ஆர்.)

✱ கோகுலமே உன்னைத் தொடர்ந்து படித்து வருகிறோம். நாங்கள் அனைவரும் அயல் நாட்டவர்கள். எங்களுக்கு இந்தியத் தொடர்பு முகவரி இல்லை. நாங்கள் படைப்புகளை எவ்வாறு அனுப்புவது? - இலங்கை க. ஜெயபாரதி, ரா. லோகேஸ்வரன், ரா. தினேஸ் ராஜா, அ. நிரோஷன், அ. யாழினி, அ. கார்த்திகாயினி, அ. கனோஜன், ரா. சிந்துஜா, அ. வினோத், அ. பிரவீனா ரஷ்ஷாதரி, க. லாவண்யா, க. குகனேசன், க. யுரேக்கா.

கோகுலத்தில் வெளியாகும் படைப்புகளை எழுதுபவர்களுக்கு Complimentry Copyயும் சன்மானமும் அனுப்புவது வழக்கம். இந்திய தொடர்பு முகவரியைத் தந்தால் இவற்றை தொடர்பு முகவரிக்கே அனுப்பி வைப்பது எளிது. இதற்காகவே இந்திய தொடர்பு முகவரி கேட்கப்படுகிறது. - ஆர்.

✱ என்னுடன் படிக்கும் நண்பர்களுக்கு கோகுலத்தின் கதைகளைச் சொல்வேன். அவர்களுக்கும் படிக்க ஆசை. ஆனால் வாங்க வசதியில்லை. நான் சேமித்து வைத்திருக்கும் பழைய கோகுலம் புத்தகங்களை என் பள்ளி நூலகத்திற்குக் கொடுத்தால் பலரும் பயனடைவார்கள் என நினைக்கிறேன். உங்கள் கருத்து என்ன? - மனக்காடு, கேரளா ஆர். சிவபெருமாள்.

(படித்த பின் புத்தகத்தை மற்றவர் படித்துப் பயன் பெறக் கொடுப்பது நல்ல காரியம். - ஆர்.)

✱ 'உதயன் எங்கே?' தொடர் கதையில் உதயனுக்கும் காளிமுத்துவிற்கும் புது உதயம் புலர்ந்த பின்தான் எங்கள் நெஞ்சில் நிம்மதி வந்தது. மாணவப் பருவத்தின் மனவோட்டத்தை நன்கு பிரதிபலித்த ஆசிரியருக்குப் பாராட்டுகள். - காட்டுமன்னார் கோயில் தின. அன்பு தேவன், வாணியம்பாடி கே. அகிலா, கோபிப்பாளையம் ஈ. டெய்சி ராணி, வந்தவாசி பி. திருமலை, மற்றும் ஏராளமானோர்.

✱ உதயன் எங்கே? ஒரு வருடமாக விறுவிறுப்புடன் சென்று கொண்டிருந்தது. உன்னதமான உள்ளம் கொண்ட உதயனை மறக்க முடியாது. கள்ளியாக்குறிச்சி கே.ஆர். பரமேஸ்வரன், திண்டிவனம் பாத்திமா பீவி, அம்பாசமுத்ரம் விக்டர் ராஜ், பழனி மோகனா, மற்றும் பலர்.


✱ காளிமுத்துவும், உதயனும் திசை மாறி சிதைந்து போகும் நேரத்தில், அவர்களை காப்பாற்றி நம்மை பெருமூச்சு விடச் செய்தார் வி.ர. வசந்தன். இரணியல் சிவபெருமாள், நெய்வேலி வேல் ராணி கமுதி. பாண்டியன், பொன்னமராவதி இந்துமதி மற்றும் பலர்.

✱ எத்தனையோ கருணை இல்லங்களில் உதயன், காளிமுத்து போல் தவறாக எண்ணித் தவித்துக் கொண்டு இருக்கும் மாணவர்களுக்கு 'உதயன் எங்கே?' ஒரு எச்சரிக்கை பாடம்! - மதுரை ஜே. மரகதம், கள்ளிடைக்குறிச்சி எம். ஸ்டெல்லா, பனையூர் க. விஸ்வநாதன், மற்றும் பலர்.

புதிய தொடர் கதை

# ஒன்பதாம் வகுப்பு!

வெ. நல்லதம்பி



## 1. அழைப்பு!

எட்டாவது வகுப்பு களைகட்டியிருந்தது.

பெரிய மேடத்தைப் பார்க்க வகுப்பு டீச்சர் சென்று விட்டதால், வகுப்பைக் கவனிக்கும் பொறுப்பு வகுப்பின் தலைவி பாவையிடம் வரவே பாவை எழுந்தாள். மேசை அருகே சென்றாள். கையில் இருந்த தாளைப் பிரித்தாள். படிக்க முயன்றாள்.

“பாவை! பாவை! அதைப் படிக்க வேண்டாம்! நிறுத்து. ஏற்கெனவே படித்தாச்சு. போதும்!” என்று நர்மதா பரபரப்புடன் பாவை படிப்பதைத் தடுத்தாள்.

“ஏண்டி தடுக்கறே! நம்ம டீச்சர் சொன்னதைத் தானே நான் செய்கிறேன்?” என்று வியப்புடன் கேட்டாள் பாவை.

“டீச்சர் படிக்கச் சொன்னது என்னவோ உண்மைதான். அதை நான் மறுக்கலே பாவை. ஆனால், அதற்காக இப்படியா வருகைப் பதிவேட்டைப் படிக்கற மாதிரி! இதைப் படிக்கறதை நம்ம சிநேகிதிங்க விரும்ப மாட்டாங்க” என்றாள் நர்மதா.

“சிநேகிதிங்க விரும்ப மாட்டாங்கங்கறதுக்காக, டீச்சர் சொன்னதை பண்ணாம இருக்க முடியுமா?”

"அதுக்காக அரை மணிக்கு ஒரு தடவை படிக்கலாமா பாவை?" - நர்மதா தான் விடாமல் கேட்டாள்.


"படித்தால் உனக்கு என்ன வந்தது? நீதான் பணம் கட்டிட்டியே? உன் பெயர் தான் அதில் இல்லையே?"

பாவைக்கு அருகே வந்த நர்மதா இரங்கிய குரலில் பேசினாள்.

"அது மகிழ்ச்சியளிக்கக்கூடிய பட்டியலாக இருந்தால் அடிக்கடி படித்து எல்லோருமே மகிழலாம். ஐம்பது ரூபாய் கட்டி கோடை விழாவுக்கு நுழைவுச் சீட்டு வாங்காதவர்களின் பட்டியல் அது. பணம் கட்ட இன்றுதான் கடைசி நாள்."

"அதனால்தான் பணம் கட்டாதவர்களுக்கு நினைவுபடுத்த பட்டியலைப் படிக்கிறேன். பெரிசா நீ தடுக்கறே?"

"அவர்கள் நிலையில் நம்மை வைத்துப் பார் பாவை. உனக்கு அவர்களுடைய மனநிலை புரியும். அதில் இருக்கும் பெயர்கள் எல்லாம் நம் அனைவருக்கும் இப்போது மனப்பாடம் ஆகிவிட்டது. டிக்கெட்டை இதுவரை வாங்காதவர்களின் பெயர்கள் அவை. நம் சக மாணவிகள்தான் அவர்கள். நம் அருகேயே உட்கார்ந்திருக்கிறார்கள் இங்கே. அவர்கள் பெற்றோர் ஏதோ ஒரு காரணத்திற்காக இன்னும் வந்து சேரவில்லை. வந்திருந்தால் அவர்களும் ஐம்பது ரூபாய் கட்டணம்



கட்டி இருப்பார்கள். நாளை நடைபெற இருக்கும் கோடை விழாவுக்கான டிக் கெட்டையும் வாங்கி இருப்பார்கள். நமக் குத் தெரிந்ததுதானே!" - நர்மதா சற்று விரிவாகவே பேசி விட்டாள்.

பாவை மீண்டும் நர்மதாவைப் பார்த் துப் பேசினாள் : "உன் கருத்தை நீ சொல் கிறாய். ஆசிரியை சொன்னதை நான் செய்யாமல் இருக்கலாமா? வேண்டுமா னால் டீச்சரிடம் வா போகலாம். பெரிய மேடத்தைத்தான் பார்க்கப் போயிருக் கிறார்"- பெரிய மேடம் என்று பாவை குறிப்பிட்டது தலைமை ஆசிரியை.

"அது எனக்கும் தெரியும். அங்கே எதற் குக் கூப்பிடுகிறாய்? அங்கே வர நான் பயப்படுவேன் என்று மிரட்டிப் பார்க் கிறாயா?"

"நான் அப்படி நினைக்கவில்லை?"

"பிறகு ஏன் என்னை அப்படி அழைத் தாய்? நான் சொல்வதை நீ புரிந்து கொள்ளவில்லை?"

"என்ன புரிந்து கொள்ளவில்லை?"

நர்மதா விளக்கினாள். "என்னடி இப் படி டியூப்லைட் மாதிரி இருக்கே! பணம் கட்டாதவர்கள் இவர்கள் என்று அவர் கள் பெயரைப் படித்தால் அவர்கள் மனம் நோகாதா? அதுவும் 'அடிக்கடி படி' என்று டீச்சர் சொன்னதைச் சாக்காக வைத்து திரும்பத் திரும்பப் படிக்கிறயே! நீயும், நானும் மற்ற எல்லோரும் பணம் கட்டி நுழைவுச் சீட்டு வாங்கி விட்டோம். இன் னும் மூன்று பேர்தான் வாங்கவில்லை. அவர்கள் பெயர் மட்டும் படிக்கப்படும் போது அவர்கள் மனம் கஷ்டப்படாதா? அதற்காகத்தான் சொல்கிறேன்" என்று நிறுத்தினாள்.

"அப்படியானால் டீச்சர் சொன்னதை நான் செய்யக்கூடாது என்கிறாய். அப் படித்தானே?" - பாவை எகிறினாள்.

"அது அல்ல நான் சொல்வது. டீச்சர் சொன்னதின் உட்பொருளை நீ உணர்ந்து செயல்பட வேண்டும்?"

"அது என்ன உட்பொருள்?"

"இடையில் யாரும் பணம் தந்து விட் டால் அவர்கள் பெயரை நீக்கி விட வேண்டும். மற்றவர்களை நினைவுபடுத்த வேண்டும். அதுதான் அதற்கு அர்த்தம்."

"நீ அதற்கு அர்த்தம் சொல்லி ஒரு நோட்ஸ் போடு. அதை வாங்கிப் படித்துத் தெரிந்து கொள்கிறேன்!" என்று பாவை சொன்னதும் மற்ற மாணவிகள் சிரித்தார் கள். சிலர் வாய்விட்டுச் சிரித்தார்கள், சிலர் புன்முறுவல் செய்தார்கள். வகுப்பு கலகலத்தது.

"நீ வகுப்புத் தலைவி! என்ன வேண்டு மானாலும் பேசிக் கொள். என் கருத்தைச் சொல்லி விட்டேன். அவ்வளவுதான்" என்று சொல்லி விட்டு நர்மதா நகர்ந்தாள்.

**பி**ன் பெஞ்சிலிருந்து ஒரு முனகல் சத்தம் கேட்டது. சித்ராதான் கண்களைக் கசக்கினாள். கண்களில் நீர் வழிந்தது. அவளுக்கு அடுத்தாற்போல் சுந்தரி உட் கார்ந்திருந்தாள். அவளும் இன்னும் பணம் கட்டவில்லை. கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்த கவிதாவும் இன்னும் நுழைவுச் சீட்டு பெறவில்லை.

"அழாதே சித்ரா!" என்று சுந்தரி அவள் தலையில் அன்பாக வருடிக் கொடுத்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள் சித்ரா.



**செ**ன்னை நகரில் தென்மேற்குப்

பகுதிகளில் அமைந்துள்ளது குரோம் பேட்டை. வித்யா நடுநிலைப் பள்ளி அங்கு பிரபலமானது. மிகக் குறுகிய காலத்தில் பெருமையோடு பெயர் பெற்று விட்ட பள்ளி அது.

குரோம்பேட்டையில் உள்ள முக்கிய மானவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் படிக்க இடம் கேட்டு அங்குதான் செல்வார்கள். அங்கு பணியாற்றும் ஆசிரியைகள் மிகவும் நன்றாக, மாணவிகளுக்குப் புரியும் வகையில் பாடம் நடத்துவார்கள். பாடம் தெளிவாகப் புரிந்து விட்டால் அப்புறம் என்ன? பிள்ளைகள் அனைவரும் நல்ல மதிப்பெண் பெறுவார்கள். "கல்வித் தேர்ச்சியும் உடற்பயிற்சியும் எங்கள் பள்ளியின் இரு கண்கள்" என்று தலைமை ஆசிரியை கோமதி எல்லோரிடமும் சொல்வார். மாணவிகளுக்கும் அவர்களது பெற்றோர்கள் அனைவர்க்கும் அது தெரியும்.

வித்யா நடுநிலைப் பள்ளியின் இன்னொரு சிறப்பு, அதற்கு இருக்கும் மிகப் பெரிய விளையாட்டு மைதானம். பள்ளியை ஒட்டியே இருந்தது. சுமார் பத்து ஏக்கர் நிலத்தில் பரந்து கிடந்தது அது.

பெரிய மேடம் என்று குறிப்பிடப் படும் கோமதி மேடம் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அந்த இடத்தை வாங்கினார். அவர் கணவர் விமான ஓட்டியாக இருந்தவர். நுரையீரலில் ஏற்பட்ட ஏதோ நோய் காரணமாக இறந்து விட்டார். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. கணவரின் மறைவுக்குப் பிறகு தமக்குக் கிடைத்த பணத்தையெல்லாம் போட்டு பெரிய மேடம் அந்த இடத்தை வாங்கினார். கிணறு வெட்டி, தென்னை, வேம்பு, புன்னை மரக்கன்றுகளை ஏராளமாக நட்டார். அந்தக் காலத்து வட்ட வடிவ குடிசை வீடுகள் மாதிரி அறுகோண வடிவத்தில் ஐந்து வீடுகளை அமைத்தார். தரைக்கு சிமெண்ட் பூசினார். தொடக்கப் பள்ளி ஒன்றை ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் மூன்று வகுப்புக்களே இருந்தன. மூன்று தனித்தனி வீடுகளில் வகுப்புகள் தொடங்கின. ஒரு வீட்டில் நூல் நிலையம் அமைத்தார். ஒரு வீட்டில் தான் குடியிருந்து கொண்டார்.



கல்விப் பணியைத் தொண்டாக மதித்து கண்ணும் கருத்துமாக இருக்கக் கூடிய டீச்சர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து பள்ளியில் நியமித்தார். அவர்களின் கடும் உழைப்பால் பள்ளிக்கு நல்ல பெயர் அந்த வட்டாரத்தில் கிடைத்தது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வகுப்பாகக் கூட்டிக் கொண்டே வந்தார். தற்போது எட்டாம் வகுப்பு வரை அப்பள்ளியில் இருந்தது.

அப்பள்ளியையே தன் குழந்தையாக பாவித்து, கோமதி மேடம், தன் முழு நேரத்தையும் செலவிட்டு வந்தார். தன் சொத்து சுகம் முழுவதையும் அதற்காகவே அவர் பயன்படுத்தி விட்டார்.

அப்பள்ளியை அடுத்த ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தார். இன்னும் ஒரு மாதத்தில் அனுமதியும் கிடைத்து விடும். அப்படிக் கிடைத்து விட்டால், புதிய வகுப்புகள் கட்ட வேண்டுமே? பணத்திற்கு என்ன செய்வது? தன்னிடம் உள்ள பணம், சொத்து எல்லாவற்றையும் ஏற்கெனவே அவர் தந்து



விட்டார்.

கோமதி மேடம் யோசனை செய்தார். புதிய வகுப்புகளைத் தொடங்கத் தேவைப் படும் பணத்துக்கு என்ன செய்வது என்று ஆசிரியைகளைக் கலந்தாலோசித்தார். அந்த யோசனையில் உருவானதே கோடை விழா.

எதையும் புதுமையாகச் செய்ய வேண் டும் என்பது கோமதி மேடத்தின் ஆசை. கோடை விடுமுறை தொடங்கும் முதல் நாளில் விழா வைப்பது. அதில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவது. அதில் நகரில் உள்ள பெரிய கலைஞர்களையும், பள்ளி மாணவிகளையும் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வைப்பது. அந்த ஆண் டில் சிறந்த மாணவிகளுக்குப் பரிசு வழங் குவது. இப்படி நடத்தும் விழாவுக்குக் கட் டணம் வைத்தால் அதில் சேரும் தொகை யைப் பள்ளிக்குப் பயன்படுத்தலாம். இதுவே இறுதி வடிவம் பெற்ற யோசனை.

அப்போது படிக்கும் பிள்ளைகளுக்கும், எதிர்காலத்தில் படிக்க வரும் குழந்தை களுக்கும் அது உதவும் என்பதால் ஆசிரி யைகள் அந்தத் திட்டத்தை முழுமனதாக ஆதரித்தார்கள்.

கலைநிகழ்ச்சிகளும், உடற்பயிற்சிப் போட்டிகளும் ஏற்கெனவே முழு வீச்சில் நடைபெற்று முடிந்தன.

ஆண்டுத் தேர்வு மூன்று நாட்களுக்கு முன்பே நடந்து முடிந்து விட்டது. நேற்றும் முதல் நாளும் சனி ஞாயிறு விடுமுறை இன்று எல்லா ஆசிரியைகளும் மாணவி களும் பள்ளிக்கு வந்து இறுதி ஏற்பாடு களைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

கோமதி மேடம் அவசர ஆலோ சனைக்கு எட்டாம் வகுப்பு ஆசிரியை அம்புஜம் டீச்சரைத்தான் அடிக்கடி அழைப்பார்.

கோமதி மேடம் அழைப்பதாகத் தகவல் வரவே, வகுப்புத் தலைவி பாவையை அழைத்து வகுப்பைப் பார்த் துக் கொள்ளச் சொல்லிவிட்டுச் சென்றார் அம்புஜம்.

அன்று உள்ளபடியே வகுப்புக்களில் பாடம் நடைபெற வேண்டியதில்லை. அவரவர்களும் அந்தந்த வகுப்புக்களில் இருக்க வேண்டும். விழாவுக்காக அவரவர் களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்ய வேண்டும். மாணவிகளுக்குச் சில பொறுப்புகள். ஆசிரியைகளுக்குச் சில பொறுப்புகள்.

காலையில் தொடங்கி மதியத்திற்குள் எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட வேண்டும். பிற்பகலில் தலைமை ஆசி ரியை கோமதி மேடம் வகுப்புவாரியாக வந்து பார்வையிட்டு, தேவைப்பட்டால் ஆலோசனைகள் சொல்லிச் செல்வார். இது ஏற்பாடு.

அந்த ஏற்பாட்டின்படி, எல்லா வேலை களையும் முடிப்பதில் பள்ளியே முழு ஆயத்தத்தில் இருந்தது. அதன் ஒரு அங்க மாக எல்லா மாணவிகளும் அல்லது அவர்களின் பெற்றோர்களும் வந்து கட் டணம் செலுத்தி நுழைவுச் சீட்டை வாங் கிச் சென்றார்களா என்பதையும் சரி பார்க்க வேண்டும்.

**வ**குப்பு மாணவிகளைப் பார்த்து பாவை உஷார்ப்படுத்தினாள். "அம்புஜம் டீச்சரும், கோமதி மேடமும் நம் வகுப்பை நோக்கி வருகிறார்கள். அமைதி! அமைதி!" என்றாள் இரங்கிய குரலில். ஆனால் வந்த

இருவரும் பக்கத்து வகுப்புக்குச் சென்று விட்டார்கள்.

அப்போது வகுப்பின் கதவுப் பக்கம் இருவர் வந்து நின்றனர். ஒருவர் கவிதாவின் அம்மா, இன்னொருவர் சுந்தரியின் தாத்தா. அவர்களைக் கண்டவுடன் கவிதாவும் சுந்தரியும் எழுந்தோடி வரவேற்றார்கள். தாங்கள் பணம் கட்டத் தொகை கொண்டு வந்திருப்பதை அவர்கள் சொன்னதும், பாவை அவர்களைப் பக்கத்து வகுப்பு அறைக்கு அழைத்துச் சென்றாள். தலைமை ஆசிரியை அவர்களை அன்புடன் வரவேற்று வணக்கம் சொன்னார். அம்புஜம் டீச்சர் அவர்களிடம் கட்டணம் வாங்கிக் கொண்டு நுழைவுச் சீட்டைத் தந்தார். பாவை தன் கையில் உள்ள தாளை எடுத்தாள். கவிதா, சுந்தரி பெயர்களை அடித்தாள். மீதி இருந்தது சித்ராவின் பெயர் மட்டும்தான்.

வந்திருந்தவர்களை அனுப்பிவிட்டு, எட்டாம் வகுப்பை நோக்கி அம்புஜம் டீச்சரும், கோமதி மேடமும் வந்தார்கள்.


சித்ராவுக்கு நெஞ்சு 'துணுக்' என்றது. தான் மட்டுமே இன்னும் நுழைவுச் சீட்டு வாங்கவில்லை. என்ன அவமானம்?

அப்பா பசுபதி காலையிலேயே வந்து விடுவதாகச் சொன்னாரே? பிறகு ஏன் இன்னும் வரவில்லை? அவரால் வர முடியாவிட்டால் அம்மாவையாவது அனுப்பி இருக்கலாம். சே... என்று நொந்து கொண்டாள்.

**"இந்த வீடு ஒழுகுமா?"**

**"மழை பெஞ்சா மட்டும் ஒழுகும், மத்த நேரமெல்லாம் ஒழுகாது...!"**

**— பாளை. பசும்பொன்**



இன்று நாள் பூராவும் பாவை குறைந்தது அவள் பெயரை ஐந்து முறையாவது படித்திருப்பாள். ஒவ்வொரு முறையும், முன் பெஞ்சில் உள்ள பானு, ஏளனமாக அவளைப் பார்த்தாள். நினைக்கும்போதே பாவைக்கு மீண்டும் அழுகை வந்தது. அடக்கிக் கொண்டாள். மேடம் வருகிறார்களே!

"வணக்கம் அம்மா!" – எல்லா மாணவிகளும் எழுந்து நின்றனர்.

"உட்காருங்கள்" – கையமர்த்தினார் கோமதி மேடம். அம்புஜம் டீச்சர் அருகில் நின்றார்.

"பிள்ளைகளே! நாளை உங்கள் விழா, கோடை விழா நடக்க இருக்கிறது. அதை வெற்றிகரமாக நீங்கள்தான் நடத்தித் தர வேண்டும். உங்களைத்தான் நம்பியுள்ளேன். வரவேற்பு முதல் நன்றி தெரிவிப்பது வரை எல்லாவற்றுக்கும் நீங்களே பொறுப்பு. நானும் மற்ற ஆசிரியைகளும் நீங்கள் செயல்படுவதைப் பார்த்து மகிழப் போகிறோம்; பெருமைப்படப் போகிறோம். தேவையானபோது உங்களுக்கு வழிகாட்டியும் உதவுவோம். என்ன புரிகிறதா?" என்று மேடம் கேட்டார்.

எல்லா மாணவிகளும் தலையாட்டினார்கள்.

"எனக்குத் தெரியும், நீங்கள் நிச்சயம் நன்றாக நடத்தி முடிப்பீர்கள் என்று! நீங்கள் அம்புஜம் டீச்சரின் மாணவிகள் அல்லவா?" என்றதும் அனைவரும் தங்கள் வகுப்பாசிரியையைப் பார்த்துப் புன்னகை பூத்தனர்.

அம்புஜம் டீச்சருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும் பெருமையும் அவர் முகத்தில் தெரிந்தது.

"சித்ரா, இன்னும் பத்து நிமிடம் பொறுத்து என்னை வந்து பார்" என்று கூறிய மேடம், அம்புஜம் டீச்சருடன் நடந்து சென்றார். அந்த வகுப்பில் ஐம்பது ரூபாய் கட்டி சீட்டு வாங்காத ஒரே மாணவி அவள் மட்டுமே! அதைப் பற்றிக் கூறி விசாரிக்கத்தான் பெரிய மேடம் அழைத்திருக்கிறாரோ?

என்ன பதில் கூறி எப்படிச் சமாளிப்பது!

சித்ரா கண்கலங்கினாள்!

(தொடரும்)


## பச்சைக்கிளி

பச்சை வண்ணக் கிளியாம்
பழத்தைத் தின்னும் கிளியாம்
பேசி அழைக்கும் கிளியாம்
பாலர் விரும்பும் கிளியாம்.

பறந்து மகிழும் கிளியை
பிடித்து வைக்க லாமோ?
கருணை மணம் கொண்டு
கூண்டைத் திறந்து விடுவோம்!

- நெற்குப்பை கி. மனோகரன்






## பந்து விளையாடலாம்

பந்து வீசி ஆடலாம்!
பண்பு டனே பழகலாம்!
முந்தி ஆடி ஓடலாம்!
மெல்ல நன்கு ரசிக்கலாம்!

திறந்த வெளி அரங்கிலே
சுத்த மான காற்றிலே
சிறந்த முறையில் கூடியே!
காலை மாலை ஆடலாம்!

உடல் பலமும் பெருகுமே!
உள்ளம் வளர்ச்சி அடையுமே!
கடின மாக உழைக்கவே
கூடும் வலிமை உணரலாம்!

மு. பிரபு, போடி.



## மியாவ்...

எங்கள் வீட்டு பூனை - அது
எல்லா ருக்கும் பிடிக்கும்.
இருட்டில் கூடப் பதுங்கி - அது
எலியை துரத்திப் பிடிக்கும்.
மியாவ் மியாவ் பாடும் - அது
மேலும் கீழும் ஓடும்.
மெல்ல அடித்தால்கூட - அது
முகத்தைப் பார்த்து சிணுங்கும்!

ர. கிருத்திகா, ஆகம்பாக்கம்.



## கண்கள்

சின்னச் சின்ன கண்கள்
சொக்க வைக்கும் கண்கள்
மீனைப் போன்ற வடிவில்
மிதக்கும் அழகுக் கண்கள்
வெள்ளித் தட்டின் நடுவில்
வைத்த திராட்சைப் பழங்கள்
உலகின் அழகைக் காண
உதவும் அருமைக் கண்கள்.

ஸ்ரீ. ஸ்ரீராம், கூடுவாஞ்சேரி.

## மின் விசிறி

சுற்றிச் சுற்றி வருகுது
சுகமாய் காற்றைத் தருகுது
இறக்கை மூன்று இருக்குது
இருந்தும் பறக்க சுணங்குது!

கூரைத் தளத்தில் தொங்குது
குளிரக் காற்றைத் தருகுது
யாரும் விரும்பிச் சுழலுது
எங்கும் நிறைந்து காணுது!

பூங்கோதை கிருஷ்ணராஜ்,
கீரப்பாளையம்.





# அழகு

காரிருள் போக்கும் கதிரொளி அழகு!
கார்முகில் தூவும் பூமழை அழகு!
பேரொளி பொழியும் பொன்மதி அழகு!
பூமணம் ஏந்தும் தென்றல் அழகு!

கனிகள் குலுங்கும் மரங்கள் அழகு!
குளுமை கொஞ்சும் நிழலும் அழகு!
பனி, தேன் வழியும் சோலைகள் அழகு!
பூத்த மலர்களின் நறுமணம் அழகு!

கல்வியைக் கற்பது மிக மிக அழகு!
குற்றம் களைந்து கற்பதும் அழகு!
கற்பதற் கேற்ப நடப்பது அழகு!
கடமைகள் நாளும் செய்வது அழகு!

— கா. அமீர்ஜான், திருநின்றவூர்





# பொம்மை

பொம்மை நல்ல பொம்மை
பெரிய சிறிய பொம்மை

யானை, பூனை பொம்மை
அழகு கொஞ்சும் பொம்மை

தம்பி பாப்பா கையில்
தவழும் வண்ண பொம்மை

மண்ணால் செய்த பொம்மை
மணியால் செய்த பொம்மை

தோலால் செய்த பொம்மை
துணியால் செய்த பொம்மை

பார்க்க பார்க்க அழகு
பாங்காய் வைத்தால் பொலிவு!

மேலப்பாதி
எஸ். நாகராஜன்.




# என்ன பழமொழி? - போட்டி



முதல் தொகுதி

















இரண்டாம் தொகுதி

இங்கு இரண்டு தொகுதிகளாகப் பதினாறு படங்கள் உள்ளன. இவற்றில் முதல் தொகுதியில் உள்ளவற்றின் முதல் எழுத்தையும், இரண்டாவது தொகுதியில் உள்ளவைகளின் இரண்டாவது எழுத்தையும் எடுத்துப் பொருத்தினால் உங்களுக்கு மிகவும் அறிமுகமான ஒரு பழமொழி கிடைக்கும். பழமொழியை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 30.9.97. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். ஒன்றுக்கு மேற் பட்டவர்கள் சரியான விடை எழுதினால், பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097



# பாப்பாவுக்குப் போட்டி!

உலகம் முழுவதும் சிறுவர்களும் விளையாட்டுப் பொருள்களும் பிரிக்க முடியாதவை. இந்த விளையாட்டுப் பொருள்கள் பட்டியலில் கிலுகிலுப்பையிலிருந்து பந்து, பேட் வரை உண்டு. கற்காலத்தில் கூட கல்லால் ஆன பந்துகள் இருந்தனவாம்!

இன்றைய சிறுவர் விளையாட எத்தனையோ விதமான கண்கவர் விளையாட்டுப் பொருள்கள் வந்துவிட்டன. விளையாட்டு என்றாலே ஏதோ ஒரு பொருளை வைத்துக் கொண்டு விளையாடுவது என்ற நிலை வந்துவிட்டது.

இப்பொழுதெல்லாம் பேட்டரி வைக்கப்பட்டு பொம்மைகள் உயிருள்ளவையோ என்று சந்தேகப்படும் அளவுக்கு ரிமோட் கண்ட்ரோலால் இயக்கப்படுகின்றன. இவை பேசுகின்றன! நடக்கின்றன, கைகுலுக்கி வாழ்த்துகின்றன.

இத்தனை பொம்மைகள் இருந்த போதிலும், தொடர்ந்து இவைகளால் குழந்தைகளை மகிழ்விக்க முடியவில்லை. காரணம், இவை எல்லாம் ஒரே மாதிரிப் பேசவோ, பாடவோ, இயங்கவோதான் செய்கின்றன. அதனால் நாளடைவில் அலுப்புத்தட்டி விடுகிறது.

வீட்டில் ஒரு சின்னப் பாப்பா இருந்து விட்டால் அதனுடன் விளையாடி மகிழ்வதே தனிச் சிறப்புதான். பெரும்பாலான குடும்பங்களில் விளையாடப் பாப்பா இருப்பதில்லை. அண்ணன் அல்லது அக்காவோடு ஒரு பாப்பாவும் இருக்கும் வீடுகளில் பாப்பாக்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் பெரும்பாலும் தரப்படுகிறது. இந்த அண்ணனுக்கோ, அக்காவுக்கோ ஏழு வயது கூட ஆகியிருக்காது. ஆனாலும் பாப்பாவின் வரவால் அண்ணனாகவோ அல்லது அக்காவாகவோ பதவி உயர்வு பெற்றுவிட்ட காரணத்தால் இவர்கள் பெரியவர்களாகவே கருதப்பட்டு அதற்குரிய எதிர்பார்ப்புகளோடு நடத்தப்படுகிறார்கள். இவர்களும் குழந்தைகளே என்று பெரியவர்கள் எண்ணுவதில்லை. "குட்டிப் பாப்பாவால் தானே, நமக்கு பெற்றோரின் முழு அன்பும் கிடைப்பதில்லை என்று குட்டிப் பாப்பாவைப் போட்டியாகக் கருதும்-அளவுக்கு இவர்களுக்கு சில நேரங்களில் வெறுப்புக் கூட ஏற்பட்டு விடுகிறது. சில வீடுகளில் பெரியவர்களே தங்கள் பேச்சு நடத்தையால் தங்களை அறியாமல் இதற்குக் காரணமாகிறார்கள். "அம்மா இனி உன்னைக் கொஞ்ச மாட்டா. அப்பா இனி உன்னோடு விளையாட மாட்டார்" என்று இவர்கள் வேடிக்கையாக மிரட்டி, ஆழம் பார்ப்பது எத்தனை வேதனையான விளைவுகளை பெரிய குழந்தைகளின் மனத்தில் ஏற்படுத்துகிறது!

இந்த மாதிரிக் குழந்தைகளின் மனத்தில் குட்டிப்பாப்பாக்களைப் பற்றிய பகை உணர்வுகளை விதைக்காமல் 'பார்த்தியா, இனிமேல் விளையாட நீ வெளியே போகவே வேண்டாம். பாப்பாவே உன்னோடு விளையாடும்; சிரிக்கும். நீயும் பாப்பாவுக்கு விளையாட்டுக் காட்டு; சிரிக்கவை. நீ குட்டி அண்ணாவாச்சே! 'என்றெல்லாம் சொல்லி பாப்பாவுக்கும் குழந்தைகளுக்குமிடையே ஒரு அன்புப் பிணைப்பை ஊன்றி வைத்தால் அது எத்தனை பாசப் பிணைப்பாக இருக்கும்?'

பூங்காக்களில் சின்னப் பாப்பாக்கள் வந்து விட்டால், அதனுடைய அன்பைக் கவரவும், அதைத் தூக்கி வைத்துக் கொஞ்சவும் எத்தனை குழந்தைகள் போட்டி போடுகின்றன!

எத்தனையோ பொம்மைகள் நவீன விளையாட்டுப் பொருள்கள் இருந்தும் ஒரு குட்டிப் பாப்பாவோடு விளையாடுவது என்பது எத்தனை மகிழ்ச்சி தரக்கூடியது! காரணம் பாப்பாக்கள் பொம்மைகளைப் போல் ஒரே மாதிரி இயங்காது; பேசாது. புதிது புதிதாகப் பேசி, பாடி, ஆடி, அழுது அடம் பண்ணி, குறும்பு பண்ணும்; அன்பு காட்டும்; சிரித்து மகிழ்விக்கும்.

அட்டையில் குட்டித் தம்பி ரோஹித்துடன் விளையாடுவது வைஷ்ணவி

**வண்ணப்படம் : ஸ்ரீஹரி**




அவர் ஒரு பெரிய பண்டிதர். அந்த ஊரில் தன்னை மிஞ்சியவர் யாரும் கிடையாது என்று கர்வம் கொண்டவர். அதே ஊரில் ஒரு விவசாயி வசித்து வந்தார். அவர் நல்ல விவேகி. பரோபகாரி. பண்பானவர், அடக்கமானவர். தான் அவரை அடுத்த நாள் சந்திக்க வருவதாக ஒரு ஆள் மூலம் தகவல் அனுப்பினார் பண்டிதர்.

மறுநாள் விவசாயியின் வீட்டிற்குப் பண்டிதர் வந்தபோது விவசாயி வீட்டில் இல்லை. "முன்பே தகவல் தெரிவித்தும் இந்த விவசாயி வீட்டில் இல்லையே! என்ன அவமதிப்பு!" என்று கோபங் கொண்ட பண்டிதர் அவர் வீட்டுச் சுவரில் "கிறுக்கன்" என்று எழுதிவிட்டுப் போய்விட்டார்.

அன்றுமாலை விவசாயி பண்டிதர் வீட்டுக்கு ஓடினார்.

"மன்னித்து விடுங்கள். தவிர்க்க முடியாத வேலையாக வெளியே போயிருந்தேன். எங்கவீட்டுச் சுவரில் உங்கள் பெயரை எழுதி வைத்துவிட்டு வந்திருந்ததைப் பார்த்தேன்" என்றார் விவசாயி.

பண்டிதருக்குத் தலை இறங்கியது!

**— ஏழ்வரைக்கடியான்**

# யார் நினைப்பு வருகிறது? — போட்டி முடிவு

எந்த அளவுக்கு அறிவியல் அறிஞர்களைப் பற்றிய செய்திகளை வாசகர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவே இந்தப் போட்டி தரப்பட்டது. என்ன காரணமோ தெரியவில்லை, எதிர்பார்த்த அளவுக்கு வாசகர்கள் இதில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ளவில்லை. அப்படிக் கலந்து கொண்டவர்கள்கூட, தவறான விடைகளையே தந்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது போதிய அளவுக்கு அறிவியல் உணர்வு இல்லையே என்ற வருத்தமே ஏற்படுகிறது. எல்லாம் சரியான விடை எழுதிய மூவர். பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

**ரூபாய் ஐம்பது பரிசு பெறுவோர்:**


1. வி. அஜய் ராஜா, இராமநாதபுரம்
2. மோனாலிசா எடின்பரோ, வடக்கன்குளம்
3. மனீஷா மணிமாறன், 627 116 நெல்லை மாவட்டம்

**சரியான விடை:**

1. தொலைபேசி - கிரகாம்பெல்
2. கோழி அடைகாத்தல் - தாமஸ் ஆல்வா எடிசன்
3. மலேரியா கொசு - ரொனால்டு ராஸ்
4. தொலைக்காட்சி - ஜான் லோக் பெய்ர்டு
5. பைசா கோபுரம் - கலிலியோ
6. சர்வாதிகாரி ஹிட்லர் - ஐன்ஸ்டீன்
7. ஆப்பிள் - சர் ஐசக் நியூட்டன்
8. தாவரங்களுக்கும் உயிர் - ஜெகதீஸ் சந்திர போஸ்
9. மனிதக் குரங்கு - டார்வின்
10. குளியலறை குளிக்கும் தொட்டி - ஆர்க்கிமிடிஸ்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.


HORROR
Special
IN SEPTEMBER ISSUE
• PET FROGS
• GHOSTS
• HAUNTED CASTLE
• Science & Superstition • New Picture Story • Painting competition winners
GOKULAM
47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 97.



# என் தவறுக்காக...!

க. இராமச்சந்திரன்

பொழுது விடிவதற்கு முன்பே முத்துப்பாண்டி எழுந்து விட்டான். இன்னும் சற்று நேரத்தில் போக்குவரத்து அதிகமாகி விடும். சீக்கிரமே பஸ் ஸ்டாண்டிற்குப் போனால்தான் வியாபாரம் செய்ய முடியும் என்ற வேகம் அவன் நடையில் தெரிந்தது.

“எங்கடா பார்த்துக்கிட்டு நிக்கறே? கூடைல உள்ள வெள்ளரிப் பிஞ்சுகளைப் பிரிச்சுக் கட்டு” என்று உத்தரவிட்டார் முதலாளி.

கூடை நிறைய வெள்ளரிப் பிஞ்சுகள் குவிந்து கிடந்ததைப் பார்க்கவே வெகு அழகாக இருந்தது.

சிறியதும் பெரியதுமாக இருந்த வெள்ளரிப் பிஞ்சுகளை அளவு, தரம் பார்த்து, ஒரு கட்டுக்கு ஐந்து, ஆறு என்று எடுத்து விறு விறுவென்று வாழை நாரினால் கட்டி வைத்தான்.

பஸ் ஸ்டாண்டில் எத்தனையோ பேர் வெள்ளரிப் பிஞ்சுகளை விற்றாலும், முதலில் வியாபாரத்தைத் தொடங்குவது முத்துபாண்டிதான். தன் வயதையொத்த சிறுவர்கள் பள்ளிக்குச் செல்வதை பஸ் வராத நேரங்களில் முத்துப்பாண்டி ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருப்பான்.

முத்துப்பாண்டிக்கு யாருமே கிடையாது. அனாதையாக அலைந்து திரிந்த அவனை கடலை கூறு கட்டி விற்கும் ஆயா ஒருத்திதான் வளர்த்து வந்தாள். அவளுக்கும் வசதி இல்லாததால் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்க முடியவில்லை. முத்துப்பாண்டி கொஞ்சம் பெரியவனானவுடன் வெள்ளரிப் பிஞ்சு விற்க அனுப்பி விட்டாள்.

தினமும் முத்துப்பாண்டி ஏதாவது சம்பாதித்து வந்தால்தான் ஆயாவால் சோறு போட முடியும்.

பஸ் ஸ்டாண்டிற்குள் வராமல் ஒரு பஸ் வெளியே சாலையிலேயே நின்றது. பஸ் நிறையப் பயணிகள். வேகமாக ஓடினான் முத்துப்

பாண்டி.

வியாபாரம் செய்து கொண்டிருந்த அத்தனை பேரிலும் வயதிலும், உயரத்திலும் குறைந்தவன் முத்துப்பாண்டிதான்.

உயரமானவர்களின் கையில் இருந்த பிஞ்சுகள் வேகமாக விற்பனையாயின. பஸ் ஜன்னல் விளிம்புக்கு அருகே வெள்ளரிக் கட்டுகளைத் தூக்கிக் காட்டி அவனால் வியாபாரம் செய்ய முடியவில்லையே? முத்துப்பாண்டி ஏமாற்றத்துடன் திரும்பினான்.

பசி எடுத்தது, இரண்டு மூன்று பிஞ்சுகளை எடுத்து வேகமாகச் சாப்பிட்டான். காசு இல்லாமல் வீட்டுக்கு சாப்பிடப் போனால் ஆயா திட்டுவாள். எப்படியாவது விற்க வேண்டுமென நினைத்துக் கொண்டிருந்த முத்துப்பாண்டியின் முன், பெரிய சத்தத்துடன் அடுத்த பஸ் வந்து நின்றது.

தட்டைத் தூக்கிக் கொண்டு வேகமாகச் சென்றான். "ஐயா வெள்ளரிப் பிஞ்சு, அம்மா வெள்ளரிப் பிஞ்சு, பூ உதிராத சாத்தூர் வெள்ளரிப் பிஞ்சு, கட்டு ஒரு ரூபா, ஒரு ரூபா...!" தொண்டைக் கிழிய கத்தினான் முத்துப்பாண்டி.

பெரியவர் ஒருவர் முத்துப்பாண்டியை அழைத்தார். "தம்பி ரெண்டு கட்டுக் கொடு" என்று கேட்டு வாங்கிப் பிஞ்சுகளை மடியில் போட்டுக் கொண்டு காசைத் தேடினார்.

பஸ் நகர ஆரம்பித்தது. அவன் பதறியபடி பஸ் கூடவே ஓடினான். பெரியவர் சட்டென்று காசைத் தூக்கி எறிந்தார்.

முத்துப்பாண்டி காசு விழுந்த இடத்தில் சுற்றிச் சுற்றித் தேடினான்.

விழுந்த காசு போன இடமே தெரியவில்லை! கால் விரலால் கிளறிப் பார்த்தான். ஒன்றும் பயனில்லை. மிகவும் வருத்தத்துடன் இருந்தான். நேரம் போனதுதான் மிச்சம். மனத்தில் கனத்துடன் எதிரே வந்த பஸ்ஸை நோக்கி வியாபாரம் பிடிக்க நகர்ந்தான். பஸ்ஸில் இருந்து இறங்கிய அதே பெரியவர், "தம்பி" என்று கூப்பிட்டுக் கொண்டே அவன் தோள்களைத் தொட்டார்.

"ஐயா நீங்க!" என்று சந்தேகத்துடன் இழுத்தான் முத்துப்பாண்டி.

"இப்ப போன பஸ்ஸிலிருந்து உன்கிட்ட வெள்ளரிப் பிஞ்சு வாங்கினேனே? காசு கொடுக்குறதுக்குள்ள பஸ் கிளம்பிடுச்சு! தூக்கிப் போட்ட காசு கிடைத்ததா தம்பி?" என்றார் பெரியவர்.

இல்லையென்பது போல் தலையாட்டினான். பெரியவர் மனிதாபிமானத்துடன் ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தார்.

"எனக்கு இந்த ரூபாய் வேண்டாங்க ஐயா. நீங்க வாங்கினதுக்கு காசைக் கொடுத்திட்டுங்க. நான்தான் இன்னும் கவனமாயிருந்து எடுத்திருக்கணும். என்னுடைய கவனக்குறைவுக்கு; என்னுடைய தவறுக்கு நீங்க நஷ்டப் படக் கூடாதுங்க" என்றான் முத்துப்பாண்டி.

பெரியவர் கேட்பதாக இல்லை. மேலும் மேலும் வற்புறுத்தினார். "ஐயா ஒன்னு பண்ணுங்க. இந்தக் காசுக்கு வெள்ளரிப் பிஞ்சு வாங்கிக்குங்க. எனக்கும் வித்தது மாதிரி இருக்கும்'' என்றான்.

''சரி மூணு கட்டு வெள்ளரிப் பிஞ்சு குடு. மீதி இரண்டு



ரூபாயைத் தொலைத்த காசுக்குப் பதிலா வச்சுக்க. தப்பு என்னோடதும்தான். நான் வேகமாக எடுத்து உன் கையில கொடுத்திருந்தா இப்படி ஆகியிருக்காது இல்லையா?" என்றார் பெரியவர்.

முத்துப்பாண்டி அரைமனதுடன் வாங்கிக் கொண்டான். பெரியவர் நிம்மதியுடன் நகர்ந்தார்.

அடுத்த பஸ்ஸை நோக்கி நகர்ந்த முத்துப்பாண்டியின் காலில் ஏதோ இடறியது. குனிந்து பார்த்தான். பெரியவர் வீசிய இரண்டு ரூபாய் நாணயம்! கையிலெடுத்தவன் பெரியவர் சென்ற திசையை நோக்கி வேகமாக ஓடினான்.

பஸ்ஸிற்காகக் காத்திருந்த பெரியவரிடம், "ஐயா ஐயா! இந்தாங்க ரெண்டு ரூபாய்; இப்பத்தான் கிடைச்சுச்சு" என்று மூச்சிரைக்கக் கூறினான்.

முத்துப்பாண்டியின் நாணயமான குணத்தை அறிந்த பெரியவர், "இத்தனை புத்திசாலித்தனமா இவ்வளவு நாணயமா இருக்குற நீ, ஏன் பள்ளிக்குப் போய்ப் படிக்காம இப்படி வெள்ளரிப் பிஞ்சு விக்கறே?" என்று கேட்டார்.

முத்துப்பாண்டி தனக்குப் படிக்க ஆர்வம் இருந்தாலும், பள்ளிக்குப் போக முடியாததற்கான காரணத்தைக் கூறினான்.


"எங்க ஊர்ல நானும் என் நண்பர்களும் ஓர் ஆசிரமம் நடத்திக் கொண்டிருக்கிறோம். உன்னைப் போன்ற கல்வியில் ஆர்வமுள்ள, திக்கற்ற மாணவர்களைப் படிக்க வைக்கிறோம். நீ அங்கு வந்து படிச்சிக்கிட்டே, மீதி நேரத்துல பெரியவர்களுக்கு உதவி செய்வது, தோட்டத்தைப் பராமரிப்பது போன்ற உன்னால் முடிந்த சின்னச் சின்ன வேலைகளைச் செய்யலாம். வருகிறாயா?" என்றார்.

தயங்கியபடி நின்றான் முத்துப்பாண்டி.

"தம்பி, உன்னை மாதிரி புத்திசாலித்தனமும், பண்பும் ஒழுக்கமும் மிகுந்தவர்கள் எங்க ஆசிரமத்துல தங்கிப் படிக்கிறதை நான் பெருமையாக நினைக்கிறேன்" என்று வலியுறுத்தினார் பெரியவர்.


முத்துப்பாண்டி மகிழ்ச்சியில் திக்குமுக்காடினான். அவரையும் அழைத்துக் கொண்டு ஆயாவிடம் போய் அனுமதி வாங்கினான். ஆயா தடையேதும் சொல்லவில்லை. வாழ்த்தி அனுப்பினாள்.

அடுத்து வந்த பஸ்ஸில் பெரியவரோடு முத்துப்பாண்டியும் ஏறினான். வெள்ளரிப் பிஞ்சு விற்றுக் கொண்டிருந்த மற்றவர்கள் முத்துப்பாண்டியின் வாழ்க்கை செழிக்க இருப்பதை அறிந்து வாழ்த்தினார்கள்.




# பள்ளியில்

**உலகத்தில் கண்கலங்காதவர்களே கிடையாது. கண்கலங்குவது என்பது வருத்தமடையும்போது மட்டுமே ஏற்படும் நிலை அல்ல. மகிழ்ச்சியடையும்போதும் கூடக் கண்கலங்குவது உண்டு! உள்ளம் உருகும்போதும் கூடக் கண்கலங்குவது உண்டு. இங்கே தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் புனித பீட்டர் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் ஆறுபேர் பள்ளியில் தாங்கள் கண்கலங்கிய அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்...**



• செல்வ சேகர்



• ஜெனஸிஸ் டெனிலா

**ஜெனஸிஸ் டெனிலா :**

**நா**ன் எட்டாம் வகுப்பு. எங்கள் தமிழாசிரியர் எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகுவார். எங்களுக்கு ஆசிரியராக மட்டுமல்லாமல் நண்பராகவும் நடந்து கொள்வார். கொஞ்ச நாள் முன்பு வேலையிலிருந்து ஓய்வு பெற்றார். பள்ளியில் அவருக்குப் பிரிவு உபசார விழா நடைபெற்றது. விழாவில் கடைசியாகப் பேசிய தமிழாசிரியர், "பசுமை நிறைந்த நினைவுகளே, பாடித் திரிந்த பறவைகளே" என்று கண்ணீருடன் பாடிய போது நான் கண்கலங்கி விட்டேன்!

**பரலோகச் செல்வி :**

**எ**ங்கள் வகுப்பில் அனைவரும் தினமும் பாடச் சீட்டு (Homework Record) எழுதி வர வேண்டும். அதாவது, நான் நேற்று இரவு பாடம் படித்தேன், காலையில் குளித்தேன் என்று எழுதி அம்மா, அப்பா விடம் கையெழுத்து வாங்கிட்டு வரணும். ஒருநாள் நான் படிக்காமல், குளிக்காமல் அம்மாவைக் கட்டாயப்படுத்தி படித்தேன், குளித்தேன்னு கையெழுத்து வாங்கிட்டுப் போனேன். என்னோட பொய்யைக் கண்டு பிடித்து விட்ட டீச்சர், "பொய் சொல்லக் கூடாது" என்று பலர் முன்னிலையில் அறிவுரை சொன்னபோது, கண் கலங் கினேன். தவறு என்னுடையதுதானே? என் நன்மைக்காகத்தானே டீச்சர் அறிவுரை கூறினார் என்பதை எண்ணி மறுபடி இந்த மாதிரி செய் யாமல் இருக்க முடிவெடுத்தேன்.

**மோசஸ் ராயப்பன் :**

**ஏ**ழாம் வகுப்பு படிக்கும் நான் எப்போதும் ஐந்தாவது ரேங்க் வாங்கிக் கொண்டிருந்தேன். எப்படியும் முதல் ரேங்க் வாங்கிடணும்னு முடிவு செஞ்சு முழுமூச்சுடன் படிக்க ஆரம்பிச்சேன். எல்லாப் பாடத்தையும் நல்லாப் படிச்சு தேர்வையும் திருப்தியாக எழுதினேன். என் நண்பர்களிடம், "நான் இந்தத் தடவை முதல் ரேங்க் வாங்கிடுவேன்னு" கம்பீரமாகக் கூறிப் பெருமைப்பட்டேன். பேப்பர் திருத்தி வந்தபோது நான் வாங்கியது எட்டாவது ரேங்க்தான் என் பதை அறிந்து திகைத்தேன். சாதாரணமாகப் படிக்கும் போது கூட ஐந்தாம் ரேங்க் வந்த நான், மிக நன்றாக உழைத்துப் படித்து எழுதிய போதும் எட்டாவது ரேங்க் தான் எடுத்தேன் என்பதை நினைத்தபோது கண்கலங் கினேன். ரேங்கைக் கோட்டை விட என்ன காரணம்

# கண் கலங்கினேன்!

என்பதை அறிந்து கொண்டு திருத்திக் கொண்டேன் என்பது வேறு கதை.



• பரலோகச் செல்வி



• மோசஸ் ராயப்பன்

**செல்வ சேகர் :**


**நா**ன் படித்த பழைய பள்ளியில் வகுப்பில் என் பக்கத்திலிருக்கும் மாணவன் ஒருவன் டீச்சரின் பேனாவை எடுத்து விட்டான். டீச்சர் எல்லோரிடமும் கேட்டுப் பார்த்தாங்க. யாரும் எடுக்கலைன்னு சொன்னோம். பேனா எடுத்தவன் திடீரென்று என் பாக்கெட்ல பேனாவைப் போட்டுட்டு, "டீச்சர் செல்வ சேகர் பாக்கெட்டுல உங்க பேனா இருக்குன்னு" சொல்லிவிட்டான். நான்தான் பேனாவை எடுத்தேன்னு நினைச்சு டீச்சர் திட்டினாங்க. என்மேல் சுமற்றப்பட்ட செய்யாத குற்றத்தைக் கேட்டதும் நான் கண்கலங்கினேன். பின்னால் என் மேல் சுமற்றப்பட்ட பழி நீங்கிவிட்டபோதும் நான் கண்கலங்கினேன்.

**விக்டர் இம்மானுவேல் ராஜ் :**

**ந**ல்லா படிப்பேன், தவறாமல் வீட்டுப் பாடம் செய்வேன். இதனால் ஆசிரியர்களுக்கு என் மேல் நல்ல அபிப்ராயம் இருந்தது. ஒருநாள் கணித ஆசிரியர் வீட்டுக் கணக்கைக் கொடுத்து மறுநாள் செய்து வரும்படி கூறினார். ஏதோ காரணத்துனால வீட்டுக் கணக்கைச் செய்ய மறந்து விட்டேன். மறுநாள் "ஏன் வீட்டுக் கணக்கு செய்யாமல் பள்ளிக்கு வந்தே? இனிமேல் இப்படிச் செய்யாதே" என்று டீச்சர் அறிவுரை சொன்ன போது கண்கலங்கி நின்றேன். தவறு என்னுடையது தானே? செய்த தவறுக்குத் தானே ஆசிரியர் அறிவுரை கூறினார்?



• கலைச்செல்வி



• விக்டர் இம்மானுவேல் ராஜ்

**கலைச் செல்வி :**

**நா**ன் பள்ளியில் எப்பவும் அமைதியாக இருப்பேன். ஆசிரியரைப் பார்த்தவுடனே கை, கால் நடுங்கும். சுமாராகத்தான் படிப்பேன். ஊருக்குப் போறதுக்காக அம்மா என்னை ஒருநாள் லீவு போடச் சொன்னாங்க. "லீவு லெட்டர் கொடுத்தாத்தான் டீச்சர் அனுமதிப்பாங்கன்னு" சொன்னேன். "உங்க டீச்சர்கிட்ட நானே நாளைக்கு வந்து சொல்லிடறேன்னு" அம்மா ஊருக்குக் கூட்டிட்டுப் போயிட்டாங்க. மறுநாள் பள்ளிக்குப் போனேன். ஆனால் அம்மா சொன்னபடி வரலை. "சொல்லாமல் ஏன் லீவு போட்டே?" என்று டீச்சர் அறிவுரை கூறிய போது கண்கலங்கினேன்.

பேட்டி, படங்கள்
**வேடப்பட்டி கற்குவேல்**

பாண்டியன் காணாமல் போய் நான்கு நாட்களாகி விட்டன. காலையில் பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்றவன் மாலையில் வீடு திரும்பவே இல்லை. நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் எல்லாம் தேடியாகி விட்டது. பயனில்லை. காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கப்பட்டது. வீடே சோகத்தில் மூழ்கி இருந்தது.


'சார்' என்ற குரல் வாசலில் கேட்டது.

போலீஸ்காரர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். "என்ன சார்!" பாண்டியனைப் பற்றி ஏதாவது செய்தி கிடைத்ததா? கிடைத்து விட்டானா? இருக்குமிடம் தெரிந்ததா?" ஆர்வத்தோடு கேள்விகளை அடுக்கினார் அப்பா.

"லாரியில் அடிபட்ட ஒரு சிறுவன் கிடைத்திருக்கிறான். அது உங்கள் பையனா இல்லையா என்று அடையாளம் காட்ட வேண்டும்" என்று தயங்கித் தயங்கிக் கூறினார் போலீஸ்காரர்.

இதைக் கேட்டதும் 'ஓ' என்று அலறிக் கொண்டே மயங்கிச் சாய்ந்தாள் பாண்டியனின் அம்மா. அம்மாவைக் கவனிக்கும்படி வேலைக்காரியிடம் கூறி விட்டு, கண்ணாடியைக் கழற்றி கண்களைத் துடைத்துக் கொண்டு போலீஸ்காரருடன் சென்றார் அப்பா.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பாண்டியனின் நண்பன் செழியனுக்கு துக்கம் பொங்கியது. அழுகையை அடக்கிக் கொண்டான். "பாண்டியன் உயிரோடு தான் இருக்கிறான். சீக்கிரமே வந்து விடுவான்" என்று அவன் உள் உணர்வு கூறிக் கொண்டே இருந்தது.



தோட்டத்திற்குள் நுழைந்து புல் தரையில் அமர்ந்தான் செழியன். பறவைகள் விதவிதமான தொனியில் பாடிக் கொண்டிருந்தன. பூச்செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்த தோட்டாக்காரரின் மகன் சிறுவன் மணி, ஏதோ பாடிக் கொண்டிருந்தான். தற்செயலாகப் பாட்டை உற்றுக் கேட்டான் செழியன்.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்கா
காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளைக்
காரன்".

# வேணு சீனுவாசன்

# உனக்கும் கூடத் தெரியுமா?

பாடலைக் கேட்டதும் துள்ளி எழுந்தான் செழியன். அவன் முகத்தில் திகைப்பு, மகிழ்ச்சி எல்லாம்.

"மணி, இந்தப் பாட்டு உனக்கு எப்படித் தெரியும்?" என்று உலுக்கினான் செழியன்.


"ஒரு பையன் சொல்லிக் கொடுத்தான்"

"அவன் வீடு எங்கே இருக்கு?"

"மீனவர் குப்பத்துல" என்றான் மணி.

இதற்குள் போலீஸ்காரருடன் சென்ற பாண்டியனின் அப்பா, திரும்பி வந்து விட்டார். இறந்து கிடந்தது பாண்டியன் அல்லவாம். அதுவரை நிம்மதி.

தொலைபேசி மணி அடித்தது. பாண்டியனின் அப்பா ரிசீவரை எடுத்தார். மென்மையான பெண் குரல் பேசியது. "பாண்டியனை உயிரோடு பார்க்கணும்னா ஒரு லட்ச ரூபா எடுத்துக்கிட்டு, நாகவல்லி அம்மன் கோவிலுக்கு ராத்திரி பத்து மணிக்கு நீ மட்டும் வா. போலீஸ் வந்ததுன்னா பையன் குளோஸ்!"



பதட்டத்தோடு பணம் திரட்டும் முயற்சியில் ஈடு பட்டார் பாண்டியனின் அப்பா.

"அங்கிள்" என்று அவரை அழைத்தான் செழியன். அவர் அவனை சோகத்துடன் பார்த்தார்.


"பாண்டியன் இருக்கக்கூடிய இடம் ஓரளவுக்கு எனக்குத் தெரிந்து விட்டது" என்ற செழியனை ஆச்சரியத்தோடு பார்த்தார் பாண்டியனின் அப்பா.

செழியன் தொடர்ந்தான். "பாண்டியனை யாரோ கடத்திச் சென்று மறைத்து வைத்திருக்கிறார்கள். அவன் அங்கிருந்து செய்தி அனுப்பி இருக்கிறான்"

"அப்படியா!" என்ற பாண்டியனின் தந்தை தொலை பேசி மிரட்டலைப் பற்றி செழியனிடம் கூறினார்.

"பார்த்தீர்களா? என்னுடைய கணிப்பு சரியாகி விட்டது! வாருங்கள் காவல் துறைக்கு தகவல் சொல்லிவிட்டு நாம் அந்த இடத்திற்குப் போகலாம்" என்று அவசரப்படுத்தி அவரைக் கிளம்ப வைத்தான் செழியன்.

**ம**ணியை அழைத்துக் கொண்டு மீனவர் குப்பத்தை அவர்கள் அடைந்தனர். மஃப்டியில் இரண்டு போலீஸ்காரர்கள், அங்கு தயாராக இருந்தனர்.



''டேய் சேகர்! முனிசிபாலிடில நாய் பிடிக்கிறாங்களாம்; நம்ம டாமியை வெளியே விட்டுடாதே... நீயும் வீட்டுக்குள்ளேயே இரு!''

— சீர்காழி வி. ரேவதி

''மணி, உனக்கு அந்தப் பாட்டை சொல்லிக் கொடுத்த பையனை அழைத்துக் கொண்டு வாயேன்?'' என்றான் செழியன்.

குடிசைகள் நெருக்கமாக இருந்தன. வீட்டு வாசலில் மீன் பிடிக்கும் வலைகள் காய வைக்கப்பட்டிருந்தன. புன்னை மரங்களின் நிழலில் சிறுவர் பட்டாளம் பம்பரம் விட்டுக் கொண்டிருந்தது. பெண்கள் மீன்களை வெயிலில் பரப்பி உலர்த்திக் கொண்டிருந்தனர்.

ஒரு சின்ன குடிசை வாசலில் நின்ற மணி "ஏழுமலை, ஏழுமலைப் பையா?" என்று குரல் கொடுத்தான்.

டிராயரை இடுப்பில் செருகிக் கொண்டு சட்டை அணியாத உடம்புடன் ஒரு சிறுவன் ஏழுமலையாகத் தான் இருக்க வேண்டும் வெளியே வந்து, "என்னடா மணி?" என்று கேட்டான்.

"அந்தப் பாட்டைப் பாடேன்?" என்றான் மணி.

ஊரான் ஊரான் தோட்டத்திலே' என்று ஆரம்பித்து அதே பாடலைப் பாடி முடித்தான் ஏழுமலை.

இந்தப் பாட்டு உனக்கும்கூடத் தெரியுமா? மணிக்கு மட்டும்தான் தெரியும்னு நினைச்சேன்!" என்று ஏழுமலையிடம் தன் வியப்பைத் தெரிவித்து உசுப்பினான் செழியன்.

"எனக்கும்கூடத் தெரியுமாவாவது! இந்த மணிப் பையனுக்கே நான்தான் இதைச் சொல்லிக் கொடுத்தேன்" என்று ஜம்பமாகச் சொன்னான் ஏழுமலை.

"அப்படியா! ஆமாம், இந்தப் பாட்டை நீ எங்கிருந்து கத்துக்கிட்டே? என்று மறுபடி உசுப்பினான் மணி.

"காத்தாடி சிங்காரம் வீட்டுல, புதுசா ஒரு பையன் வந்திருக்கான். அவன்தான் இந்தப் பாட்டை எனக்குச் சொல்லிக் கொடுத்தான்" என்றான் ஏழுமலை.

''காத்தாடி சிங்காரமா? அவன் பழைய கேடி ஆயிற்றே! தம்பி, அவன் வீட்டைக் காட்டு'' - அதட்டினார் போலீஸ்காரர்.

ஏழுமலை பயந்து விட்டான். 'வாங்க போகலாம்' என்று சொல்லிக் கொண்டே வீட்டைக் காட்டுவதற்கு முன்னால் ஓடினான்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் காத்தாடி சிங்காரம் கைது செய்யப்பட்டான். அவனால் கடத்தி வந்து அடைத்து வைக்கப்பட்டிருந்த பாண்டியன் மீட்கப்பட்டான்.


''நாட்டுப் புறப் பாடல் ஒன்றை வைத்துக் கொண்டு பாண்டியன் இருக்குமிடத்தை எப்படிக் கண்டுபிடிச்சே!'' என்று ஆச்சரியத்தோடு செழியனிடம் போலீஸ்காரர் கேட்டார்.

''நானும் பாண்டியனும் இந்தப் பாடலை, ஆபத்தில் சிக்கி விட்டால் ரகசிய செய்தி பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தலாம் என்று விளையாட்டாகத் திட்டமிட்டு இருந்தோம்'' என்றான் செழியன்.

''பள்ளியிலிருந்து வீடு திரும்பும் வழியில் ஒரு பெண் என்னோடு பேச்சுக் கொடுத்து, என் முகத்தில் மயக்க மருந்தைத் தெளித்து, இங்கு அழைத்து வந்து விட்டான்'' என்றான் பாண்டியன்.

''காத்தாடி சிங்காரத்தின் கையாள்தான் அவன்'' என்றார் போலீஸ்காரர்.

''அவன்தான் என்னிடம் ஒரு லட்ச ரூபாய் கேட்டு போன் செய்தது'' என்றார் அப்பா.



"இரண்டு நாட்களாக ரொம்பவும் சிரமப் பட்டேன். எப்படித் தப்புவது என்று தெரியவில்லை. கடைசியில் பாடல் விஷயம் நினைவுக்கு வந்தது. இங்கிருந்த இரண்டு, மூன்று சிறுவர்களுக்கு இந்தப் பாடலைச் சொல்லிக் கொடுத்தேன். இந்தத் தகவல் எப்படியாவது உங்களுக்கு எட்ட வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டே இருந்தேன். கடவுள் கருணை வைத்தார் அப்படியே நடந்து விட்டது" என்றான் பாண்டியன்.

"நாட்டுப்புறப் பாடலை ரகசியச் செய்தி அனுப்பப் பயன்படுத்திய உங்கள் திறமையை நான் மிகவும் பாராட்டுகிறேன்" என்றார் போலீஸ்காரர்.

"மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிந்து கொள்ளப் பயன்படும் நாட்டுப்புறப் பாடலை வைத்து, இப்படி ஆபத்தில் இருந்து தப்பிக்கப் பயன்படுத்திய உங்கள் திறமையை வியக்காமல் இருக்க முடியாது" என்றார் அப்பா.

சிறுவர்களின் திறமையை எல்லோரும் பாராட்டிப் பல நாட்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

முகுந்தன் இவ்வளவு பிடிவாதமாய் இருப்பான் என்பதை அம்மா எதிர்பார்க்க வில்லை. கோடை விடுமுறை முடிந்து பள்ளி தொடங்கிவிட்டிருந்தது. ஒன்பதாம் வகுப்புக்குத் தேர்ச்சி பெற்று விட்டதால் பக்கத்து நகரத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிக்கு முகுந்தன் செல்ல வேண்டி யிருந்தது.



"அம்மா, நான் போய்ச் சேரப் போவது உயர்நிலைப் பள்ளிமா. எனக்கு போக வர சைக்கிளும் போட்டுக்க ஷூவும், புதுச் சட்டையும் கட்டாயம் வேணும். நீங்க இதையெல்லாம் வாங்கித் தரலேன்னா பள்ளிக்குப் போகவே மாட்டேன்" - உறுதியாகச் சொல்லி விட்டான் முகுந்தன்.

முகுந்தன் கேட்பதை வாங்கிக் கொடுத்து பள்ளிச் சம்பளம் கட்டி அவனைப் பள்ளியில் சேர்க்க வேண்டுமென்றால் குறைந்தது இரண்டாயிரமாவது வேண்டும். அப்பா வேலை பார்த்த நிர்வாகம், வேலை நீக்கம் செய்ததுமுதல் முழுக் குடும்பப் பொறுப்பும் தன் மீது விழ மிகவும் சிரமப்பட்டுக் குடும்பத்தை நிர்வகித்து வந்தாள் அம்மா.

குடும்பச் சூழ்நிலையைப் புரிந்து கொள்கிற வயது குழந்தைகளுக்கு இல்லை. வறுமையைக் காட்டி அவர்கள் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க அம்மாவுக்கு மனமில்லை.

தான் பத்துப் பாத்திரம் தேய்க்கும் வீடுகளில் தனது நிலையை எடுத்துச் சொல்லி, எப்படியோ கெஞ்சிக் கூத்தாடிக் கொஞ்சம் பணம் புரட்டினாள். ஆனால் அது முகுந்தனுடைய பள்ளிக் கட்டணத்திற்கும் புத்தகச் செலவுக்குமே இழுபறியாய் இருந்தது. இந்த நிலையில் சைக்கிளும் ஷூவும் வேண்டும் என்று அடம் பிடிக்கும் மகனை என்ன கூறிச் சமாதானம் செய்வது என்று புரியாமல் குழம்பினாள் அம்மா.

''அம்மா... அம்மா...'' ஆர்வமாய் அழைத்துக் கொண்டே உள்ளே வந்த முகுந்தனின் தம்பி ரமேஷ் புத்தகப்

பையைத் தோளி லிருந்து சுழற்றிக் கீழே வைத்துவிட்டு அம்மா வின் மடி மீது அமர்ந் தான்.

"அம்மா இனிமே நீங்க கவலைப் படாதீங்க. அண்ண னுக்கு சைக்கிளும் ஷூவும் வாங்க நான் பணம் கொண்டு வந்திருக்கேம்மா."

மகிழ்ச்சியாய்ச் சொல்லிக் கொண்டே புத்தகப் பையைத் திறந் தான் ரமேஷ்.

'என்னடா சொல்றே! ஒங்கிட்ட ஏது அவ்ளோ பணம்?"

விதிர்விதிர்ப்புடன் கேட்ட தாயின் கையில் தனது 'சஞ் சயிகா' சிறுசேமிப்புக் கணக்குப் புத்தகத்தைத் திணித்தான் ரமேஷ். அதைத் திறந்து பார்த்த அம்மாவுக்கு ஆச்சரிய மாய் இருந்தது.

ஆம், அதில் களை யாய் ஆயிரம் ரூபாய் இருந்தது. கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொறிய அப்படியே ரமேஷைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள் அம்மா.

"எங்க பள்ளியில் செயல்படும் 'சஞ் சயிகா' திட்டத்தில் இரண்டு வருடமா நான் சேர்த்த பணம்மா. நீங்க எப்ப வாவது கைச் செலவுக் குத் தர்ற காக, திரு



**மு. நடராசன்**

விழாக் காலங்களில் அத்தை மாமா தந்த காசு இவற்றை எல்லாம் அப்பப்போ சிந்தாம சிதறாம என் கணக்கிலே போட்டுடுவேன்.

"அது மட்டுமில்லாம, எங்க கைவினை ஆசிரியர் தந்த திறமையான பயிற்சியினால் நான் அழகழகா பொம்மை, பிற கலைப் பொருட்கள் செய்வேனில்லையா? அந்தப் பொருட்களை விற்றதில் கிடைத்த சிறு சிறு தொகையைக்கூட எனது சேமிப்புக் கணக்கில் போட்டேம்மா. அண்ணனுக்காக நீ இப்ப எவ்ளோ சிரமப்படறே. அதான் இப்போ முழுப் பணத்தையும் எடுத்திட்டு வந்திட்டேன்."

சிறுவனாய் இருந்தாலும் குடும்பத்தை எவ்வளவு தூரம் ஊடுருவி இருக்கிறான் என்பதை நினைத்தபோது உண்மையிலேயே அவனை நினைத்துப் பெருமைப்பட்டாள் அம்மா.

"முகுந்தா. ஏதோ பழைய சைக்கிள் பார்த்து வச்சிருக்கிறதா சொன்னியே போய் வாங்கிக்கோ"- பணத்தை நீட்டினாள் அம்மா.

மனசாட்சி சாட்டையால் அடித்தது முகுந்தனுக்கு. தன்னைவிட வயதில் சிறியவன் எவ்வளவு பொறுப்பாய் இருந்திருக்கிறான்! நாமும் தானே கைச் செலவுக்குப் பணம் வாங்கினோம்? அத்தையும் மாமாவும் நமக்கும்தானே பணம் கொடுத்தார்கள்? அந்த ஐந்தும் பத்தும்தானே இப்போது ஆயிரமாய் அவனிடம் சேர்ந்திருக்கிறது? நாம் முயன்றிருந்தால் அதைவிட அதிகமாய்ச் சேர்த்திருக்கலாமே?


இத்தனைக்கும், இதுதான் வேண்டும் என்று எப்போதும் எதற்காகவும் அவன் அடம் பிடித்ததில்லையே! புதிய சீருடை அம்மா தைத்துத் தர முன் வந்த போது கூட, "வேண்டாம்மா, அண்ணனுடைய சட்டை எனக்கு சரியாகத்தானே இருக்கு? அதையே போட்டுக்கறேன் என்று நாம் பயன்படுத்திய பழைய உடை, பழைய புத்தகம் என இவற்றிலேயே நிறைவடைந்து பள்ளி செல்கிறானே! அந்தப் பொறுப்புணர்ச்சி நமக்கு ஏன் இல்லாமல் போனது?

இந்தக் கோடை விடுமுறையைக்கூட வீணாக நண்பர்களோடு ஊர் சுற்றியும் கிரிக்கெட் ஆடியும்தானே கழித்தோம்? கொஞ்சம் பொறுப்பாய் இருந்து, விடுமுறையில் பயனுள்ள காரியத்தைச் செய்திருந்தால், குறைந்த பட்சம் நம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவாவது வழி கிடைத்திருக்குமே!

முகுந்தனின் மனசாட்சி சரியான நேரத்தில் சாட்டையால் அடித்தது. அம்மா கொடுத்த பணத்தைக் கை நீட்டி வாங்குவதற்கே வெட்கமாயிருந்தது அவனுக்கு.

'கடமையுணர்வும் பொறுப்பும் மிக்க தம்பி ரமேஷ் எங்கே; குடும்பத்தின் நிலை உணராமல் அம்மாவை அல்லல்படுத்தும் தான் எங்கே?' - ஒரு சுயமதிப்பீடு செய்து பார்த்தபோதுதான் தன்னைப் பற்றிய உண்மையான நிலை உறைத்தது முகுந்தனுக்கு.

இனி, தன்னுடைய உழைப்பின் மூலம் ஒரு சைக்கிளை வாங்கும் வரை நடந்தே பள்ளிக்குச் சென்று வருவது என்று மனதுக்குள் உறுதி எடுத்துக் கொண்டான் முகுந்தன்!



நேத்து இடிமழை, காத்து... கண்ணே முழிக்க முடியலடா...!


ஐய்யய்யோ அப்புறம்...

''அப்புறம் என்ன... கனவு முடிஞ்ச பிறகுதான் கண் முழிச்சேன்...

— நெற்குப்பை கி. மனோகரன்

அப்பா ஏன் அப்படிக் கோபித்துக் கொண்டார்? தான் ஒன்றும் செய்யக்கூடாத தவறைச் செய்துவிடவில்லையே. அது கூட, வேண்டுமென்றே செய்யவில்லையே? தற்செயலாக நடந்து விட்டது அவ்வளவுதான். அதற்காக இப்படியா திட்டுவார்கள்? நினைக்க நினைக்க மெய்யப்பனுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. குலுங்கிக் குலுங்கி அழுதான்.

# அப்பாவாம் அப்பா!



செல்லகணபதி

மெய்யப்பனின் அப்பா ரொம்பவும் நல்லவர். வாக்குத் தவறாதவர். ஒருவருக்கு ஒன்றைத் தருவதாகக் கூறிவிட்டால் எப்பாடுபட்டாகிலும் அதைக் கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். "நாம் எதாவது தந்து உதவுவதாகச் சொல்லியிருந்தால், அது கிடைத்தவுடன் இப்படி இப்படிச் செய்ய வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டிருப்பார்கள். அதனால், தருவதாகக் கூறிவிட்டதை உரிய காலத்தில் தந்தால்தான் சொன்னவர், தான் திட்டமிட்டபடி அதைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்'' என்பார். இப்படி, சொல்வதைச் செய்வது என்ற கொள்கையை சிறிதும் வழுவாமல் வைத்திருந்தார் மெய்யப்பனின் அப்பா. நெருங்கிய நண்பர்கள் அவரை 'அலாரம்' என்று கூடக் குறிப்பிடுவார்கள். அலாரம் கடிகாரம் காலம் தவறாமல் குறித்த நேரத்தில் அடித்து எழுப்புவது போல் அவர் செய்வதாகக் கூறும் உதவி தப்பாமல் வந்துவிடுமாம்!

அப்படிப்பட்ட அப்பாவின் நண்பர் கண்ணன், ஐநூறு ரூபாய் கைமாற்று வேண்டுமென்று கேட்டிருந்தார். மெய்யப்பனிடம் கொடுத்தனுப்புவதாக அப்பா சொல்லியிருந்தார்.

"கண்ணன் மாமாவின் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். டாக்டரிடம் போக ஐநூறு ரூபாய் பணம் கேட்டிருந்தார். பள்ளிக்குப் போகும்போது உன் மூலம் கொடுத்தனுப்புவதாகச் சொன்னேன். போகும் வழியில் கொடுத்துட்டுப் போ'' என்றார் அப்பா. அப்பா தந்த பணத்துடன் சைக்கிளில் கிளம்பினான் மெய்யப்பன்.

வழியில் பள்ளி நண்பன் சுந்தரமும் சைக்கிளுடன் சேர்ந்து கொண்டான். இருவரும் பேசியபடியே சைக்கிளில் சென்றனர்.

அடுத்த தெரு திரும்பும் வளைவில் வேகமாக வந்து கொண்டிருந்தது ஒரு ஆட்டோ. மெய்யப்பன் ஆட்டோவைக் கவனித்து ஒதுங்கிக் கொண்டான். ஆனால் சுந்தரம் ஆட்டோவில் மோதிக் கீழே விழ, காலில் காயம். ரத்தம் கொட்டியது.

சுந்தரத்தை அருகில் இருந்த மருத்துவரிடம் அழைத்துப் போனான் மெய்யப்பன். காயத்திற்கு மருந்திட்டு அவர்கள் வெளியே வரும்போது மணி ஒன்பது நாற்பது. "நேரமாகி விட்டதே! பத்து மணிக்குத் தேர்வாச்சே!'' என்று பரபரத்தான் மெய்யப்பன்.



பரீட்சை முடிந்து இரும்பி வரும்போது கண்ணன் மாமாவிடம் பணத்தைக் கொடுத்து விடலாம் என்று முடிவுசெய்து சுந்தரத்தோடு பள்ளிக்கு விரைந்தான் மெய்யப்பன். இந்தத் தவறுதான் அணுகுண்டாகப் பற்றிக்கொண்டது!

பரீட்சை முடிந்த கையோடு கண்ணன் மாமாவைத் தேடி விரைந்தான். ''நீ வருவேன்னு பதினோரு மணி வரை காத்துக்கிட்டிருந்தேன். அப்புறம் நானே உங்க வீட்டுக்குப் போய் வாங்கிட்டு வந்திட்டேன்'' என்றார் கண்ணன் மாமா.

நண்பனுக்கு ஏற்பட்ட விபத்தால் குறித்த நேரத்திற்குப் பணம் கொடுக்க இயலாமல் போனதை எண்ணி வருந்தியபடி வீடு திரும்பினான் மெய்யப்பன்.

**வீ**ட்டு வாசலில் அப்பா வளர்க்கும் அன்பு நாய் வீரா சோர்வாய் நின்றுகொண்டிருந்தது. வீரா வீட்டைப் பாதுகாப்பதில் சூரன். வீராவை, உயிருக்கு உயிராய் அன்புகாட்டி நேசித்து வந்தார்

அப்பா.


"வீரா ஏன் வெய்யிலில் நிற்குது?" என்று கேட்டான் மெய்யப்பன். "பால்காரி பால் கொண்டு வந்திருந்தாள். உள்ளே யிருந்த வீரா பாய்ந்தோடி வந்ததில், பால்காரப் பெண் கையிலிருந்த பால் சொம்பில் பட்டு பால் முழுவதும் கொட்டிப் போச்சு. பால்காரி இன்னும் நிறைய வீட்டுக்குப் பால் கொடுக்கணும். அப்பாவுக்கு ஒரே கோபம். வீராவை வெளியில் தள்ளிக் கதவை அடைத்து விட்டார். அது காலையிலிருந்து சாப்பிடாமல் இங்கேயே நிக்குது" என்றாள் அம்மா.

யோசனையுடன் வீட்டுக்குள் சென்றான் மெய்யப்பன்: "அவனைக் கண்டதும் எதுவும் பேசாதே, சொன்னதைச் செய்யாத உதவாக்கரை நாயே, எங்காவது போய்த் தொலை" என்று தன் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டார் அப்பா.

அப்பா கொட்டிய அனல் வார்த்தைகள் அவனைச் சுட்டு எரித்தன. அவனால் மறுநாள் பரீட்சைக்குப் படிக்க முடியவில்லை.

"அப்பா தூங்கிட்டார். உங்கப்பா கோபம்தான் தெரியுமே? எல்லாம் காலையில் சரியாகிடும்" என்று ஆதரவாகப் பேசினாள் அம்மா.

இருந்தாலும் மெய்யப்பனுக்குத் தூக்கமே வரவில்லை. அப்பா அவனை நாலு அடி அடித்திருந்தால் கூட அவன் இப்படி உருகிப் போக மாட்டான். ஆனால் சொற்களா அவை! 'உதவாக்கரை நாயே, போய்த் தொலை' என்றல்லவா திட்டி விட்டார்! இந்தத் திட்டு அவர் வாயிலிருந்து வந்த பிறகு அந்த வீட்டில் இருப்பது சரியல்ல என்ற முடிவுக்கு வந்தான் மெய்யப்பன்.



மெதுவாகக் கதவைத் திறந்து வெளியே வந்தவனுக்கு ஆச்சரியம். காலையிலிருந்து கொலைப் பட்டினி போட்டு வெளியே தள்ளப்பட்ட அருமை வீரா, சாப்பிடக் கூட எங்கும் போகாமல் வீட்டு வாசலிலேயே பழியாய்க் கிடந்தது! இவனைப் பார்த்து விட்ட வீரா வாலை ஆட்டியது. அவனைப் போக விடாமல் சட்டையைப் பிடித்து இழுத்தது. அவனை நிமிர்ந்து பார்த்தது.

## வழி செல்வோம்!



- அடிமை நாட்டில் இருந்தவரை
ஆண்மை எழுச்சி பெறச்செய்து
விடுதலை உணர்ச்சிப் பாடல்களை
வீரம் பொங்கப் பாடியவர்!

- பாரதியார் நம் பாரதத்தைப்
பாட்டால் மீட்டுத் தந்தவராம்!
கூர்அரிவாள் தான் அவர் மீசை!
கோபுரம் போலத் தலைப் பாகை!

- ஏழ்மை நீங்கி நம் நாட்டில்
எல்லோரும் தான் கல்வி கற்று
வாழ்ந்திட வேண்டும் எனச் சொன்ன
வர கவியை நாம் வணங்கிடுவோம்!

- பாப்பா பாட்டு, குயில்பாட்டு,
பக்திப் பாட்டு அவர் தந்தார்!
பூப் போட்டவரைப் போற்றிடுவோம்!
புதுமைக் கவியின் வழி செல்வோம்!

— மதிவண்ணன்

''அப்பா இவ்வளவு தண்டனை கொடுத்தும், எங்கும் போகாமல் பசியோடு வீட்டு வாசலிலேயே கிடக்கிறேனே? இத்தனைக்கும் அவர் என்னை வளர்ப்பவர்தான். பெற்றவர் அல்ல. இருந்தாலும் நான் வீட்டை விட்டு ஓடவில்லை. ஏன் தெரியுமா? பாசமும் நன்றி உணர்வும்தான். ஆனால் உன் நிலை அப்படி இல்லை. இவர் உன்னைப் பெற்ற தந்தை. அன்பையும் பாசத்தையும் பொழிந்து வளர்ப்பவர். உன்னிடம் ஒப்படைத்த பொறுப்பை நீ செய்யத் தவறி விட்டாய். அதை அவரால் தாங்க முடியவில்லை. உன்னால் செய்ய முடியாமல் போனதற்கு ஆயிரம் காரணம் இருக்கலாம். ஆனால் அதையெல்லாம் கேட்கக்கூடிய நிலையில் அவர் இல்லை. அதனால்தான் இப்படி உன்னைத் திட்டியிருக்கிறார். இதற்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா? அவர் நம்மிடம் அதிக அளவுக்கு பொறுப்பை எதிர்பார்க்கிறார். என்ன காரணமோ, நாம் இருவருமே கோட்டை விட்டு விட்டோம். அதன் விளைவைத்தான் அனுபவிக்கிறோம். அன்பையும் பாசத்தையும் பொழியும் அப்பாவுக்கு, தவறு செய்து விட்டவர்களைக் கண்டிக்கிற உரிமை கூட இல்லையா? இப்படி வீட்டை விட்டு வெளில போக முடிவு செய்திருப்பது நியாயமா?'' என்று வீரா அவனைக் கேட்பது போல் தோன்றியது.

மெய்யப்பன் வீராவை அள்ளி எடுத்து மடியில் போட்டுக் கொண்டு வாசலிலேயே உட்கார்ந்தான். இருவரும் எப்போ தூங்கினார்களோ!

"மெய்யப்பராஜா, வீரா..."

மெய்யப்பன் கண்விழித்தான். பொழுது விடிந்து விட்டது. எதிரே கண் கலங்க அப்பா. ஒரு கையால் மகனை அணைத்துக் கொண்டு, மறு கையால் வீராவைத் தடவிக் கொடுத்தார் அப்பா. அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

வீராவுக்கும் கூடத்தான். வாலாட்டத்துடன் செல்ல முனகல் கூடக் கேட்கிறதே!

**வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் மூன்றாவது கதை**



# புகை புகையானது

**கி. கணேஷ்ராம்**

**கா**ற்றில் கலந்து வந்தது மணி யோசை!

"டிங்! டிங்! டிங்! டிங்!டிங்!"

கடையில் 'டீ' ஆற்றிக் கொண்டிருந்த குப்பனுக்கும் அவன் மகன் ராசாவுக்கும் பழகிப் போன பள்ளி மணி ஓசை அது! டீக்கடையை அடுத்துத்தானே அந்தப் பள்ளி இருந்தது.

கண்ணைக் கவரும் டிரிம்மான சீருடை அணிந்து மாணவ மாணவிகள் போவதையும் ஆங்கிலத்தில் பேசி மகிழ்வதையும் பார்க்கும் போது நாமும் படிக்க மாட்டோமா என்று ராசா ஏங்குவான்.

ராசா எட்டு வயதுச் சிறுவன். துறு துறு வென பெரிய விழிகள். கடையில் அப்பா போடும் டீயை விநியோகிப்பவன் அவனே. பள்ளியை அடுத்து இருந்தும் ராசா படிப்பின் வாசனையை அறியாதவன். நாமும் படிக்க வேண்டுமென ஆவல் அவனுள் இருக்கத்தான் இருந்தது. ஆனால் அந்த ஆசை, டீக்கடையில் கொதிக்கும் நீரின் ஆவி போல் காற்றில் கலந்துவிடும்!

"ராசாக்கண்ணு நமக்கெல்லாம் எதுக்கடா படிப்பு? என்னை விட நீ நல்லா டீ ஆத்தற! பெரியவனா ஆன பிறகு இந்தக் கடையையே பெருசா வச்சு நல்லா சம்பாதி. படிக்கிறதெல்லாம் வீண் ஆசை!" என்று தேற்றுவார் அப்பா.

ஆனாலும் அவனுள்ளத்தில் படிக்கத் துளிர்விட்ட ஆர்வம் முடமாகவில்லை. ஏதாவது வாய்ப்புக்கிடைத்தால் படிக்கலாமே என்ற ஆர்வம் அவனுள் கனன்று கொண்டே இருந்தது.

ஒருநாள், பள்ளியில் ஏதோ கமிட்டி மீட்டிங். உடனே பத்து ஸ்பெஷல் டீ போட்டுக் கொண்டு வரும்படி தகவல் வந்தது. ராசாதான் அதைக் கொண்டு போனான். பள்ளிக்குள் காலடி வைப்பது அதுதான் முதல் முறை. "அப்பாடா! எம்மாம் பேரு படிக்கிறாங்க! இவங்க அப்பாவெல்லாம் டீ ஆத்த மாட்டாங்க போலிருக்கு. இவங்கல்லாம் மாடி வீட்லயா இருக்கறவங்க?" என்றவாறு தனக்குள் பேசிக் கொண்டான் ராசா!

டீ கொடுத்த பிறகு, கெட்டில், டம்ளர், டிரேயோடு அவன் திரும்பிக் கொண்டிருந்தான். பள்ளி இடைவேளை நேரமாதலால் மாணவர்கள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தனர். 'பளிச்' வெள்ளைகளுக்கு நடுவில் இவன் மட்டும் ஒட்டுப்

போட்ட அழுக்கு டவுசர், சட்டையுடன். ஆனால் பார்வையில் இருந்த 'பளிச்' மறையவில்லை.

"டேய், யாருடா நீ?" என அதம்பலாகக் கேட்டுக் கொண்டு வந்தான் ஒரு பையன். அவன் ராசாவை விட மூன்று வயது பெரியவனாயிருப்பான். அவன் பின்னே சகாக்கள் இருவர்.

"டேய்! இவன் பக்கத்துக் கடையில டீ ஆத்தற பையன்டா!" - இன்னொருவன் எகத்தாளமாகச் சொன்னான்.

"படிக்கணும்னு ஆசையா இருக்குதா?" மூன்றாவது பையன் கேட்டதும் மற்றவரெல்லாம் சிரித்தனர்.

"ஆமாண்ணே. இந்தப் பள்ளிக்கூடத்துல என்னையும் சேர்த்துப்பாங்களா?" - ராசா மெல்லிய குரலில் ஏக்கத்துடன் கேட்டான்.

"தம்பி... நீ படிக்க வந்தீன்னா எங்களுக்கெல்லாம் யாருப்பா சூடா 'டீ' போட்டுக் கொடுக்கறது?" - முதலாமவன் நக்கலடிக்க எல்லோரும் சிரித்தனர். அதற்குள் மணியோசை கேட்கவே எல்லோரும் சிட்டாய்ப் பறந்தார்கள்.

ராசா அவர்கள் வார்த்தைகளில் புண்பட்டவனாய் வெளியே வந்தான். இதையெல்லாம் அவர்களுக்கு அருகில் நின்றபடி கவனித்துக் கொண்டிருந்தார் மீட்டிங் முடிந்து வெளியே வந்த ஒரு பெரியவர்.

அன்று இரவு அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டு அழுதான் ராசா. "யம்மோவ் அந்தப் பசங்கள்ளாம் இன்னிக்கு என்னை கேலி பண்ணினாங்க."

"நான் சொன்னேனில்ல ராசா? அவுங்கள்ளாம் பெரிய இடம். இனிமே அந்தப் பள்ளிக்கூடப் பக்கம் போகவே போவாத. எந்தப் பசங்க கூடவும் பேச்சு வச்சுக்காத. அவுங்களே கூப்பிட்டா



லும் லட்சியம் பண்ணாம ஓடி வந்திடு" - அவன் தலையைக் கோதிக் கொண்டு அம்மா சொன்னாள். அவள் கண்களும் பொங்கின.

அடுத்த நாள் காலை, ராசாவின் வாழ்க்கையில் புதிய திருப்பத்தை உண்டு பண்ணும் ஆரம்பத்துடன் புலர்ந்தது. அவர்களின் டீக்கடை முன்பு ஒரு ஜீப் வந்து நின்றது. அம்மா வடைக்கு அரைத்துக் கொண்டிருந்தாள். அப்பா டீபோட, ராசா விநியோகித்துக் கொண்டிருந்தான்.

கோட், சூட் போட்ட மனிதர் மூன்று பேர் கையில் பெரிய ஃபைலுடன் ஜீப்பிலிருந்து இறங்கினர்.

ராசாவும் அப்பாவும், அம்மாவும் ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

"உங்க பேர் என்ன?" - ஒருவர் கேட்டார்.


"குப்பன்க" ராசாவின் தந்தை திகில் கலந்த திகைப்புடன் சொன்னார்.

"நாங்க 'நேரு நற்பணி மன்றத்திலிருந்து வறோம். வருடா வருடம் நாங்க படிக்க வசதியில்லாத; வறுமை நிலையில் வாழும் சிறுவரைத் தேர்ந்தெடுத்து அவங்களை மேல் படிப்பு வரை படிக்க வைக்கிறோம், இவன் உங்க பையன்தானே?" - ஒருவர் கேட்டார். "ஆமாங்க. பேரு ராசா. நம்ம கடையிலேயே ஒத்தாசையா இருக்கான்" - ராசாவின் அப்பா சொன்னார்.

"இந்த வருஷம் உங்க பையனைப் படிக்க வைக்க இருக்கோம். உங்களுக்கு மகிழ்ச்சிதானே?" - இன்னொருவர் கேட்டார்.

குப்பனுக்கு மகிழ்ச்சி மடை திறந்த வெள்ளமாய்ப் பாய்ந்தது. ஏதோ ஒரு மூலையில் ஒடுக்கப்பட்டுக் கிடந்த ஆசைகள் பட்டாம்பூச்சிகளாய்ப் பறந்து மனக் கண்முன் நிழலாடின. தன் மகன் படிக்கப் போறானா? அவர் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டார்.

ஆனால் ராசாவின் நிலையோ வேறாக இருந்தது. மகிழ்ச்சி ஓடிப் போயிருந்தது. எண்ணங்கள் அவனை விரட்டின. பள்ளிக் கூடத்துல என்னைக் கேலி பண்ணின பசங்க எவ்வளவு பேரு இருப்பாங்க? என்னை ஒரு மாதிரிப் பாப்பாங்க. எல்



லோரும் டீக்கடைப் பொடியன்னு கேலி பண்ணுவாங்க. மாட்டேன், பள்ளிக்குப் போகமாட்டேன். அப்பாவோட டீக்கடையிலேயே இருப்பேன். - அவன் பலமாகத் தனக்குள் கூறிக் கொண்டான்.

"என் மகனுக்கும் படிக்கணும்தான் ஆசைங்க. நன்றிங்க," என்றபடியே அப்பா அவர்கள் காட்டிய நோட்டில் மிகச் சிரமப்பட்டு பேனாவைப் பிடித்துக் கையெழுத்துப் போட்டார்.

"எந்தப் பள்ளிக்கூடமுங்க?" என்று அப்பா வினவியதற்குக் கிடைத்த பதிலில் ராசா மேலும் அதிர்ந்து போனான். அவனை உதாசினப்படுத்திய அதே மாணவர்கள் படிக்கும் பள்ளியேதான்! அவர்கள் கடைக்குப் பக்கத்திலிருக்கும் அதே பள்ளிக்கூடம்தான்! அவனுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

தந்தையும் மகனும் வெவ்வேறு மன நிலையில் அன்று வீடு திரும்பினர்.


இயல்பிலேயே கூச்ச சுபாவமான ராசா, தான் அந்த மாணவர்களுடன் பழகுவதை மனத்தில் நினைத்து கூனிக் குறுகினான். அவர்கள் இவனை ஏளனப்படுத்திய நிகழ்ச்சி அவனுள் விசுவரூபம் எடுத்தது. இப்படிக் கேலி பண்ணும் மாணவர்களுக்கு இடையே இருந்து படிப்பதைவிட டீக் கடையே தேவலாம். ஆனால் அதற்கு அம்மாவும் அப்பாவும் சம்மதிக்கமாட்டார்கள். இதைத் தவிர்க்க ஒரே வழி வீட்டை விட்டு வெளியேறுவதுதான் என்ற முடிவுக்கு வந்தான் ராசா.

---

**"நான் 'கண் டாக்டர்' வீட்டுப் பையன்.. நீ?"**

**"நான் 'கண் டக்டர்' வீட்டுப் பையன்!"**

**— சக்தி. சரவணன்**



தன் முடிவை அவன் செயல்படுத்த வீட்டை விட்டுக் கிளம்பும்போது இரவு மணி பதினொன்று. எங்கே போகிறோம் என்ற தெளிவு இல்லாமல் கால் போன போக்கில் நடந்தான்.

வழியில் ரயில்வே பாதை. கதவை அடைத்திருந்தார்கள். கார்களும், பஸ்களும், சைக்கிள்களும் காத்துக் கிடந்தன.

"தம்பி, உன் பேர் ராசாதானே? எங்கேப்பா இப்படி?" - காரில் உட்கார்ந்திருந்த பெரியவர் ஒருவர் கேட்டார். பள்ளியில் மாணவர்கள் அவனைக் கேலி பண்ணின போது கவனித்த அவரேதான்!

ராசா பதில் கூறத் தெரியாது குழறினான்.

"தம்பி, உன்னுடைய படிக்கும் ஆர்வத்தைக் கண்டு உனக்குப் படிக்க வாய்ப்புக் கொடுக்க ஏற்பாடு பண்ணியிருப்பவன் நான்தான். அடுத்த வாரம் பள்ளிக்கூடம் போகணுமே?"

ராசா, தன் மனக் குமுறல்களைக் கொட்டினான்.

"ஐயா, அவங்க பண்ற கேலியில் நான் உருக்குலைந்து போயிட்டனுங்க. எனக்கு வேண்டாம் படிப்பு. என்னை விட்டுடுங்க" என்று அழுதான்.

சில விநாடிகள் யோசித்தார் பெரியவர்.

"தம்பி, என்னோட வீட்டுக்கு வா: பேசுவோம். காலையில் உன் மனம் மாறலைன்னா உன்னை நான் கட்டாயப்படுத்த மாட்டேன். நானே உங்கப்பா அம்மாவிடம் சொல்லி சமாதானப்படுத்திடறேன். என்ன தம்பி?" என்று அவனைக் காரில் ஏற்றிக் கொண்டு வந்தார் பெரியவர்.

பெரியவர் தன்னுடைய அறையிலேயே அவனைப் படுக்க வைத்துக் கொண்டார். அவரது கட்டிலுக்கு அருகே தரையில் உறங்கினான் ராசா. காலையில் எழுந்ததும் காப்பி வந்தது.

"தம்பி இன்னும் அரை மணியில் கிளம்பலாம். அதுவரை இந்த நோட்டுப் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிரு" என்று சில பழைய நோட்டுகளை அவனிடம் தந்தார் பெரியவர். ராசா ஒவ்வொரு பக்கமாகத் திருப்பிக் கொண்டு வந்தான். "டேய் ஒட்டடைக் குச்சி!" என்று நோட்டில் பல இடங்களில் கனமான மையில் எழுதப்பட்டிருந்தது. ஒரு பக்கத்

தில், "ஒட்டடைக் குச்சி அண்ணாச்சி; அழுக்குத் துடைப்பம் என்னாச்சு?" என்று பாடலே எழுதப்பட்டிருந்தது.

ஒரு பிளாஸ்டிக் உறையைத் தந்தார் பெரியவர். அதில் நாலைந்து சின்னச் சின்ன சட்டைகள். எடுத்துப் பிரித்துப் பார்த்தான். எல்லாச் சட்டைகளின் முதுகுப் பக்கத்திலும் நீலம் அல்லது சிவப்பு மையால் "இன்டு" குறி போடப்பட்டிருந்தது.

"என்ன தம்பி பார்க்கிற? எங்கப்பா குப்பை வண்டி ஓட்டும் தொழிலாளி. எனக்கோ படிக்க வேண்டுமென்று பயங்கரமான வெறி. வசதியையெல்லாம் பார்த்துக் கொண்டா இந்த மாதிரி ஆசை ஏற்படுது? வசதி இன்மையைக் காரணம் காட்டி அப்பா என்னைப் பள்ளிக்கு அனுப்ப மறுத்துவிட்டார். நானும் அவருடன் வேலைக்குப் போவேன். சில வீடுகள்ள ஒட்டடை அடிப்பேன். கழிப்பறை சுத்தம் பண்ணுவேன். ஒரு பள்ளி ஆசிரியர் வீட்டில் ஒட்டடை அடிச்சப்ப கூரையில் இருந்த எலி வளைக்குள் ஒரு தங்கச் சங்கிலி கிடைச்சது. அதை நாணயமா அவருகிட்ட கொடுத்தேன். என்னைப் பாராட்டிய அவர் தன்னுடைய செலவில் என்னைப் படிக்க வைத்தார். அவர் போட்ட பிச்சைதான் இந்த வாழ்வு" பெரியவர் தொடர்ந்தார்.

"நான் உயரமா இருப்பேன். முதல் வகுப்பில் சேர்ந்தபோது எனக்குப் பத்து வயது. பசங்க சும்மா இருப்பாங்களா? குப்பு வண்டிக்காரன் பையன் தங்களோட வந்து படிக்கிறதாவது என்று இல்லாத தொந்தரவுகளையெல்லாம் கொடுத்தாங்கள். சட்டையில் இங்க் அடிப்பாங்க. கொண்டு போற பழைய சாதத்துலே மணலைக் கலந்துடுவாங்க. எல்லாத்தையும் நான் தாங்கிக்கிட்டு என் குறிக்கோளை மட்டும் நினைச்சுக்கிட்டு தீவிரமா படிச்சேன். உயர்ந்தேன். என் பழைய நிலைமையை மறந்து விடக் கூடாது என்றுதான் இங்க் அடித்த சட்டைகளையும் கேலி செய்து எழுதிய நோட்டுகளையும் வச்சிருக்கேன்."

பெரியவர் சற்று நிறுத்தி விட்டு மறுபடி தொடர்ந்தார்."

"இப்போ சொல்லு தம்பி? மத்தவங்க கேலி பண்ணுவாங்க என்பதற்காக நீ படிக்காம இருந்து கடைசி மூச்சு இருக்கிற வரை டீ ஆத்தப் போறியா? உன்னிடம் ஆர்வமும், படித்து உயர வேண்டுமென்ற துடிப்பும் இருக்கு. இப்போ படிக்க வாய்ப்பும் கிடைச்சிருக்கு. இதையெல்லாம் பயன் படுத்திக்கிட்டு உயரப் போறியா? இல்லே, புலியாகப் பிறந்தும் மற்றவர்களின் கேலியைத் தாங்க முடியாத ஆடாகவே இருக்கப் போறியா?"

பெரியவர் முடித்துவிட்டு ராசாவைப் பார்த்தார்.

"ஐயா நான் புலிதான். புலியாகத்தான் இருப்பேன். எத்தனை வகையான தடைகள் வந்தாலும், எத்தனை கேலி பண்ணினாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் புலியென்பதை உணர்த்திக் காட்டுவேன்" என்றான் ராசா.



## வாழ்த்துகிறோம்!

**'பலாப்பழம்', 'அப்பாவின் ஆசை' போன்ற முழு நேர மேடை நாடகங்களைக் குழந்தைகளுக்காகப் படைத்தவரும், நூற்றுக்கணக்கான பாடல்களைக் குழந்தைகளுக்காக எழுதியவருமான கலைமாமணி திருச்சி பாரதன் அவர்களுக்கு அவரது நாடகப் பணியைப் பாராட்டி திருச்சியில் அண்மையில் நடைபெற்ற விழாவில் 'நாடகப் பாவலர்' என்ற விருதை தமிழண்ணல் அவர்கள் அளித்தார். கவிஞரை நாமும் பாராட்டி மகிழ்வோம்!**



# பூஸின் ஞாபகம்!

மியாவ், மியாவ் சத்தத்தைக் கேட்டுத் திரும்பினேன். தாய்ப் பூனை குட்டி போடுவதற்காக அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தது. ஒரு மூலையில் அட்டைப் பெட்டியில் துணிவைத்து பூனை இருப்பதற்கு ஏற்பாடு செய்தேன். இதை எதிர் பார்த்ததைப் போல் பூனை அதில் போய் உட்கார்ந்து கொண்டது. எனக்கு பூனைக்குட்டி என்றால் ரொம்ப பிடிக்கும். அப்பாவுக்கு பூனையைக் கண்டாலே அலர்ஜி. அப்பாவிடம் பூனைகள் போகாமல் பார்த்துக் கொண்டேன்.

வெள்ளை, கறுப்பு, சாம்பல் என பல வண்ணங்களில் என்னிடம் பூனைகள் உள்ளன. எல்லாம் இந்த தாய்ப் பூனையின் குட்டிகள்தான்!

பூஸ் அல்லது பூஸிக்குட்டி என்று கூப்பிட்டால் போதும். எங்கிருந்தாலும் என் குரலைக் கேட்டு ஓடி வந்து கால்களைப் பிடித்துக் கொண்டு ஏற முயற்சிக்கும்.

ஒரு நாள் நான் பள்ளிக்கூடம் போகும் போது என் பின்னாலேயே பூஸ் வந்து கொண்டிருந்தது. நான் எவ்வளவோ விரட்டியும் அது கேட்பதாக இல்லை. கடைசியில் அதைத் தூக்கி வீட்டில் போட்டுப் பூட்டிவிட்டுப் போனேன்.

பூஸ் என்னை விட்டுக் கொஞ்ச நேரம் கூட இருக்காது. இரவில் என்னுடன் வந்து படுத்துக் கொள்ளும். மற்ற பூனைகளை என்னிடம் வர விடாது. இதுதான் ராஜாவாம்! தேங்காய்த் துருவல் என்றால் ரொம்பவும் பிடிக்கும் பூஸுக்கு.

பூஸ் குட்டியின் விஷமச் சேட்டைகள், விளையாட்டுகள் தொடர்ந்து கொண்டிருந்த போது என் அப்பாவுக்கு டிரான்ஸ்பர் ஆனது. எனக்கோ பூனைக் குட்டிகளை விட்டுச் செல்ல வேண்டுமே என்று கவலையாக இருந்தது. அவைகளும் அதைப் புரிந்து கொண்டு என்னையே சுத்திச் சுத்தி வந்தன. ரொம்ப வேதனையோடு அவைகளைப் பிரிந்து ரயிலில் பயணமானேன்.

என் பூனைக் குட்டிகளின் நினைவு அடிக்கடி வந்தது. புதிய பள்ளியில் சேர்ந்தேன். ஒரு நாள் பள்ளி விட்டுத் திரும்பும் போது மழை பெய்யத் தொடங்கியது. நான் நனைந்து கொண்டே வீடு வந்து சேர்ந்தேன். என் வீட்டு வேலிக்கருகில் மழையில் நனைந்தபடி சின்ன பூனைக்குட்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. அதைப்


பார்த்தவுடன் பூஸியின் ஞாகபம் வந்தது. அப்பாவுக்குப் பயந்து கொண்டு பூனையைத் தூக்காமல் வீட்டிற்குள் சென்றேன். சிறிது நேரம் கழித்து எட்டிப் பார்த்தேன். பூனை அதே இடத்தில் உட்கார்ந்திருந்தது. பார்க்கப் பாவமாக இருந்தது. யாருக்கும் தெரியாமல் பாலை எடுத்துப் பூனைக்கு வைத்தேன். வேகமாகக் குடித்து முடித்தது.

நான் பூனையைத் தூக்கி துணியால் துடைத்துக் கொண்டிருக்கும் போது, அப்பா நனைந்தபடியே வந்தார். என் கையில் இருந்த பூனையைப் பார்த்ததும் "பூனையைத் தொடக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல?" என்று அதட்டினார். நான் பூனையை நனையாதபடி வெளியில் உட்கார வைத்துவிட்டு உள்ளே போனேன். அப்பா தலையைத் துடைத்துக் கொண்டே "என்ன குளிரு! சூடா காப்பி போடு, அடுப்புல விறகை பற்றவை, குளிர் காயணும்" என்றார் அம்மாவிடம்.

சிறிது நேரம் கழித்து, நான் அப்பாவிடம் மெதுவாக "அப்பா உங்களுக்கே இப்படிக் குளிரத் தாங்க முடியலையே! பாவம் வாயில்லா ஜீவன். அது மழைல நனைஞ்சிட்டே யிருந்தா எப்படி இருக்கும்?" என்றேன். அப்பா அமைதியாக இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து "மதி, உன் பூனையை உள்ளே தூக்கிட்டு வா" என்றார்.

நான் சந்தோஷத்துடன் ஓடிப் போய்ப் பூனையைத் தூக்கிட்டு வந்தேன். இப்ப அப்பாகூட பூனையை ரொம்ப அன்பா கவனிக்க ஆரம்பிச்சுட்டாங்க!

— பி.எம். கீதாஸ்ரீ, சென்னை - 28.



# ஓய்வு தேவையா?

ராக்பெல்லர்' என்ற அமெரிக்க கோடீஸ்வரர் ஒரு தடவை விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் மிகவும் முதுமைப் பருவத்தில் இருந்தார்.

ராக்பெல்லருக்கு அருகில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தான்.

"ஐயா, தாங்கள்தான் போதுமான அளவு செல்வம் சேர்த்து விட்டீர்களே? உங்களுக்கு எந்தவிதக் கவலையோ தொல்லையோ இருக்க முடியாதே? இவ்வளவு முதுமையிலும் இத்தனை கறுகறுப்பாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்களே! இது தேவைதானா? ஓய்வு எடுத்துக் கொண்டு ஓரிடத்திலிருந்து அமைதியாகக் காலத்தை ஓட்டலாம் அல்லவா"

"நல்ல கேள்வி" என்ற ராக்பெல்லர் சிரித்துக் கொண்டே, "தம்பி இப்போது நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோமே, இந்த விமானத்தைத்தான் வான உச்சிக்குக் கொண்டு வந்து விட்டார்களே...? இனி இந்த இயந்திரங்களை நிறுத்தி விட்டால் என்ன?" என்று கேட்டார்.

"அது எப்படி முடியும்? இயந்திரங்களை நிறுத்தி விட்டால் நமது விமானம் விபத்துக்குள்ளாகித் தரையில் மோதி விடுமே? நாம் சாக வேண்டிய நிலை அல்லவா நேரிடும்'? என்று பரபரப்புடன் பதில் சொன்னான் இளைஞன்.

ராக்பெல்லர் சிரித்துக் கொண்டே "தம்பி விபத்து என்ற சொல் காதில் விழுந்த உடனே நீ எப்படி பயப்படுகிறாய்...? நமது வாழ்க்கையும் ஒரு விமானப் பயணம் போன்றதுதான். நாம் என்று உழைப்பை நிறுத்தி விடுகிறோமோ அன்றே நமது உடலும், மனமும் சீர் கெட்டு விடும். நமது மனத்தைவிட்டு மகிழ்ச்சி பறந்து விடும். நமது உடலை விட்டு ஆரோக்கியம் ஓடிப் போய் விடும். எந்த நிமிடமும் மரணம் என்ற விபத்துக்கு நாம் உள்ளாக நேரிடும்" என்று சொன்னார் 'ராக்பெல்லர்.

— சிவரஞ்சன்

**நவரத்தினங்கள், வெ. நல்லதம்பி, பக்.158, ரூ. 35/- துரை ராமு பதிப்பகம், 6. பிள்ளையார் கோவில் தெரு, பழைய தாம்பரம், சென்னை-45.**


வானொலி அண்ணாவாக இருந்து சிறுவர்களுடன் நேரில் பழகும் வாய்ப்பைப் பெற்ற ஆசிரியரின் மணியான ஒன்பது கதைகள் இதில் உள்ளன. ஒவ்வொரு கதையும் அவசியமாக அறிந்து கொள்ள வேண்டிய ஒரு நன்னெறியைப் போதிக்கிறது. தெளிவான கதை கூறும் நடை. பரிசளிக்க ஏற்ற தயாரிப்பு.

**மகிழ வைக்கும் மந்திரக் கதைகள், எ.சோதி, பக்.140, ரூ.30/- நன்மொழிப் பதிப்பகம், 41. கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி 605 003.**

சிறுவர் இலக்கிய உலகில் தனக்கென்று தனி இடத்தைப் பிடித்து வைத்துள்ள ஆசிரியரின் மந்திரத் தந்திரக் கதைகளின் தொகுப்பு இது. எல்லாமே கேட்ட கதைகள்தான். இருப்பினும் இவர் அதை தந்துள்ள முறை புதிய விறுவிறுப்பைத் தருகிறது. ஒரு படம்கூட இல்லாதது மன வருத்தத்தைத் தரக்கூடியதே!

**வியக்க வைக்கும் வேடிக்கைக் கதைகள், எ.சோதி, பக்.128, ரூ.30/- நன்மொழிப் பதிப்பகம், 41. கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி 605 003.**

படிக்கும்போதே மகிழ வைக்க வல்ல 9 கதைகள், எல்லாமே புதுப் பொலிவுடன் மயக்க வைக்கின்றன. குழந்தைகளுக்குக் கதைகூறத் தெரியவில்லை என்று வருந்துவோருக்கு இது பெரிதும் பயன்படும். கதை கூறி மகிழ்விக்கும் பாட்டிகளுக்குப் போட்டியாக இந்த நூல் அமைந்துள்ளது. தரமான, பயனுள்ள படைப்பு.



# உங்கள் நூலகம்

**சுவையான சாகசச் சம்பவங்கள், பாகம் - 2, மணிமேகலை பிரசுர ஆசிரியர் குழு, பக்.112 ரூ.21/- மணிமேகலைப் பிரசுரம், 4.தணிகாசலம் தெரு, தியாகராயநகர், சென்னை - 17.**

சாகசச் செயல்கள் எல்லா வயதினருக்கும் சுவையூட்டுபவை; படிக்கத் தூண்டுபவை. இந்தத் தொகுப்பில் 21 உலகப் புகழ் பெற்ற சாகசங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தமிழுக்குப் புதுமையான தொகுப்பு. எல்லோரையும் மகிழ்விக்கக் கூடியவை.

**சிவபாரதியின் சிறுவர் கதைகள், அரு.வி. சிவபாரதி, பக்.64, ரூ.11/- கற்பகம் புத்தகாலயம், 18. ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 17.**

புதிய புதிய கதைக் களங்களை மையமாக வைத்து ஒரு அறிவுரையையும் வலியுறுத்தும் 12 சிறுகதைகளின் தொகுப்பு இது. ஒவ்வொரு கதையின் சிக்கலுக்கும் அதிலேயே தீர்வு தரப்பட்டு மனதில் பதிய வைக்கிறது. பயனுள்ள தொகுப்பு. அடுத்த பதிப்பிலாவது படங்களைச் சேர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

**விளையாட்டு விநோதங்கள், வாண்டு மாமா, பக்.108, ரூ.24/- கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, சென்னை- 600 107.**

வாண்டு மாமா + கங்கை புத்தக நிலைய வெளியீடு என்றாலே புதுமையை எதிர்பார்க்கலாம். நம் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. விளையாட்டுகள் தோன்றிய கதையிலிருந்து தொடங்கி, ஒவ்வொரு வகை விளையாட்டிலும் என்னென்ன சுவையான சம்பவங்கள் நடந்துள்ளன என்பதைத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர். புகைப் படங்களும், ஓவியங்களும், நிகழ்ச்சிகளும் நூலைக் கீழே வைக்க இடமளிக்காமல் படிக்கத் தூண்டுகின்றன. அருமையான தயாரிப்பு.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக ஆசிரியர் பொறுப்பேற்று, அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624;
சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; பேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-. ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.


பொன்விழா
அணிவகுப்பில்
பங்கேற்று வந்தோம்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka